கம்பன் மணி மலர்

பிங்கள 1978



கம்பன் கழகம் – காரைக்குடி

கம்பன் மணி மலர்

1978

பிங்கள—பங்குனி 9 முதல் 12 வரை

1978 மார்ச்சு 22 முதல் 25 வரை நிகழ்ந்த

40 ஆவது கம்பன் திருநாள் வெளியீடு.

கம்பன் கழகம், கம்பன் மணி மண்டபம், காரைக்குடி - 2.

உள்ளுறை

INDEX FOR ADVERTISEMENTS

முன்னுரை

திடமுடைய கலைகளெனும் செழுநதிகள் புகமண்டும்
கடலெனவே திகழ்வானை, கம்பன்எனும் பெரியானை,
இடமுடைய உலகெல்லாம் ஏத்துபுகழ் உடையானை,
உடல்படிய நிலம்பணிந்து உளம்படிய வாழ்த்துவெனே !

கம்பன் ஓர் உலக மகாகவி ; கவிச்சக்கரவர்த்தி. காப்பிய வானில் கதிரவனாய் நின்று ஒளிர்பவன். இவன் கல்லாத கலையும் வேதக்கடலும் உலகில் இல்லை எனலாம். ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்தவன் எந்தைபிரான் கம்பன்.

முத்தரையரிடமிருந்து தஞ்சைப் பகுதியை மீட்டுச் சோழப் பேரரசை நிறுவிய விஜயாலயன் காலத்தில் மிளிர்ந்தவன் கம்பன். விஜயாலயன் மகன், கோதண்டராமன் எனப் பெயர் சூடிக்கொண்ட ஆதித்தன் (கி. பி. 871—907) காலத்தில், அவனால் பெரிதும் மதிக்கப்பெற்றவனாய் விளங்கியவன் கவிச்சக்கரவர்த்தி.

கம்பனைப் பெற்ற தந்தையினும் பேணிக் காத்து நின்றவர் சடையப்ப வள்ளல். இன்று கதிராமங்கலம் என விளங்கும் வெண்ணெய் நல்லூர்தான் சடையப்பர் வாழ்ந்த வளநகர். கம்பனின் பல்துறைப் புலமையும், எல்லையிலாக் கவிதா சன்னதமும் கற்றோரையெல்லாம் ஈர்த்து நின்றன. முடியுடைத் தார்வேந்தர்களும் ரசிகப் பெருமக்களும், கம்பனைப் பெரிதும் மதித்துப் போற்றுவாராயினர்.

கம்பனின் பேராற்றற் பெரும்புலமைக்கு என்றும் கட்டியங் கூறிக்கொண்டு விளங்குவது அவன் அருளிய இராமாவதாரம் என்னும் இராம காதை ! தமிழ்மொழியின் வளத்திற்கும், தமிழர் தலை நிமிர்வுக்கும் ஒப்பற்ற உதவியாய் நின்று நிலவுவது கம்பராமாயணம். தமிழ் மொழியின் தனிப்பெரும் காப்பியத்தை, என்னப்பன் கம்பன், சடையன் பதியாம் வெண்ணெய் நல்லூரில் அரங்கேற்றினான். மன்னர்களும், மறையோர்களும், ரசிகப் பெருமக்களும், அறம் பேணும் பொதுமக்களுமாக நிறைந்திருந்த கண்ணியம் நிறைந்த அவைக்களத்திலே அரங்கேற்றம் நடைபெற்றது. பவித்திரமான அக்காப்பியம் அரங்கேறிய புனித விழா ஒரு பெருந்திருவிழாவாக, ''நாவலோ, நாவல் !'' என்று நடந்திருக்க வேண்டும்.

சகாப்தம் 807 ; கலியாண்டு 3986-க்குச் சரியான விசுவாவசு—பங்குனி 4ஆந் தேதி, (கி. பி. 886—பெப்ருவரி—23) புதன்கிழமை அஸ்த நட்சத்திரமே இராமாவதாரம் அரங்கேறிய பெருநாள். அன்றுதான் என்னுடையன் கம்பனை, ''கவிச்சக்கரவர்த்தி'' என்று அறிவுடையுலகம் மனமாரப் பாராட்டி விருதளித்து மகிழ்ந்தது.

கம்பன் பிறந்த நாளை நாமறிய எவ்வகைச் சான்றுகளுமில்லை. ஆனால், ''கவிச்சக்கரவர்த்தி'' பிறந்த நாளை நாம் நன்கறிவோம். பங்குனி-அத்த நாளில்தானே ''கவிச்சக்கரவர்த்தி'' பிறந்தான்! எனவே, இராமாவதாரம் அரங்கேறியதும் ''கவிச்சக்கரவர்த்தி'' என்ற விருதுப் பெயரைக் கம்பன் ஏற்றருளியதுமான அந்தப் பங்குனி அத்த நாளையே கம்பன் திருநாளாக-ஜன்ம நட்சத்திரமாக - ஏற்று, விழா எடுத்து வருகிறோம். மகம், பூரம், உத்தரம் ஆகிய முதல் மூன்று நாள்களில் காரைக்குடியில் உள்ள கம்பன் மணிமண்டபத்திலும், பங்குனி அத்த நாளில் நாட்டரசன்கோட்டையில் கவிச்சக்கரவர்த்தி சமாதிகொண்டு எழுந்தருளி அருள் சுரக்கும் கம்பன் பள்ளிபடைத் திருக்கோயிலிலும், தூய இலக்கியப் பெருவிழாவாகக் கொண்டாடி மகிழ்கிறது கம்பன் கழகம். தமிழகத்திலும், மலேசிய நாட்டிலும் கம்பன் கழகங்கள் பல தோன்றி விழா எடுப்பதுடன் அருமையாகக் கம்பன் பணியும், தமிழ்ப்பணியும் செய்து வருகின்றன. அவற்றின் முகவரிகளை இம்மலரில் வெளியிட்டு மகிழ்கிறோம்.

இவ்விழா, எவ்விதமான சாதி, சமய, மொழி வேறுபாடின்றி யாவரும் கலந்து மகிழும் அருமையுடையதாகும். புலவர்களும், கலைஞர்களும், கவிஞர்களும், திறனாய்வாளர்களும், ரசிகர்களுமாக ஆயிரக்கணக்கானவர்கள் ஆண்டுதோறும் வந்து கலந்து கம்பன் புகழ் பாடியும், கம்பன் புகழ் பருகியும், பெருமை செய்கின்றனர்.

கம்பன் திருநாட்செலவு ஆண்டுக்காண்டு கூடிக்கொண்டே வருகிறது. முப்பத்தொன்பது ஆண்டுகட்கு முன் முந்நூற்றைம்பது ரூபாய் அளவில் தொடங்கிய கம்பன் திருநாளின் செலவு ஆண்டுதோறும் வளர்ந்து, எத்துணைச் சிக்கனமாக நடத்தினும், ரூபாய் பதினையாயிரத்திற்குமேல் உயர்ந்துவிட்டது. விழாச் செலவுக்காக இதுவரை யாரையும் நன்கொடை கேட்டு அணுகியதில்லை. நிலையறியும் உடனுறை நல்லன்பர்கள் தாங்களாகவே முன்வந்து உவந்தளிக்கும் நன்கொடை, செலவின் ஒரு சிறு பகுதியையே ஈடு செய்கிறது.

இந்நிலையில் கம்பன் மணிமலர் என்ற பெயரில் ஒரு மலர் வெளியிடுவதென்றும், அதில் விளம்பரங்கள் வெளியிடுவதென்றும் முடிவு செய்யப்பெற்றது. அதற்குக் கம்பன்பால் அன்பும் அடியேன் பணியின்பால் பரிவும் உள்ள அன்பர்கள் பலர் விளம்பரங்கள் உதவி இப்புனிதப் பணிக்கு ஆக்கம் தர முன்வந்தனர். அன்றியும், அறவுள்ளமும், கம்பராம பக்தியும் நிரம்பிய அருங்குணச் செல்வர் ஒருவர் ரூபாய் பத்தாயிரத்தை, ஐம்பதாண்டு - பத்து சத வட்டியுள்ள வைப்பு நிதியாக-காரைக்குடிக் கம்பன் கழகத்தின் பேரால் வங்கியில் முதலீடு செய்து, ஆண்டு தோறும் ஏற்படும் வட்டித்தொகையைக் கம்பன் திருநாட் செலவுக்குப் பயன்படுத்திக்கொள்ளும் படி பணித்துள்ளார்கள். தம் பெயரை வெளியிட விரும்பாமையால் இங்கு அவர்கள் பெயரைக் குறிப்பிட்டு நன்றி கூற இயலாதவனாக இருக்கிறேன்.

இவர்கட்கெல்லாம் எளியேன் என்ன கைம்மாறு இயற்றவல்லேன்? என்னப்பன் கம்பனும், அவன் பரவிடும் முழுமுதற் பரம்பொருளும், இவ் அறவோர்கட்கும், இவர்களின் முயற்சிகட்கும், தொழில்துறை வாணிபங்கட்கும், எல்லா நலன்களையும் வளங்களையும் அருளிக் காத்தருள வேண்டுமென்று மன மொழி மெய்களால் வணங்கி வாழ்த்துகிறேன்.

எல்லா வகையாலும் முன்னரும், பின்னரும், கம்பன் திருநாளுக்கும், கம்பன் திருப்பணிகட்கும் உதவிய - உதவி வருகிற - அறவுள்ளம் படைத்த பெரியோர்கள் அன்பர்கள் யாவர்க்கும் என்றும் மறவா நன்றியுடன் பணிவார்ந்த வணக்கம் செலுத்தி மகிழ்கிறேன்.

கம்பன் மணிமண்டபம்,
காரைக்குடி - 623 002
22, மார்ச் 1978.

அன்பும் பணிவுமுள்ள,
கம்பன் அடிப்பொடி
செயலாளன், கம்பன் கழகம்,

கம்பன் கழகங்கள் - முகவரியுடன்

1. கம்பன் கழகம்,
கம்பன் மணிமண்டபம்,
காரைக்குடி - 623 002.
[தொலைபேசி : 600 & 396]

2. கம்பன் கழகம்,
கம்பன் அருட்கோயில்,
நாட்டரசன்கோட்டை - 623 556.

3. கம்பன் கழகம்,
ஆமருவியப்பன் கோயில்,
தேரழுந்தூர்,
மாயூரம் வழி.

4. கம்பன் கழகம்,
சீராமவிண்ணகரம்,
கள்ளிப்பட்டி - 638 505.
Via- Erode R M S.
[தொலைபேசி : 44]

5. கம்பன் கழகம்,
நாமக்கல் - 637 001,
சேலம் மாவட்டம்.

6. கம்பன் கழகம்,
சீதா கல்யாண மண்டபம்,
கோபிச்செட்டிப்பாளையம் - 638 452.
[தொலைபேசி : 84]

7. கம்பன் கழகம்,
116, முத்துமாரியம்மன்கோயில் தெரு,
புதுச்சேரி - 605 001.
[தொலைபேசி : 509]

8. கம்பன் கழகம்,
10, பெரிய அக்ரகாரம்,
ராசிபுரம் - 637 408,
சேலம் மாவட்டம்.

9. கம்பன் கழகம்,
மணி பீடர் பள்ளி,
கோயமுத்தூர் - 641 037,
(தொலைபேசி : 35851)

10. கம்பன் கழகம்,
4, பி.சாலை ரோடு,
சேலம் - 636 001.
[தொலைபேசி : 3501]

11. கம்பன் கழகம்,
795, அண்ணா நகர்,
சென்னை - 600 040.
[தொலைபேசி : 613275]

12. கம்பன் கழகம்,
சித்ரா ஜவுளி ஸ்டோர்ஸ்,
புதுக்கோட்டை - 622 001.
[தொலைபேசி : 650]

13. நெல்லை மாவட்டக் கம்பன் கழகம்,
கம்பராமாயண மண்டபம்,
1, பெருமாள் தெற்கு மாட வீதி,
பாளையங்கோட்டை - 627 002.

14. மலேசியக் கம்பன் கழகம்,
64, Jalan Hang Jebat,
MALACCA, (Malaysia)
(Phone 3206)

15. கம்பன் கழகம்,
K T R Perfumers,
திருவாரூர் - 610 108.

16. கம்பன் கழகம்,
''அன்பு நிலையம்''
55, பெரிய தெரு,
பட்டுக்கோட்டை - 614 601.
[தொலைபேசி : 75]

17. கம்பன் கழகம்,
62, கச்சேரித் தெரு,
திருப்பத்தூர் - 635 601.
வடஆர்க்காடு மாவட்டம்.

18. கம்பன் கழகம்,
1, மாணிக்கம்பிள்ளை தெரு,
சிவகங்கை - 623 560.

19. கம்பன் கழகம்,
அனுமார் கோயில்,
பரமக்குடி - 623 707.

20. கம்பன் கழகம்,
13, E.B.காலனி,
காந்தி நகர், வேலூர் - 632 006.
வடஆர்க்காடு மாவட்டம்.

21. கம்பன் கழகம்,
8, சிங்கார முதலி தெரு,
நல்லியக்கோடன் நகர்,
திண்டிவனம் - 604 002.

22. கம்பன் விழாக்குழு,
திருச்சித் தமிழ்ச் சங்கம்,
மேலரண் சாலை,
திருச்சி - 620 008.

23. கம்பன் கழகம்,
8, இராஜ வீதி,
காஞ்சிபுரம் - 631 502.

24. கம்பன் கழகம்,
தஞ்சாவூர் - 613 001.

25. கம்பன் கழகம்,
மதுரை.

26. கம்பன் கழகம்,
அவிநாசி - 638 654

27. கம்பன் கழகம்,
கவுந்தப்பாடி - 638 455.
Via—Erode, R M. S

28. கம்பன் கழகம்,
23, காமராஜர் ரோடு,
பொள்ளாச்சி - 642 002.

64-3

கம்பராமாயணத்தில் ஒருமைப்பாடு

எஸ். மகராஜன்

இராமாயணம் ஒரு எளிய, இனிய கதை. இந்திய நாட்டிலே பிறந்த இதிகாசமாக இருந்தாலும், அது பிற நாட்டவரையும் பெரிதும் கவர்ந்திருக்கிறது. மலேஷியாவிலும் தாய்லாந்திலும் தேசிய இதிகாசமாக அதைக் கருதுகிறார்கள். ஆண்டுதோறும் இராம நாடகத்தைப் பெரிய விழாவாக அவர்கள் நடத்துகிறார்கள். சோவியத் ரஷ்யாவிலும் இராமாயணத்துக்குப் பெரிய வரவேற்பு கிடைத்திருக்கிறது. ரஷியாவில் இராமாயண நாடகத்தைப் பல இடங்களில் நடத்தி வருகிறார்கள். நாடகத்தைப் பார்த்த ரஷ்யப் பெண் ஒருத்தி, ''கற்பிலே சீதையைப்போல் நானிருக்க விரும்புகிறேன்'' என்று சமீபத்தில் மிகுந்த பெருமையோடு சொல்லிக்கொண்டாள். கற்பின் அந்தஸ்து குறைந்துகொண்டிருக்கிற இக்காலத்திலே.

அந்நிய நாடுகளைக் கவர்ந்தது போலவே, தன் ஜன்மபூமியாகிய இந்தியாவின் பல பாகங்களிலுள்ள மக்களையும் இராமாயணம் கவர்ந்திருக்கிறது. இலக்கியத் தகுதி வாய்ந்த இந்திய மொழி ஒவ்வொன்றிலுமே அந்தந்த மொழியின் மரபுக்குத்தக்க மாறுபாடுகளோடும் அந்தந்த மொழிக் கவிஞனின் கற்பனை வளத்துக்கேற்ற திருத்தங்களோடும் இராமாயணம் கவிதையாக உருவெடுத்திருக்கிறது. கவிதைப் பெருமிதத்தாலும், நாடகப் பாங்காலும், பாத்திரப் படைப்பின் திறத்தாலும் கம்பராமாயணம் சிறந்தோங்கி நிற்கிறதென்று பன்மொழிப்புலவர்கள் பலர் கருதுகிறார்கள்.

கம்பராமாயணத்தைப் படித்தால், அது தேசிய ஒருமைப்பாட்டை மாத்திரமல்ல, மனித குலத்தின் ஒருமைப்பாட்டை, உயிரினங்களின் ஒருமைப்பாட்டை, இல்லை, பேரண்டத்தின் ஒருமைப்பாட்டையே வளர்க்கும் ஆற்றலுடையது என்று தெரியும்.

இராமன் காட்டுக்கு அனுப்பப்பட்டுவிட்டான் என்று கேட்ட பரதன் ஆறுத்துயரம் அடைகிறான்; அவனை அழைத்து வருவதற்காகத் தன் படையோடு காலால் நடந்து செல்லுகிறான். கங்கைப் பிரதேசத்துக்கு வந்ததும் எங்கும் ஒரே பசுமையாக இருக்கிறது. எங்கு பார்த்தாலும் பச்சைப்பசேல் என்றிருக்கும் நன்செய் வயல்கள் கண்ணுக்கெட்டும் தூரம்வரை தெரிகின்றன. இவற்றையெல்லாம் பார்த்து மகிழ்ந்துகொண்டே பரதனோடு கம்பரும் கங்கைக் கரைக்கு வந்து சேருகிறார். கங்கையைக் கண்டவுடன் அவருக்குக் காவிரியின் நினைவு வருகிறது. இரண்டு ஆறுகளுக்கு மிடையே ஒரு கவிதைப் பாலம் போடுகிறார் :-

> "பூவிரி பொலன்கழல்
> பொருவில் தானையான்
> காவிரி நா(டு)அன
> கழனி நா(டு) ஒரீஇத்
> தாவர சங்கமம்
> என்னுந் தன்மைய
> யாவையும் இரங்கிடக்
> கங்கை எய்தினான்."

கங்கை நாட்டின் நீர்வளமும் நிலவளமும் காவிரிநாட்டின் நீர்வளத்தையும் நிலவளத்தையும் நினைவுறுத்துகின்றன என்று சொல்லி, ஒருமைப்பாட்டுக்கு வேண்டிய ஒரு நெருக்

கத்தை நம் உள்ளத்தில் உண்டாக்குகிறர் கம்பர்.

பொன்மால்வரையாகிய இமயமலையில் தவம் செய்துகொண்டிருந்த விஸ்வாமித்திரர், மலையைவிட்டு இறங்கி வருகிறர். எதற்காக ? அயோத்திக்கும் மிதிலைக்கும் இடையே ஒரு உறவை உண்டாக்குவதற்காக. அயோத்தி வீரர்களான இராமலக்ஷ்மணர்களை அழைத்துக் கொண்டு தாடகை வதையை முடித்த பின்னர் அவர்கள் இருவரையும் மிதிலைக்கு அழைத்துச் செல்லுகிறர் முனிவர். அங்கே ஜனக மகாராஜன், ''இந்த இளைஞர்கள் யார்?'' என்று விஸ்வாமித்திரரைக் கேட்கிறர். விஸ்வாமித்திரர் இராமலக்ஷ்மணர்களுடைய பரம்பரையைப் பற்றி விவரிக்கிறர், குலமுறை கிளத்துப் படலத்தில். ''இவர்கள் சூரிய வம்சத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுடைய முன்னேர்களில் ஒருவனே இக்ஷ்வாகு மன்னன். அவன் என்ன செய்தான் தெரியுமா - படைப்புக் கடவுளாகிய பிரம்மா, தான் இறைவனுடைய கருவி என்பதை மறந்து, தன்னுடைய கெட்டிக்காரத்தனத்தால்தான் படைப்பு நடக்கிறது என்று நினைக்கத் தொடங்கினன். ஆணவம் வந்து பிரம்மாவுடைய கண்ணைக் கூட மூடிக்கொண்டது. படைப்புத் தொழிலாகிய கர்மத்தால் வந்த பலன் இது. இந்தக் கர்மத்தினின்றும் விடுபடுவதற்காக, பிணி அரங்கவினை நீங்குவதற்காக, பிரமதேவன் பாம்புப் படுக்கையிலேயுள்ள விஷ்ணுமூர்த்தியை, பணி அரங்கப் பெரும்பாயல் பரஞ்சுடரை, பல யுகங்களாக வழிபட்டு வந்தான். அப்பேர்ப்பட்ட பரஞ்சுடரைப் பிரம்மாவால் படைக்கப்பட்ட மக்களாகிய நாமும் கண்டு, அகந்தையை இழக்க வேண்டுமல்லவா, அதற்காக இக்ஷ்வாகு மன்னன் விஷ்ணுமூர்த்தியை ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளச் செய்தான்'' என்று விஸ்வாமித்திரரைச் சொல்ல வைத்து, அயோத்தியை மிதிலையோடும் மிதிலையைத் திருவரங்கத்தோடும் நெருக்கிச் சேர்த்து, ஒரு கற்பனை நெசவு செய்கிறர் கம்பர்.

''பிணிஅரங்க வினைஅகலப்
பெருங்காலம் தவம்பேணி
மணி அரங்கு நெடுமுடியோய் !
மலர்அயனே வழிபட்ட
பணிஅரங்கப் பெரும்பாயல்
பரஞ்சுடரை யாம்காண
அணிஅரங்கம் தந்தானை
அறியாதார் அறியாதார்.''

கதை சொல்லிக்கொண்டிருக்கும்போதே கம்பர் ஒரு அரிய ஒருமைப்பாட்டை நம்மையறியாமலேயே நம் உள்மனத்தில் உண்டாக்கிக் கொண்டேயிருப்பார்.

உயிர்களின் ஒருமைப்பாட்டை எப்படிக் கம்பர் உணர்த்துகிறர் என்பதற்கு ஒரு உதாரணம். கைகேயி இராமனை அழைத்து வரும்படி சுமந்திரனிடம் சொல்லுகிறள். சுமந்திரன் போய்ச் சொன்னதும் இராமன் ஒரு தேரில் கைகேயியின் அரண்மனைக்குச் செல்லுகிறன். இராமனைக் காட்டுக்கனுப்ப வேண்டும் என்ற வரத்தைக் கைகேயி வாங்கிவிட்டாள் என்று சுமந்திரனுக்குத் தெரியாது, இராமனுக்குத் தெரியாது, அயோத்தி மக்களுக்கும் தெரியாது. முடிசூடத்தான் தேரில் போகிறன் என்று நினைக்கிறர்கள் பெண்கள். வீதியிலே முண்டியடித்துக்கொண்டு தேரைச் சுற்றி மொய்க்கிறர்கள் அவர்கள். தேரில் இராமனைப் பார்த்ததும் அவர்களுக்கு ஒரு புதிய ஆன்மானுபவம் ஏற்பட்டது. இதுவரையிலும் அவர்களுடைய உயிர்த் தத்துவமானது கண்ணுக்குப் புலப்படாமல் உடலுக்குள்ளே ஒளிந்துகொண்டிருந்தது. தேரில் இராமனைப் பார்த்த பின்பே அவர்களுடைய உயிர் எல்லாம் உடல்களை விட்டு வெளியே வந்து, எல்லோருக்கும் ஒன்றுதான் என்று சொல்லும்படி உருண்டு திரண்டு, இராமன் என்ற அழகிய ஸ்தூல வடிவம் பெற்று கட்புலனுக்குக் காட்சி கொடுத்தது. இரத வீதிகளின் இரண்டு பக்கமும் (இரு கையாலும்) ஆரவாரம் செய்துகொண்டு இரைத்துக்கொண்டு பெண்கள் இராமனிருக்கும் தேரை மொய்த்தார்கள். எப்படி ?

''இருகையும் இரைத்து மொய்த்தார்,
இன்னுயிர் யார்க்கும் ஒன்ருய்ப்
பொருவரும் தேரில் செல்லப்
புறத்திடை கண்டார் போல்வார்.''

எல்லோருடைய உள்ளங்களும் ஆர்வத்தோடும் பக்தியோடும் இராமனுடைய அழகிய வடிவத்தில் ஏககாலத்தில் ஒருசேரப் படிந்தபோது, மின்னல் வெட்டும் ஒரு கணத்தில், எல்லா உயிர்களையும் ஒன்ருகக் காணும் காட்சி அவர்களுக்குக் கிட்டிவிட்டது. இதுதான் உண்மையான ஒருமைப்பாடு. இந்த ஒருமைப்பாட்டை நாம் காணவொட்டாமல் தடுப்பது நமது ஆணவம். அது எப்போது கரைகிறதோ, அப்போதே ஆன்மீக ஒருமைப்பாட்டால் ஏற்படும் ஆனந்தம் நமக்குக் கிடைத்துவிடுகிறது.

கல்லுக்கும் காற்றுக்கும் எத்தனை எத்தனையோ வேறுபாடுகள் ! ஆனால், கல்லின் பரமாணுவையும் காற்றின் பரமாணுவையும் விஞ்ஞான முறையிலே பிரித்துப் பிரித்துப் பார்த்தால், கடைசியிலே ஒரே தன்மைத்தான பேதமற்ற சக்திதான் மிஞ்சுகிறது. அந்தச் சக்திதான் கல்லாக வேஷம் போடுகிறது, காற்ருக வேஷம் போடுகிறது, தீயாகவும், நீராக வும், ஆகாசமாகவும் வேஷம் போடுகிறது ; வெளிவேஷந்தான். இப்படி உள்ளுக்குள்ளே பார்த்தால், பார்ப்பவர்கள் விஞ்ஞானிகளாக இருந்தால், வேஷம் கலைந்து ஒரேபடித்தான சக்தியாகத் தோன்றுகிறது இந்தப் பேரண்டம்; உள்ளுக்குள்ளே பார்ப்பவர்கள் ஞானிகளாக இருந்தால், இந்தப் பேரண்டம் ஒரேபடித்தான அறிவாய்த் தெரிகிறது. அஞ்ஞானிகளுக்குத் தான் கல் கல்லாகவும், நீர் நீராகவும், அவை ஒன்றுக்கொன்று எவ்வளவோ எட்டி விலகி யிருக்கின்ற பொருள்கள் போலும் தோன்றும். ஒவ்வொரு பூதத்திலும் எத்தனையோ விதமான வேறுபாடுகள் இருப்பன போலும், அந்த வேறு பாடுற்ற வீக்கம் (மிகுதி) ஒருகாலும் மறை யாது போலும் தெரிகிறது நமக்கு. ஒன்றை மற்ருென்ருகவும் ஒன்றைப் பலவாகவும் காணும் காட்சி நம்முடைய அறிவிலுள்ள மயக்கத்தால் தான். இந்த மயக்கம் எப்போது தீரப்போகி றது ? எப்போது கலங்கப் போகிறது ? இறைத் தத்துவத்தைக் கண்டுவிட்டால் இந்தக்கோணல் பார்வையெல்லாம் நிமிர்ந்துவிடும். இறை யொளி வீசிவிட்டால் இந்த இருண்ட மருட்சி யெல்லாம் இருந்த இடந்தெரியாமல் போய் விடும்.

இரவு 7 மணிக்கு ஒளியில்லாத இருண்ட பாதையில் அஞ்சி அஞ்சி நடந்து செல்லு கிருேம். நடுப்பாதையில் நீண்டு வளைந்த ஒரு பாம்பு கிடப்பதைப் பார்த்து மருளுகிருேம். அதிர்ச்சியினுல் நிற்கிருேம். உடம்பெல்லாம் வேர்க்கிறது. அந்தப் பாம்பு படத்தைத் தூக்குகிறது. பிறகு வாலை ஆட்டுகிறது. திகில் அதிகமாகிறது. அந்தச் சமயத்தில் நமக்குப் பின்னுலிருந்து ஒரு சின்னப்பையன் டார்ச் விளக்கைக் கையில் வைத்துக்கொண்டு வரு கிருன். அவன் பாம்பின் மேல் 'டார்ச் லைட்டை' அடிக்கிருன். அந்த வெளிச்சத்திலே உண்மை நமக்குத் தெரிகிறது, அது பாம்பல்ல, சருகாய் வாடிப்போன பூமாலைதான் என்று. காற்றடிக்கும்போது அது இப்படியும் அப்படி யும் அசைகிறது. அதையே படம் எடுத்தாடு கிற பாம்பென்றும், வாலையாட்டுகிற பாம் பென்றும் கொஞ்ச நேரத்துக்கு முன்னுல் நினைத் தோம். அந்தப் பையன் போட்ட 'டார்ச்' ஒளியிலே பாம்பென்று நாம் அஞ்சியது, அஞ்ச வேண்டாத பூமாலையென்று உணர்கிருேம். இதைப் போலவே, ஆயிரங்கோடிப் பொருள் கள் போலக் காட்டிக்கொண்டிருக்கும் இந்தப் பிரபஞ்சம் ஒரே பொருள்தான் என்று நம் உணர்வுக்குத் தெரிகிறது, இறைவன் நமக்கு ஞானிஒளியை வீசிக் காட்டும்போது. இதைச் சொன்னுர் கம்பர் :

''அலங்கலில் தோன்றும் பொய்ம்மை
அரவெனப் பூதம் ஐந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின்
வேறுபா டுற்ற வீக்கம்
கலங்குவ(து) எவரைக் கண்டால்
அவரன்றே கைவில் ஏந்தி
இலங்கையில் பொருதார் என்பர்
மறைகளுக்(கு) இறுதி யாவார்.''

வேதங்களின் இறுதி என்ன ? ஞானம். வேதங்களுக்கு இறுதியாவார் ஞானிகள். அவர் கள் அப்படிச் சொல்லுவார்களாம். எந்தப் பரம்பொருளைக் கண்டால், பேத அறிவினுல் நமக்குண்டான கலக்கமும் குழப்பமும் தீருமோ, அந்தப் பரம்பொருள்-கண்ணுக்குத் தெரியாத அந்தப் பரம்பொருள் - மானிட உருவம் தாங்கிக் கையிலே வில் ஒன்றையேந்தி, கால் தரை தோய நின்று, இலங்கையில் தீய சக்திகளைப் போரிட்டு வென்றது என்று ஞானிகள் சொல்லுவார்களாம். ஒருமைப் பாட்டுக் கெல்லாம் மேலான ஒருமைப்பாடு எப்போது ஏற்படும் என்ருல், பேரண்டத்தையே ஒன்ருகக் காணும் காட்சி நமக்குக் கிட்டும்போது தான். அந்த அரிய காட்சியைக் காணவும் அந்த ஒருமைப்பாட்டை அடையவும் நம்மைப் பக்குவப்படுத்துகிறது கம்பராமாயணம். இப் போது சொன்ன பாட்டை உணர்வோடு மறு படியும் சொல்லிப் பார்த்தால் இந்த உண்மை புரியும்.

''அலங்கலில் தோன்றும் பொய்ம்மை
அரவெனப் பூதம் ஐந்தும்
விலங்கிய விகாரப பாட்டின்
வேறுபா டுற்ற வீக்கம்
கலங்குவ(து) எவரைக் கண்டால்,
அவரன்றே கைவில் ஏந்தி
இலங்கையில் பொருதார் என்பர்
மறைகளுக்(கு) இறுதி யாவார்.''

64 - 3

மனிதனின் பிரதிநிதி

அ. ச. ஞானசம்பந்தன்

இராமன் உடன்பிறவாத் தம்பியராக ஏற்றுககொண்டவர்களுள் நடுவில் நிற்பவன் சுக்கிரீவன். அன்பே வடிவாக இருக்கும் குக னுக்கும் அறிவே வடிவாக இருக்கும் வீடண னுக்கும் இடையில் இருப்பவன் சுக்கிரீவன். இராமனுடைய வன வாழ்க்கை தொடங்கி முடிவதற்குள் இம்மூவரும் ஒருவர் பின் ஒருவ ராக இராமனை அடைகின்றனர். வந்துசேர்ந்த முறையிலும் சுக்கிரீவன் இடைப்பட்டவனாக இருப்பது எல்லா வகையிலும் பொருத்தம் உடையதாகவே அமைந்துள்ளது.

மனிதன் அறிவு, உணர்ச்சி என்ற இரண் டின் கூட்டுச் சேர்க்கையில் வாழ்பவனாவான். இவை இரண்டும் தம்முள் ஒத்த அளவுடன் இருத்தல் வேண்டுமா, ஓரளவு ஏற்றத்தாழ் வுடன் இருத்தல் வேண்டுமா என்ற வினாவிற்கு விடை இறுத்தல் கடினமானது. சில சமயங் களில் அறிவு தலைதூக்கியும், இன்னுஞ் சில சமயங்களில் உணர்வு தலை தூக்கியும் இருப் பவனே சராசரி மனிதன் எனப்படுவான். அறி வின் விளக்கம் இல்லாமல் உணர்வு மட்டும் உடையவனை நாகரிகமற்றவன் என்றும், உணர்ச்சியே இல்லாமல் அறிவுக்கூர்மை மட்டும் உடையவனை சமுதாய வாழ்க்கைக்கு ஏலா தவன் என்றுங் கூறுகிறோம். ''அரம்போலும் கூர்மைய ரேனும், மரம்போல்வர் மக்கட்பண் பில்லா தவர்'' (997) என்று அறநூல் பேசுகிறது. திருவள்ளுவர் மக்கட்பண்பு என்று கூறுவது அறிவும் உணர்வும் கலந்த ஒரு நிலையையேயாகும். இத்தகைய அறிவு, உணர்வுக்கூட்டில் பல சமயங்களில் விநோத மான சூழ்நிலை ஏற்படுவதும் உண்டு. அறிவு சரி என்று கூறுவதை உணர்வு ஏற்றுக்கொள்ள மறுப்பதும், உணர்வு ஒப்புவதை அறிவு ஏற்க மறுப்பதும் விநோதமான சூழ்நிலையை உரு வாக்கும். சராசரி மனிதனுக்கு அறிவைவிட உணர்ச்சியே தலைதூக்கி நிற்கும்.

சுக்கிரீவன் இதற்குச் சிறந்ததோர் எடுத்துக் காட்டாவான். புதியவர்கள் யாரையேனுங் கண்டால் வாலியால் அனுப்பப்பெற்ற டகைவர் கள் என்று கருதி அஞ்சுவது அவனது இயல்பு. மலையின்மேல் இராமலக்குவர் ஏறி வரு வதைக் கண்டவுடன், ''செய்வது ஓர்கிலன்; அனையர் தெவ்வர் ஆம்என வெருவி, 'உய்தும் நாம்' என விரைவின் ஓடினன், மலை முழை யின்'' (அனும - 1) என்கிறார் கவிச்சக்கர வர்த்தி. இந்நிலையில், அறிவின் எல்லை கண்ட மாருதி, மறைந்து நின்று வருகின்றவர்களின் உடலமைப்பு சண்கள் முதலியவற்றையும், அவர்கள் உள்ளப் பாங்கையும் நன்கு அறிந்து, அவர்கள் எதிரே சென்றான். இராம னிடம் சில சொற்களே அவன் பேசினாலும் இராமன் மாருதியையும், மாருதி இராமனையும் மிக நன்றாக அறிந்துகொண்டனர். தன் தலைவ னாகிய சுக்ரீவனுக்கு ஈடு இணையற்ற துணையைச் சம்பாதித்துவிட்டான் மாருதி.

மீட்டு வந்து, சுக்ரீவன் முதலியவர்களை ஒருங்கு சேர்த்து, வந்தவர்கள் யாவர், அவர் ளால் சுக்ரீவனுக்கு என்ன நலம் ஏற்படும் என்பதை மிக விரிவாக 15 பாடல்களில்(நட்புக் கோள்-1 முதல் 15) கூறுகிறான் அஞ்சனை சிங்கம். மாருதி தன் தலைவனாகிய சுக்கிரீவனை நன்கு எடைபோட்டு வைத்திருந்தான் என் பதை விளக்க இப்பதினைந்து பாடல்களை

போதுமானவை. தூரத்திலிருந்து இராம இலக்குவர்களைக் கண்டவுடன் மாருதி மனத்தில் முதன்முதலாகத் தோன்றிய எண்ணம்

"தேவருக்கு ஒரு தலைவராம் முதல் தேவர் எனின் மூவர் ; மற்றும், இவர் இருவர்......
. . . .
கேவலத்து இவர் நிலைமை தேர்வது எக்கிழமை கொடு"

(அனும-5)

என்பதாகும். இந்த எண்ணம் வலுப்பெற்ற நிலையில் இறுதியாக அவன்,

"மாயத் தொல்வினைதன்னை நீக்கி
......மீளா நெறி உய்க்கும் தேவரோதாம் ?
என்ற எனக்கு உருகுகின்றது ;
இவர்கின்றது அளவில் காதல்."

(அனு-13)

என்ற முடிவுக்கு வந்து, இராமனைக் காணச் செல்கிறான்.

இராமனைப்பற்றி இத்துணை உயர்வான எண்ணத்துடன் அவனை நெருங்கிச் சென்று, அவன் முழுமுதற் பொருள் என்று துணிந்து கொண்டான். என்றாலும், சுக்ரீவனிடம் பேசும் பொழுது அறிவாற்றலில் மேம்பட்ட மாருதி, இராமன் முழுமுதற் பொருள் என்ற கருத்தை முதலிற் கூறாதது ஆராய்தற்குரியது. தன் தலைவனாகிய சுக்ரீவனுடைய அறிவையும், கல்வியையும் மாருதி நன்கு அறிந்திருந்தமையின் பரம்பொருள் பற்றிய பேச்சை முதலில் எடுக்கவே இல்லை. அதற்குப் பதிலாக இராமனைப் பற்றிச் சுக்கிரீவனிடம் கூறத் தொடங்கிய அனுமன்,

"............................... வீரைசெய்தார்
வாலி என்ற அளவுஇலா வலியினுன் உயிர்தெறக்
காலன் வந்தனன் ; இடர்க்கடல் கடந்தனம்......"

(நட்புக்-2)

என்றுதான் தொடங்குகிறான். என்றாலும், சுக்கிரீவன் வாலியைக் கொல்லக்கூடியவன் என்று யாரையும் நினைத்து நம்பிவிடமாட்டான் என்பதையும் அனுமன் நன்கு அறிந்திருந்தான். எனவே, தாடகையையும் சுவாகுவையும் கொன்றவன் (6), சிவனுடைய திரியம்பகம் என்னும் வில்லை முரித்தவன் (7), பரசுராமனை வென்றவன் (8), கரனையும் அவன் படையையும் ஒருவனாகவே நின்று அழித்தவன் (10), கவந்தனைக் கொன்றவன் (13) என்றெல்லாம் காரணத்துடன் இராமன் வல்லமையை விளக்குகிறான்.

இதில் ஒருவேளை சுக்கிரீவனுக்குத் தெளிவு பிறந்தாலும் மற்றோர் ஐயம் உடனே தோன்றிவிடும். இராமன் வாலியை வென்றால் அவனுடைய அரசைத் தான் கைப்பற்றிக்கொள்வானே தவிர, வாலி தம்பியாகிய தனக்கு அதனல் என்ன பயன் விளையும் என்று ஐயுறுவான் ; இராமனுடைய நட்பால் தனக்கு எவ்விதப் பயனும் ஏற்படாது என்ற முடிவுக்கும் வந்துவிடுவான். இந்த ஐயத்தை அவன் உறுதியாகப் பெறுவான் என்பதைச் சொல்லின் செல்வனாகிய மாருதி நன்கு அறிந்துள்ளான். ஆகலின், ஒரு பாடலில், சுக்கிரீவனின் வாய்விட்டுக் கேட்கப்படாத ஐயத்திற்கு விடை கூறுகிறான். இராமன் பிறர் மண்ணைக் கவரும் இயல்புடையவன் அல்லன் ; ஏன் எனில், தனக்கு உரிமையாக இருந்த மண்ணையே தன் தம்பிக்கு அன்புடன் உதவிவிட்டுச் சிற்றவையின் பணியைத் தலைமேற்கொண்டு கானகம் வந்துள்ளான் என்பதையும் விரிவாகக் கூறுகிறான் மாருதி.

"உளைவயப் புரவியான் உதவஉற்று, ஒரு சொலால்
அளவுஇல் கற்புடைய சிற்றவை பணித்தருளலால்
வளையுடைப் புணரிசூழ் மகிதலத் திருஎலாம்
இளையவற்கு உதவி,இத் தலைஎழுந் தருளினன்"

(நட்பு - 8)

என்ற அனுமனின் விளக்கம் சுக்கிரீவனுடைய மனத்தில் ஓர் அமைதியைத் தந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

அப்படியே இருப்பினும் மனைவியை இழந்து நிற்பவர், அவளை மீட்டுப் பெற வேண்டும் என்று விழைபவர் அம்முயற்சிக்கு உறுதுணையாக வலிமைமிக்க வாலியை நாடுவரே அன்றித் தன்னை ஏன் நாட வேண்டும் என்ற ஐயம் அடுத்துத் தோன்றுவது நியாயமானதேயாகும். சொல்லின் செல்வன் இந்த ஐயத்தையும் எதிர்பார்த்து இதற்கும் விடை கூறுகிறான்:

"நீ ஐயா ! தவம்இழைத் துடைமையால், நெடுமனம்
தூயையா உடைமையால். உறவினைத் துணிகுவன்"

(நட்பு - 14)

என்ற முறையில் விடை இறுத்துவிட்டு, மறுபடியும் வாலியை ஒழிக்கவல்லவர்கள் என்ற

கருத்தை இறுதியாகவும் கூறி முடிக்கிறான் மாருதி.

"தந்திருந்தனர் அருள் ; தகை நெடும் பகைஞன் ஆம்
இந்திரன் சிறுவனுக்கு இறுதிஇன்று, இசைதரும்"

(நட்பு - 15)

என்று கூறிவிட்டுப் "புந்தியின் பெருமையாய் போதரு" (15) என்று முடித்தான். சுக்கிரீவன் வாய்திறந்து ஒரு வினாவைக்கூடக் கேட்காத நிலையில் அவன் மனத்தில் எழக்கூடிய ஐயங்கள், வினாக்கள் ஆகிய அனைத்தையும் எதிர் பார்த்து அவை அனைத்துக்கும் விடையும் விளக்கமும் தருகிறான் மாருதியாகலின், அவனைச் 'சொல்லின் செல்வன்' என்று எதிரது அறியும் இராமன் கூறியதில் வியப்பொன்றும் இல்லை.

இத்துணை அளவு மாருதியால் தேற்றப் பட்டு, இராமனைக் காணப் புறப்படுகிறான் சுக் கிரீவன். என்றாலும், அவனுடைய மனத்தில் இருந்த ஐயங்கள் மாருதி சொற்களால் முழு வதும் தீர்ந்துவிட்டன என்று கூறுவதற்கில்லை. இந்நிலையில் அவனுடைய அறிவு, தனக்கு விடிவு காலம் வந்துவிட்டது என்று கூறவும், உணர்வு அச்சத்தையும் சந்தேகத்தையும் கிளறிவிடவும் இருதலைக்கொள்ளி எறும்பாக உள்ளான் அவன். இம்மாதிரியான மனநிலையுடன்தான் இராமனைக் காணச் சென்றான்.

கமலக்கண்ணனைச் சென்று கண்டான் ; நோக்கினான், நெடிது நின்றான். உலகங்கள் அனைத்தும் செய்த புண்ணியம், வீரர் இருவர் வடிவு பெற்று வந்தது என்ற முடிவுக்கு வந் தான். இன்னும் ஒருபடி மேலே சென்று,

"ஆறுகொள் சடிலத்தானும் அயனும் என்று இவர்கள் ஆதி
வேறுள குழுவை எல்லாம், மானுடம் வென்றது அன்றே"

(நட்பு - 19)

என்ற முடிவுக்கும் வந்துவிட்டான். இராம னாகிய பரம்பொருளை அடைந்துவிட்டால் தான் பெற வேண்டிய பேறு வேறு இல்லை என்ற நினைவு அவனுக்கு ஏனோ வந்ததாகத் தெரிய வில்லை.

இவ்வாறு ஈடுபட்ட சுக்கிரீவனை உடன் இருந்துகொண்ட இராகவன், தான் அவனை நாடிவந்த காரணத்தை அழகாகக் கூறுகிறான்.

"..................................யாங்கள் உற்ற
கையறு துயரம் நின்னால் கடப்பது கருதி வந்தேம்
ஐய ! நின் தீரும்என்ன, அரிக்குலத் தரசன் சொல்வான்"

(நட்பு-24)

தான் இருக்கும் இடம் தேடி வந்த விருந்தினர் கள் இப்பொழுது தங்கள் துயரத்தைப் போக்க வேண்டும் என்று வாய் திறந்து கேட்கிறார்கள். கேட்பவர்கள் சாதாரண மனிதர் அல்லர். சுக்கிரீவனே அவர்கள் எத்தகையவர்கள் என் பதை நன்கு அறிந்துள்ளான். அவ்வளவு பெருமை வாய்ந்தவர்கள், தன் போன்ற சாதாரணக் குரங்கை நாடி என்றுமே வாரா தவர்கள் இப்பொழுது வந்ததுடன் அல்லாமல் தன்னிடம் உதவியும் கேட்கிறார்கள். "கையறு துயரம் நின்னால் கடப்பது கருதி வந்தேம்" (24) என்று அவர்கள் வாய்விட்டுக் கேட்ட பிறகு மிகச் சாதாரணமான ஒருவன்கூட, "ஐயா ! என்னால் ஆன உதவியைச் செய்யக் காத்துக்கொண்டிருக்கிறேன்" என்றுதானே கூறல் வேண்டும்.

ஆனால், 'உன் உதவியை நாடி வந்துள் ளேன்' என்று குறை இரந்து நிற்கும் இராம னுக்குச்சுக் கிரீவன் கூறிய விடை, அவனது மன நிலையையும் பண்பாட்டையும் நன்கு விளக்குவ தாக உள்ளது. இராமனை நோக்கி, 'என் அண்ணன் செய்யும் கொடுமைக்கு அஞ்சி இம் மலையில் வாழ்ந்து வருகிறேன். இப்பொழுது உன்னைச் சரண் அடைகின்றேன். என்னைத் தாங்குதல் நினது கடன்' என்ற பொருளில்

"முரணுடைத் தடக்கை ஓச்சி, முன்னவன் ; பின்வந் தேனை
இருள்நிலைப் புறத்தின் காறும், உலகுஎங்கும் தொடர இக்குன்று
அரண்உடைத் தாகி உய்ந்தேன் ; ஆருயிர் துறக்க லாற்றேன்
சரண்உனைப் புகுந்தேன் ! என்னைத் தாங்குதல் தருமம் என்றான்"

(நட்பு - 25)

தன் வேண்டுதலுக்கு ஒரு விடையுங் கூறா மல், தன் குறையைக் காதில்கூட வாங்கிக் கொள்ளாமல் அவனுடைய துயரைப்பற்றிப் பேசி, 'நின்னைச் சரண் அடைந்தேன்' என்று கூறும் ஒருவனை இராகவன் இதற்குமுன் சந்தித்ததில்லை. முதன்முறையாகப் பார்த்தவுட னேயே "நின்னை இங்ஙனம் பார்த்த கண்ணை

சர்கிலாக் கள்வனேன் யான்'' (குகப்படலம் 17) என்று கூறிய குகனும் ஒரு தம்பியாக ஏற்றுக்கொள்ளப் பெறுகிறான். எதிரே உள்ள வன், 'உன் உதவியை நாடி வந்தேன்' என்று கூறுவதைக் காதிற்கூட வாங்கிக்கொள்ளாமல் தன் குறையை ஒப்பாரி வைக்கும் இந்தச் சுக்கிரீ வனும் ஒரு தம்பியாக ஏற்றுக்கொள்ளப் பெறு கிறான். இராகவனின் பெருமைக்கும் சுக்கிரீவ னுடைய சிறுமைக்கும் இது ஓர் எடுத்துக்காட் டாகும்.

சுக்கிரீவனுடைய இந்த வார்த்தைகளைக் கேட்ட இராகவன் இரக்கத்துடன் அவனைப் பார்த்து, 'உன்தனக்கு உரியஇன்ப துன்பங் கள் உள்ள, முன்னாள் சென்றன போக, மேல் வந்து உறுவன தீர்ப்பல்; அன்ன நின்றன, எனக்கும் நிற்கும் நேர்' (26) என்று கூறி விட்டான். பின்னர்ச் சுக்கிரீவன் இருக்கும் இடம் சென்று, அவனும் மனைவியை இழந்து வாடுபவன் என்பதை அறிந்தவுடன் தசரத குமாரன் தன்னையே மறந்துவிடுகிறான். தன் நண்பனாகிய சுக்கிரீவன் மனைவியை இழக்கக் காரணமாக இருந்தவன் அவன் தமையனாகிய வாலி என்பதை அறிகிறான் இராகவன். தம்பியின் பொருட்டாக அரசைத் துறந்து வரும் ஒருவன், தம்பியின் மனைவியைக் கவர்ந் தான் ஓர் அண்ணன் என்பதை எவ்வாறு சீரணிக்க முடியும்? உடனே பொங்கி எழுந்து,

''உலகம் ஏழினோடு ஏழும்வந்து
அவன் உயிர்க்கு உதவி
விலகும் என்னினும், வில்லிடை வாளியின்
வீட்டித்
தலைமை யோடுநின் தாரமும், உனக்குஇன்று
தருவென்''

(நட்பு-70)

என்று பேசுகிறான்.

இப்பொழுதுதான் சுக்கிரீவன் மனிதர்க ளாகிய நம்முடைய பிரதிநிதியாக நடந்துகொள் கிறான். அவன் உடன்பிறந்த சந்தேகம் மறு படியும் அவனைப் பற்றிக்கொள்கிறது. தன் தமையனாகிய வாலியை எதிர்ப்பேன் என்று முன்வந்து வாய்விட்டுக் கூறும் யாரையும் சுக்கிரீவன் கண்டதில்லை. அவ்வாறு இருக்க, வாலியை மட்டும் அல்லாமல் பதினான்கு உலகங் களும் அவனுக்கு உதவியாக வரினும் அனை வரையும் வென்று சுக்கிரீவனுக்குப் பட்டமும் மனைவியும் தருவேன் என்று இராமன் கூறி விட்டானே. அப்படி இருக்க, இப்பொழுது இராமன் கூறுவதை ஏற்றுக்கொள்வது தவிரச் சுக்கிரீவனுக்கு வேறு வழி யாது? இருந்தும், இராமன் கூறியவுடன் மந்திராலோசனை சபையைக் கூட்டுகிறான்.

இந்த சபையைக் கூட்டினாலும் சுக்கிரீவன் பிறர் அறியத் தன் மனத்தில் உள்ள சந்தேகங் களை வெளிப்படுத்தவில்லை. இத்துணைச் சிறப்பு வாய்ந்த இராமனைத் தான் ஐயப்படுவதாக அமைச்சர் முன்னர் எவ்வாறு வெளிப்படுத்த முடியும்? எனவே, அவன் சபையைக் கூட்டி விட்டாலும் வெளிப்படையாக ஒன்றுங் கூற வில்லை. குறிப்பில் குறிப்புணரும் ஆற்றல் பெற்ற அனுமன்,

''உன்னினேன் உன்தன் உள்ளத்தின்
உள்ளதை, உரவோய்!
அன்ன வாலியைக் காலனுக்கு அளிப்பதுஓர்
ஆற்றல்
இன்ன வீரர்பால் இல்லை'என்று அயிர்த்தனை;
இனியான்
சொன்ன கேட்டு,அவை கடைப்பிடிப்
பாய்! எனச் சொன்னான்''

(நட்பு - 73)

என்று கூறத் தொடங்குகிறான். இப்பொழுது அனுமனுடைய பேச்சு முன்போல் இல்லை. இராமனைப்பற்றிய ஐயங்கள் நீங்கிவிட்டன. வாலியை வெல்ல முடியுமா என்ற ஒரே ஒரு ஐயம் மட்டுமே உளது. எனவே, அதனைப் போக்கக்கூடிய வாதங்களை மட்டுமே அனுமன் பேசுகிறான். கரன், தாடகை முதலியோரை வென்றதை மட்டும் வைத்துக்கொண்டு ஒரு வன் வாலியை வென்றுவிடுவான் என்று கூற முடியாது. முன்னர்க்கூறிய அனைவரும் இராவணனுக்குக் கீழ்ப்பட்டவர்கள்.வாலியோ அந்த இராவணனையே வாலினால் கட்டுகிறவன்; எனவே கரன், கவந்தன் முதலானோரை வென் றவன் வாலியை வெல்ல முடியும் என்ற வாதம் எடுபடாது. மேலும், ''கிட்டுவார் பொரக் கிடைக்கின், பட்ட நல்வலம் பாகம் எய்து வான்'' (நட்பு - 40) வாலி. இதுவரை இராம னால் வெல்லப்பட்ட யாருக்கும் இத்தகைய வர பலம் இருந்ததில்லை. எனவே, சுக்கிரீவனுடைய சந்தேகம் முழுதும் ஆதாரமற்றது என்று கூறி விட முடியாது.

வரபலமுடைய வாலியை வெல்ல வேறு வரபலம் உடையவர்களால் இயலாது. ஆனால், வரங்களையே தந்த இறைவனால் உறுதியாக அவனை வெல்ல முடியுமன்றோ? எனவேதான், நான்கு பாடல்களில், இராமன் மூவர்க்கும் மேம் பட்ட மூலப்பொருள் என்பதை விரிவாகச்

சான்று காட்டி விளக்குகிறுன் அஞ்சனை சிறுவன். இதிலும் ஓர் இடையூறு ஏற்படுகிறது. பரம் பொருளை அறிவின் துணைகொண்டு ஆராய்ந்து அறிதல் இயலாத காரியம். ஆனுல், உணர்வின் உதவிகொண்டு உணரலாம். மாபெரும் அறிஞனுகிய அனுமன் இதை அறியாதவனு ? எனவே தான், வந்தவன் மூலப் பரம்பொருள் என்பதைத் தன் உணர்வுமூலம் உணர்ந்ததைக் கூறுகிறுன்.

"சங்கு சக்கரக் குறிஉள, தடக்கையில் தாளில்
எங்கும் இத்தனை இலக்கணம் யாவர்க்கும்
இல்லை"
(நட்பு - 74)

என்ற இப்பாடலால் இராமன் மூலப் பரம் பொருள் என்பதை காட்சிப் பிரமாணத்தால் அனுவதிக்கத் தொடங்குகிறுன். இராமன் சிவ தனுசை ஒடித்ததைக் கேள்விப்பட்டிருந்தான் ஆகலின், அதை எடுத்துக் கூறுகிறுன். சிவ தனுசை ஒடிப்பவன் மூலப் பரம்பொருளாகத் தான் இருக்க முடியும் என்பது அனுமானப் பிரமாணமாகும். இனி, அடுத்துத் தன் தந்தையாகிய வாயுதேவன் கூறிய சுருதிப் பிரமாணத்தையும் எடுத்துக் கூறுகிறுன்.

"என்னை ஈன்றவன், 'இவ்வுலகு யாவையும்
ஈன்ருன்
தன்னை ஈன்றவற்கு அடிமைசெய் ;
தவம் உனக்கு அஃதே
உன்னை ஈன்றஎற்கு உறுபதம் உளது" என
உரைத்தான்"
(நட்பு -76)

இவ்வாறு தன் தந்தை கூறியவுடன், பரம் பொருளை அறிந்துகொண்டல்லவா அடிமை செய்ய முடியும் ? அவனை எவ்வாறு அறிவது ? என்று வினவினுனும். அதற்கு வாயுதேவன், ''மகனே ! அப்பொருளை அறிய முடியாது. ஆனுல் யாரைக் கண்டவுடன் எலும்பு உருகும் அன்பு தோன்றுகிறதோ அவனே பரம்பொருள் என அறிந்துசொள்வாயாக'' என்ற கருத்தில்,

"துன்பு தோன்றிய பொழுது, உடன்
தோன்றுவன் ; எவர்க்கும்
முன்பு தோன்றலை அறிதற்கு முடிவுஎன் ?
என்றியம்ப
'அன்பு சான்று'என உரைத்தனன்,
ஐய ! என் யாக்கை
என்பு தோன்றல, உருகின எனின்பிறிது எவனே?"
(நட்பு - 77)

தன் தலைவனுகிய சுக்கிரீவன் மனம் தேறுதல் அடைதற்காக, சுருதி, காட்சி, அனுமானம் என்ற மூன்று பிரமாணங்களைக் காட்டி வந்தவன், பரம்பொருள் என்று நிறுவிவிட்டு இறுதியாகத் தன்னுடைய அனுபவத்தையும் எடுத்துக் கூறுகிறுன் மாருதி. மேலே கூறப் பெற்றுள்ள மூன்று பிரமாணங்களைக் காட்டியும் அனுபவம் சிறந்தது என்பது வெளிப் படை. மூன்று பிரமாணங்களும் அறிவின் அடிப் படையில் எழுவன. அனுபவம், உணர்வில் கலந்து வெளிப்படுவது. இத்துணை எடுத்துக் கூறியும் சான்று காட்டியும் ஒருவன் தெளி வடையவில்லை. அந்த ஒருவன்தான் சுக்கிரீ வன். **எனவேதான், எத்துணை ஆயிரக்கணக் கான நூல்களைக் கற்றும் பிறர் சொல்லக் கேட்டும் தெளிவடையாத மனித இனத்தின் பிரதிநிதியாவான் சுக்கிரீவன் என்று கூறப் பெற்றது.**

அறிஞர்கள் எவ்வளவு எடுத்துக் கூறினுலும், எத்துணை நூல்களைக் கற்ருலும் மனத்தில் தெளிவடையாத சிலர், ஏதோ ஒரு நிகழ்ச்சியில் முற்றிலும் மாறிவிடுவதுண்டு. இது உலக அனுபவம். அதேபோல, இராமன் வன்மையில் ஐயங்கொண்டிருந்த சுக்கிரீவன், அவன் மராமரத்தில் அம்பு ஓட்டியதைக் கண்டவுடன் மனம் திருந்திவிட்டான். அறிவின்மிக்க மாருதி கூறியபொழுது ஓரளவு மனம் மாறுபட்டான் சுக்கிரீவன். அடுத்து, இராமனைக் கண்டவுடன் மேலும் சிறிது மாற்றம் பெற்ருன். என்ருலும், சராசரி மனிதனுக்குரிய நம்பிக்கை, நம்பிக்கை இன்மை என்ற இரண்டும் சுக்கிரீவனிடம் நிறைந்திருந்தன. எனவே, ஒவ்வொரு மாற்றமும் நிகழ்ந்து, நம்பிக்கை ஏற்பட்ட விரைவில் அது இழக்கப்பட்டு நம்பிக்கை இன்மை தோன்றிவிடுகிறது. இறுதியாக, ஊசலாடும் மனமும் தெளிந்து, ''வையம் நீ ; வானும் நீ.... நாயினேன் உய்யவந்து உதவினுய் ; உலகம் முந்து உதவினுய்'' (மராமர - 19) என்று பேசுகிறுன். இறுதி அடியில், ''நாயினேன் உய்யவந்து உதவினுய், உலகம் முந்து உதவினுய்'' என்ற பகுதி சிந்திப்பதற்குரியது. தன்னை வாழவைத்தான் பரம் பொருள் என்பதுடன், 'உலகம் முந்து உதவினுய்' என்று ஏன் கூற வேண்டும் ? முந்து என்ற சொல்லுக்கு முன்னர் எனப் பொருள் கொண்டு, முன்னர் இவ்வுலகத்தைப் படைத்தாய் எனவே பலரும் பொருள் கூறுவர். முந்து என்பதற்கு 'முழுவதும்' எனப் பொருள் கொண்டால் இவ்வடியின் தனிச்சிறப்பு விளங்கும். 'ஐயனே ! என்போன்ற சந்தேகப்

பிராணியின் ஐயங்களைப் போக்கி உய்யக் கொண்டாய்! அது மட்டுமா? உலகம் முழுவதும் என்போன்றவர்களே நிறைந்திருத்தலின் நானே உன்னருளுக்குப் பாத்திரமானேன் என்பதால், என்போன்ற பிறரும் தம் ஐயந் தெளிந்து நின்னைச் சரணடைவர். எனக்கு உதவுவதன் மூலம் உலகம் முழுவதற்கும் உதவினாய்'' என்ற பொருளும் இதில் கிடைக்கக் காண்கிறோம்.

சுக்கிரீவன் வாழ்க்கையிலிருந்து நாம் அறிய வேண்டியதும் ஒன்றுண்டு. எதிலும் தெளிவு ஏற்படாமல் சந்தேகத்திலேயே உழலும் சராசரி மனிதன் தனக்கு என்றேனும் உய்கதி உண்டாகுமா என்று கவலைப்பட வேண்டியதில்லை. நமக்கும் உய்கதி உண்டு என்பதை அறிவிக்க, நம் முன்னோடியாக உள்ளான் சூரியன் மைந்தனாகிய சுக்கிரீவன்.

அடுத்து, ஒன்றும் அறியப்படல் வேண்டும். அரைகுறை உறுதியுடனும், நீங்காத சந்தேகத்துடனும் இருக்கும் நம் போன்றவர்களையும் இறைவன் ஏற்றுக்கொள்வானா? குகனைப் போன்ற அன்பே வடிவானவர்களையும், வீடணனைப் போன்ற அறிவே வடிவானவர்களையும் மட்டுமே ஏற்றுக்கொள்வானா என்ற ஐயத்திற்கு இனி இடமில்லை. இந்த இரண்டு பேர் போன்றவர்கட்கு என்ன இடத்தைப் பரம்பொருள் தருகிறானோ அதே இடத்தை இடைநிலையில் உள்ள நம் பிரதிநிதிக்கும் அளிக்கிறான் என்பது தெளிவு.

அகலிகை

நா. வரதராஜுலு நாயுடு

1. 'மனையின் மாட்சி'

கவிச்சக்கரவர்த்தி, இராமாவதாரத்தில், அகலிகையை நமக்கு அறிமுகம் செய்விக்கும் சொற்றொடர், ''மனையின் மாட்சியை அழித்து இழி மாதவன் பன்னி'' என்பது: இல்லறத்தின் பெருமையை அழித்து (உயர் பதவியினின்று) விழ்ந்த பெருந்தவம் உடையோனின் பத்தினி.

''மனையின் மாட்சியை அழித்து இழி''ந்தது யார்? மாதவனு, அவன் பன்னியா என்ற ஐயம் எழக்கூடும். அடைமொழிகள், அடுத்துவரும் சொல்லைத் தழுவுவது ஒருமுறை. அவ்வாறு கொண்டால், மனையின் மாட்சியை அழித்து இழிந்தவன் மாதவன்; அவன் பன்னி அகலிகை, எனப் பொருள் கொள்ள வேண்டும்.

அடுத்த சொல்லைத் தாவி, அப்பால் வரும் சொல்லை அடைமொழிகள் தழுவுவதும் உண்டு. அப்போது, இரண்டு அடைமொழிகள் ஒரே சொல்லைத் தழுவும். அவ்வாறு கொண்டால், "மனையின் மாட்சியை அழித்து இழி பன்னி', "மாதவன் பன்னி' என்ற இரு சிறப்பு(?)கள் உடையவள் அகலிகை என்று ஆகும்.

''மனையின் மாட்சி''யைக் காப்போர் தலைவன், தலைவி ஆகிய இருவருமே. இருவரும் சேர்ந்ததே ''மனை''. ''மனை மாட்சி இல்லாள்கண் வேண்டும்'', ''புகழ் புரிந்த இல் இலோர்க்கு இல்லை இகழ்வார் முன் ஏறுபோல் பீடு நடை'' என்ற கருத்துகளால், குறள் ஆசிரியர் ஆண், பெண் இருவருக்கும் பொதுவான மனைமாட்சியைப் பெண்பாலுக்கு மட்டும் உரியது ஆக்கினர். 'மனை மாட்சி இல் உடையான்கண்ணும் இருத்தல் வேண்டும். புகழ் புரிந்த இல் உடையான் இருந்தால்தான் இல்லாள் பெருமை பெறுவாள்' என்பதும் உண்மைதானே!

கம்பர், வள்ளுவர் கருத்தைத் தொடர்கிறார்:

காவியத் தலைவியை, ''மனையின் மாட்சியை வளர்த்த எம்மோய்!'' எனப் பிரமன் வாக்கில்-காவியத்தின் இறுதியில்—புகழ்ந்துள்ளது (மீட்சிப் படலம் 111) முன் அகலிகை அழித்த மாட்சியைக் கருதி இருக்கலாம்!

ஆண்வழி உரிமைகள் வால்மீகிக்கு முன்பே-மனுவின் காலத்திலும் - வன்மையாக ஊன்றி இருந்தன. அக்காலச் சமூகம் பெண்ணுக்குக் கற்புநெறி வகுத்தது, ஆணும் பெண்ணும் சமம் என்ற நிலையில். எத்தகைய கற்பு நெறி அமையும் என்பது, இனி நிகழ உள்ள ஆராய்ச்சி. அந்நெறியில் 'மனைமாட்சி' வேறாக இருக்கக்கூடும்.

இனி, அகலிகையைத் தொடர்வோம்:

2. 'அகலிகை' — 'அஹல்யா'

'அஹல்யா' என்ற ஸம்ஸ்க்ருதச் சொல்லின் தமிழாக்கம், 'அகலிகை', 'அஹல்யா' என்ற சொல்லுக்கு, ஸம்ஸ்க்ருத மொழியில் மூன்று பொருள்கள் உண்டு.

1. 'ஹல்' - உழு; 'ஹலம்' - ஏர்; 'ஹல்யா' - உழப்பட்டது.

'அஹல்யா' - உழப்படாதவள்.

2. 'ஹலம் - குறைபாடு ; 'அஹல்யா - குறை பாடு அற்றவள்.

வால்மீகி ராமாயணம் உத்தரகாண்டம் 30 : 23

3. அஹ : பகல் ; 'லீ' - ஒதுங்குவது, வீழ்வது. 'அஹ : லீயதே' - பகல் (ஞாயிறு) பூமிக்கு ஒருபுறம் இருக்க, மறுபுறம் பூமியின் நிழல் (இருள்) விழுகிறது. அதைச் சந்திரன் தொடர்கிறான். அத்தொடர்ச்சி அஹல்யா. (தைத்திரீய ஸம்ஹிதை, ஸதபதப் ப்ரஹ்மணம் 3.3)

இவற்றுடன் வேறொரு பொருளும் குறிப்பிடத்தக்கது.

'அஹில்யா' என்று ஒரு பெண்பாற் பெயர் வடமொழியில் உண்டு. அதன் பொருள், அசைவற்றவள் ; அசைக்க முடியாதவள். கல்லாய்க் கிடந்த அகலிகையைக் கருதி இப்பெயர் எழுந்திருக்கலாம். (ஹில் - அசைவு.)

3. அகலிகைக் கதை

அகலிகைக் கதை, இராமாயண - மஹாபாரதங்களுக்கு முன்பே இருந்தது. இந்திரன், கௌதமன், அஹல்யா ஆகியோர் வேதத்தில் கூறப்பட்டுள்ளனர்.

(அ) வியாஸ பாரதம்

பழைய நிகழ்ச்சியாக, கிருஷ்ணன் அர்ஜுனனுக்குச் சொல்வது : ''அஹல்யா, கௌதம ரிஷியின் மனைவி. ஜனகனின் குருவான சதானந்தன், அஹல்யாவின் மகன். அஹல்யையை வன்மை செய்ததால், கௌதமன் இந்திரனுக்குச் சாபம் கொடுத்தான் ; இந்திரனுடைய முக மயிர் மஞ்சள் நிறமாயிற்று ; வித்துக்கள் வீழ்ந்தன; பின், ஆட்டின் வித்துக்களைப் பெற்றான்'' (சாந்தி பர்வம் 342-23) என்பது அதன் சுருக்கம்.

(ஆ) வால்மீகி ராமாயணம்

வால்மீகி ராமாயணத்தில் இக்கதை இருமுறை வருகிறது.

1. பால காண்டம் 48, 49-ஆம் சருக்கங்களில் முதல் முறையாக வருகின்ற அஹல்யை கதை இது :

மிதிலைக்கு வெளியே இருந்த உபவனத்தில், மக்கள் நடமாட்டம் அற்ற பழமையான அழகிய ஆசிரமம் ஒன்றைக் கண்டு, 'இது யாது ?' என இராமன் விசுவாமித்திரனைக் கேட்டான். விசுவாமித்திரன் கீழே காணும் அகலிகையின் கதையைக் கூறினான் :

''இவ் ஆசிரமம் பெரியோன் ஒருவனது சாபத்திற்கு உள்ளானது. ஒரு காலத்தில், இவ் ஆசிரமத்தில் கௌதமன், தன் மனைவி அஹல்யையுடன் பல்லாண்டுகள் வாழ்ந்தான்.

''ஒரு நாள், முனிவன் இல்லாதபோது, ஆயிரம் கண்ணனும் (சசிபதி - சசியை மனைவியாக உடையவனும் ஆகிய, இந்திரன்) முனிவன் வேடம் கொண்டு, அஹல்யையிடம் வந்து, ''அழகிய இடை உள்ளவளே ! காம வேட்கையால் உன்னைக் கூட விரும்புகிறேன்'' என்று சொன்னான். அவன் முனிவன் அல்லன்; தேவர்க்கு அரசன் என்பதை அவள் அறிந்தும், காம வேட்கை தூண்ட, அவனிடம் தன் கருத்தைச் செலுத்தினாள். தேவேந்திரனால் காம இன்பம் பெற்று முற்றிய பின், அவள் 'என் ஆசை நிறைவேறிற்று ; உன்னையும் என்னையும் கௌதமனது கோபத்தினின்று காப்பதற்கு, அவன் வருமுன் போய்விடு' என்றாள். இந்திரன் நகைத்து, 'அழகிய விலா உடையவளே ! உன்னோடு சேர்ந்ததால், நானும் மன நிறைவு பெற்றேன். வந்தவாறு போகிறேன்' என ஓடினான்.

''அப்போது, தேவர்களாலும் தானவர்களாலும் வெல்ல முடியாத தபோபலம் நிறைந்த கௌதமன், நீராடி நனைந்த உடல் தீப்போல் சுடர்விட்டு ஒளிர, சமித்துக்களையும் தருப்பையையும் கையில் கொண்டுவந்தான். வந்தவன், முனி வேடம் தாங்கிய ஆயிரம் கண்ணனைப் பார்த்துவிட்டான். வெகுண்டு, 'நீ பலன் அற்றுப் போவாய்' எனச் சபிக்க, அதனால் இந்திரனுடைய விதைகள் கீழே விழுந்துவிட்டன.

''பின்னர், ருஷி தன் மனைவியைப்பார்த்து, ''நீ பல்லாயிரம் ஆண்டுகள் காற்றை உண்டு, சாம்பரில் கிடந்து எரிவாய். எவர் கண்ணிலும் படாமல் இவ் ஆசிரமத்தில் இருப்பாய். இராமன் வருவான். அவனைக் கண்டு, வரவேற்று, ஆசையும் மோகமும் நீங்கித் தூய்மை பெற்று, உன் பழைய உரு எய்தி, என்னை அடைவாய்' என்றான். கெட்ட நடத்தை உடையவளிடம் இவ்வாறு கூறிவிட்டுக் கௌதமன் இமயமலைச் சாரலுக்குச் சென்றான்.''

விசுவாமித்திரன் கூறிய இந்த வரலாற்றைக் கேட்டு, இராமலக்குவர், விசுவாமித்திரனைத் தொடர்ந்து, ஆசிரமத்தில் நுழைந்

தனர். அங்கு, தவத்தின் கனல் காலும் ஒளிப் பிழம்பு என, எவராலும் கண்ணிற் காண ஒண்ணாத உருவத்தாளாகிய அஹல்யையைக் கண்டனர். பிரமன் அவளை முயன்று படைத்திருந்தான். அவள் ஒளி பெற்ற மாயையின் ஸ்வரூபம்; புகையால் சூழப்பட்டு, உள்ளே சுடர்விட்டு எரியும் தீ; பனியாலும் மேகத்தாலும் சூழப்பட்ட முழுமதி; நீரில் மூழ்கி எழும் ஞாயிற்றின் ஒளி. [இப்பகுதியில் மிளிரும் அழகைத் தமிழாக்க என்னால் இயலவில்லை; மூலத்தில் அனுபவித்தல் வேண்டும்.] இராமனைக் காண அவள் சாபம் நீங்கியது. இராமனும் இலக்குவனும் அவள் திருவடியைத் தொட்டு வணங்கினர். அவள் அவர்களை வரவேற்று உபசரித்தாள். கௌதமன் அங்கு வந்து, அவளை இல்லறத்தில் ஏற்றுக்கொண்டான்.

2. உத்தர காண்டம் 30-ஆம் சருக்கத்தில் மேகநாதன் இந்திரனை வென்றதைக் கூறும் போது, பிரமன் கூற்றாக, இந்திரன் பெற்ற தோல்விக்கு - அவமானத்திற்கு - அவனது புல்லிய நடத்தையே காரணம் என வருகிறது.

''பிரமன் தான் படைத்த சிறந்த பெண் ஒவ்வொருத்தியிடமும் உள்ள சிறந்த உடற்பகுதி ஒவ்வொன்றைத் தேர்ந்து எடுத்து, அப்பகுதிகளை ஒன்றுசேர்த்து அஹல்யையை உருவாக்கினான். அவள் எவ் உறுப்பிலும் குறைபாடு அற்றவள். அப்பெண்ணை இந்திரன், தன் பெரும்பதவிக்கு ஏற்ற மனைவியாகக் கொள்ள விரும்பினான். அவ்விருப்பத்தைத் தடுத்து, பிரமன் அவளைக் கௌதமனிடம் அடைக்கலப் பொருளாகத் தந்தான். கௌதமன், தன் தவம் நிறைவு பெற அவளைப் பத்தினியாகக் கொண்டான்.

தன் ஆசை நிறைவேறாததால் கோபம் கொண்ட இந்திரன், முனிவனது ஆசிரமத்துக்குச் சென்று, தீக்கொழுந்து போல் ஒளி வீசும் அவளைக் கண்டான். ஆசைதீர, இருவரும் கலந்தனர். கௌதமன் இதை அறிந்து, இந்திரனை 'நீ போரில் தோற்றுச் சிறைப்படுவாயாக' எனச் சபித்தான். மேலும், உலகில் எவர், பிறர் மனையை விழைந்தாலும், அவர் பெறும் பாவத்தில் பாதி உன்னைச் சாரும் என்றும் சபித்தான். அதன்பின், அகலிகையை நோக்கி ''நீ ஒருத்தியே அழகி என இறுமாந்து இருந்தாய்; இனி, அழகு அனைவருக்கும் பொதுவாகும்; பல அழகியர் உண்டாவர்; உன் அழகு எவர் கண்ணிலும் படாது. இராமனை நீ காண, புனிதம் அடைவாய், என்னையும் அடைவாய்'' என்றான் கௌதமன். குறைபாடு அற்றவள் என்னும் இரண்டாம் பொருளில் 'அஹல்யா' என்ற சொல் இங்குக் குறிக்கப்படுகிறது.

(இ) காளிதாசன்

காளிதாசனும் அஹல்யை வரலாற்றை இருமுறை குறிப்பிட்டுள்ளான்: விசுவாமித்திரனும், இராம லக்ஷ்மணரும் மிதிலைக்குப் போகும் வழியில், அழகிய ஆசிரமத்தில், ஒரு மாலைப் பொழுது தங்கினார்கள். அங்கு, முன்பு, நீண்ட தவத்தோன் மனைவி, இந்திரனுக்குக் கணப்பொழுது (சற்று நேரம்) மனைவியாக இருந்தவள் ('வாஸவ க்ஷண களத்ரதாம்') கல்லாய்க் கிடந்தாள். அந்த கௌதம பத்தினி பாவங்களைப் போக்கும் இராமன் அடிப்பொடியின் அருளால், தன் பழைய உருவைப் பெற்றாள் என்று ரகுவம்சத்தில் (11. 33, 34)குறிப்பிடுகிறான்.

2. குமார ஸம்பவத்தில் (3.7) மற்றொரு முறை காளிதாசன் இக்கதையைக் கூறுகிறான். இந்திரனோடு பேசும்போது மன்மதன் 'எந்த பத்தினி, விரதங்களால் நலிந்து தன் காம வேட்கை நிறைவேறும் வழிகாணாமல் தவிக்கிறாளோ, அந்த அழகி, உன் மனத்தில் புகுந்துள்ளாள் எனின், அவள் நாணத்தைத் துறந்து, தானாக உன் கழுத்தில் கைகளைப் போட்டுக் கட்டி அணைத்துச்சொல்லச் செய்வேன்'' என்று அஹல்யையைக் குறிப்பிடுகிறான். இது இந்திரனது பிறன்மனை விழையும் இயல்பையும் அஹல்யையின் காமத்தையும் குறிப்பது என்பார் உரையாசிரியர். காமவேட்கை நிறைவேறாமல் தவிக்கிறாள் என்பதால், 'அஹல்யா' என்ற சொல்லின் முதற்பொருள் (உழப்படாதவள்) குறிக்கப்படுகிறது.

(ஈ) பரிபாடல் 19: 50-52

> **"இந்திரன் பூசை; இவள் அகலிகை; இவன்**
> **சென்ற கவுதமன்; சினன்உறக் கல்உரு**
> **ஒன்றிய படிஇது."**

என்ற அடிகளைத் தவிர, சங்க இலக்கியங்களில் இந்திரன் - அகலிகை - கவுதமன் கதைக்கு வேறு சான்று இலது. இந்திரன் பூனையாகப் போனதும், அகலிகை கல் உரு ஆனதும், வடமொழியில் காணாத, தமிழ்நாட்டில் வழங்கிய கதை.

பல புராணங்களில் பல மாறுதல்களோடு, கூட்டல் குறைத்தலோடு இக்கதை கூறப்பட்டுள்ளது. இராமாயணத்தின் பல கதைகளை எடுத்தாண்ட ஆழ்வார்கள் அகலிகையைக் கூறவே இல்லை.

4. கம்பன் காவியத்தில் அகலிகை

இந்த நிலையில் கம்பன் பாட்டை ஆராய்வோம். கோசிகனோடு இராமலக்குவர் மிதிலையை அடைந்தனர். மிதிலை நகருக்கு வெளியே, **"மனையின் மாட்சியை அழித்து இழி மாதவன் பன்னி, கனையும் மேட்டு உயர் கருங்கல் ஓர் வெள்ளிடைக் கண்டார்"** (இல்லறத்தின் பெருமையை அழித்து, கீழ்நிலைக்குப் போந்த கவுதமன் பத்தினி அருகில் உள்ள மேட்டில் உயர்ந்த கருங்கல்லாக வெட்டவெளியிலே கிடப்பதைக் கண்டனர்.) 'இழி.... பன்னி', 'உயர்....கல்' என்ற முரணணி, நிலையின் இழிந்தாலும், அகலிகை, உயர்ந்த கல்லாகக் கிடந்தாள் என்பதைக் குறிக்கும். **"கண்ட கல் மிசை காகுத்தன் கழல் துகள் கதுவ, (பன்னி) பண்டை வண்ணமாய் நின்றனள்."**

அகலிகை கல்லாகக் கிடந்ததும், இராமன் திருவடிப் பொடியால் பண்டை வண்ணம்பெற்றதும், வியாஸ - வால்மீகக் கதைகளில் இல்லை. காளிதாசனிடமிருந்தோ, தமிழ்நாட்டில் வழங்கிய கதைகளிலிருந்தோ, கம்பன் பெற்றவை.

கம்பன் இங்கு வால்மீகத் தொடர்புடைய உவமை ஒன்றை வைக்கிறான். "உண்ட பேதைமை மயக்கு அற, வேறுபட்டு, உருவம் கொண்டு, மெய் உணர்பவன் கழல் கூடியது ஒப்பப் பண்டை வண்ணமாய் நின்றனள்."

"உண்ட பேதைமை" : முன்பு உண்டான பிறப்பு என்னும் பேதைமை.

"மயக்கு அற" : பிறப்பால் உண்டான மயக்கம் நீங்க

"மெய் உணர்பவன்" ; மெய் உணர்வு பிறந்து அகப்புறப் பற்றுக்களை நீக்கியவன் ; ஆசார்யன்.

"கழல் கூடியது ஒப்ப" : திருவடிகளை அடைந்த நிலைமை போல.

"வேறுபட்டு" : கல் நிலையிலிருந்து வேறுபட்டு.

"பண்டை வண்ணமாய் நின்றனள்" : கல்லாகக் கிடந்தவள் பண்டை உருப் பெற்று எழுந்து நின்றாள்.

கல் ஆக இருந்த அசேதனப் பொருள் வேறுபட்டு, பண்டைய வண்ணமாகி, சேதனப் பொருள் ஆனது. உணர்வு, அறிவு, தானாக இயங்கும் தன்மை, இனப் பெருக்க இயல்பு, கால எண்ணம் போன்றவை அசேதனத்தைச் சேதனம் ஆக்குவன. அசேதனம் சேதன இயல்புகளைப் பெறுவது 'மெய் உணர்பவன் கழல்' கூடியது ஒக்கும், என்பது எண்ண வாதம் : அசேதனத்துக்கு உண்டாகும் சேதன இயல்பு பௌதிக மாறுதல்களால் நிகழும் என்பது பொருள் வாதம். அப்பொருள் வாதத்திற்கும் கம்பனில் ஓர் ஆதாரம் இருக்கிறது : "தாதுகு சோலை தோறும், சண்பகக் காவுதோறும், போதுஅவிழ் பொய்கை தோறும், புதுமணல் தடங்கள் தோறும், மாதவி வேலிப் பூக வனம்தோறும், வயல்கள் தோறும்— சரயு நீர்— **ஓதிய உடம்பு தோறும் உயிர் என உலாயது அன்றே"** (ஆற்றுப் படலம் : 20). அசேதனப் பொருள்களாகிய சோலை, கா, பொய்கை, தடங்கள், வனம், வயல்கள்–யாவும் உடம்பு போல அசேதனப் பொருள்கள். அவை நீரோடு சேர்ந்து, உடம்பு உயிர் பெற்றது போல இயங்கி, மரம் மலர் கொடி தானியங்கள் போன்றவற்றை ஆக்கின. ஆனால், இங்கு பௌதிக மாறுதல் எதுவும் நிகழவில்லை. 'மெய் உணர்பவன்' என்ற தொடர், மெய் உணர்வு பெற்றவன் என்ற பொருளில், புலன் அறிவினும் சிறந்ததோர் உணர்வையும், அவ்வுணர்வால் உண்டாகும் 'செம்பொருளை'யும் குறிக்கும். "ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே, மெய்யுணர்வில்லா தவர்க்கு", "பிறப்பென்னும்பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பதறிவு" என்ற குறட்பாக்களின் கருத்துக்கள் இவ் உவமானத்தில் ஆளப்பட்டுள்ளன. அச் 'செம்பொருள்' இராமன் ஒருவன் மெய் உணர்பவன் கழல்கூடிப் பேதைமை மயக்கு அறுவது போல, அகலிகை இராமன் கழல் பொடி கதுவலால் பண்டை வண்ணம் பெற்றாள்.

அகலிகை 'பண்டை வண்ணமாய்' நின்றது அவள் பிறப்பில் இதுகாறும் செய்த வினைகளின் பயனை அனுபவிப்பதற்காகவே.

அந்த வினைகள் யாவை என்பதை விளக்கும் பொருட்டு, விசுவாமித்திரன் முன் நடந்த கதையை இராமனுக்குச் சொல்கிறான்.

விசுவாமித்திரன் கதை சொல்லும் திறன் வியக்கத்தக்கது. அவன் கூறும் ஒவ்வொரு வாக்கியமும் மேலும் கேட்கும் ஆவலைத் தூண்டுவதாக இருக்கும். இவள்,

''தீவினை நயந்து (விரும்பி) செய்த தேவர்கோன்
தனக்குச் செங்கண்
ஆயிரம் அளித்தோன், பன்னி,
அகலிகை ஆகும்''

என்று தேவேந்திரனது செயலைக் குறிப்பிடாமலே, அது 'தீவினை' என்ற தன் முடிவை இராமன் மனத்தில் நுழைக்கிறான் விசுவாமித்திரன். தேவேந்திரனுக்கு ஆயிரம் கண்களை இவள் அளித்தாளாம்! வால்மீகத்தில், இந்திரன் கௌதம ஆசிரமத்துக்கு வரும்போதே 'ஸஹஸ்ராக்ஷ:' (ஆயிரம் கண்ணன்) எனப்படுகிறான். ஆயிரம் கண்கள் இவள் அளித்தவை அல்ல. முனிவன் சாபத்தாலும் வந்தன அல்ல. முன்பே இருந்தன ஆயிரம் கண்கள்.

ஒரு தமிழ்ப் புலவர், வேடிக்கையாக, ஆயிரம் கண்களை இந்திரனுக்குக் கொடுத்தது மன்மதன் என்கிறார்.

'விண்எலாம் தான்புரந்த வேந்தனுக்கு
மெய்ந் நிறைந்த
கண்எலாம் நீபொருத காயம் அன்றோ?'
(—மதனமாலை)

இயற்கையான ஆவலோடு, இராமன், **''அன்னையே அனையாட்கு இங்ஙன் அடுத்தது முன் ஊழ்வினையினாலோ? நடு ஒன்று முடிந்தது உண்டோ?''** என வினவ, கதை வெளிவருகிறது: ''இந்திரன் சூது அறியாத நவ்வி(மான்) போன்ற விழியாள், (அகலிகை)மேல் ஆசை கொண்டான்; அவன் உள்ளத்தில் அவளுடைய வேல் விழியும், மன்மதனது அம்பும் ஒருங்கே பாய்ந்தன; ஆசையால் அறிவு இழந்தான். முனிவனுக்கு வஞ்சம் செய்து, அவனது உருவம் கொண்டு பர்ணசாலைக்குள் புகுந்தான். புகுந்து, அகலிகையோடு **'புதுமண மதுஇன் தேறல் ஒக்க உண்டு இருத்தலோடும் (அவள் உணர்ந்தனள்'**.

பல ஆண்டுகள் கவுதமனோடு வாழ்ந்தும், புதிதாக மணம் செய்துகொண்டவர் போல இன்பம் துய்த்தனர் என்பதால், பல காலம் அவள் காம இன்பம் துய்த்திலள் என்று எண்ண இடம் தருகிறது. 'மனையின் மாட்சி'யை அழிக்க முதல் காரணமானவன் கவுதமன் என்பதும் தொனிக்கிறது. இக்கருத்தை ஷேக்ஸ்பியரின் எமிலியா வன்மையாகச் சொல்லுகிறாள்: ''மனை மாட்சியின் வீழ்ச்சிக்குக் காரணம் கணவன்; அவள்பால், தன் கடமையைச் செய்யாது மனைவியைக் கட்டுப்படுத்துகிறான். பெண்ணுக்கும் உணர்ச்சி உண்டு, புலன்கள் உண்டு என்பதை ஆண்கள் அறியாரோ?'' (ஒதல்லோ, 4.3.89, 97-8) என்பது எமிலியாவின் வாக்கு.

'மணம்' முகர உரியது; **'மது'** (கள்) மயக்கம் தருவது. மயக்கம் இன்ப நுகர்ச்சிக்குத் தடை ஆகும். எனவே, கம்பன் **'இன் தேறல்'** (இனிய தேன்) என்கிறான். பெண்மைப்பூ முகை அவிழ்ந்ததும், அதில் தோன்றிய, மெல்லிய, காமப் புது மணத்தை முகரவந்த வண்டு, அப்பூவின் மதுவை மாந்துகிறது. 'புது' மணமாவது நெடுங்காலம் மோக்கப்படாத, நுகரப்படாத, மணம்.

'ஒக்க' என்பதற்கு, ஒரு தன்மைத்தாய், இருவரும் ஒத்த அன்பினராய் என்று பொருள். ''மெய்வரு போகம். ஒக்க உடன் உண்டு'', ''மைந்தர்க்கும் மாதரார்க்கும் மனம் என்பது ஒன்றே அன்றோ'' என, வேறு இடங்களில் கவிச்சக்கரவர்த்தி கூறுவார். இந்திரன் மையலால் 'தக்க இன்ன, தகாதன இன்ன' என்று தேறும் அறிவு நீங்கினான்.

அகலிகை அறிவு நீங்கவில்லை. இத்தகைய இன்பம் கவுதமனோடு முன்பு அனுபவித்திருந்தாளோ என்பதை நாம் அறியோம். அவள் 'அஹல்யா' - உழப்படாதவள் - ஆதலின் இது 'புதுமண மதுஇன் தேறல்' ஆயிற்று. எவ்வாறாயினும், 'அவன் கவுதமன் அல்லன்' என 'உணர்ந்தனள்'; உணர்ந்த பின்பும் இது **'தக்கது அன்று என்று ஓராள்'**

'தாழ்ந்தனள் இருப்ப' - இந்திரனுக்குக் கீழே படிந்து, அவள் தாழ்ந்தும் அவன் அவள் மேலும் இருப்ப,—மேலும் புணர்ச்சியை விரும்பிக் காலம் தாழ்த்தனளாக 'இருப்ப',—

'தாழா முக்கணான் அனைய ஆற்றல் முனிவனும் முடுகி வந்தான்.' இவள் 'தாழ்ந்தனள்'; முனிவன் 'தாழான்' என்பது முரணணி. முனிவன் விரைந்து வந்தான்.

'சாபம்' என்ற சொல் இரு பொருள்கள் உடையது: வில், தெறுமொழி. வில், அம்புகளைப் பொழியும்; முனிவன் வாய், தெறுமொழிகளைப் பொழியும். இராமனுடைய அம்புகள் முனிவர் மொழிகளைப் போல, வேக

" அறம் பழுக்கும் தருவே யென்குருவே யென்றன்
ஆருயிர்க் கொருதுணையே யரசே பூவை
நிறம் பழுக்க அழகொழுகும் வடிவக் குன்றே "

என்று வடலூர் வள்ளலார் இராமனைப் பாடிப் பரவுவார். உன்னுதோறும் உன்னுதோறும் உள்ளமெல்லாம் இனித்து ஊறுகின்ற தெள்ளமுதமாக அவன் அருள்மாரி பொழிகின்றான், இராமபிரானது திருப்பெயரைச் சொல்லி தொட்டதெல்லாம் துலங்கும்; பட்டதெல்லாம் பரிமளிக்கும். கசிந்து உருகும் அடியார்களுக்கு ஊனாய், உயிராய், உணர்வாய் உட்கலந்து தேனாய், இன் அமுதமாய், தீங்கரும்பின் கட்டியுமாய் மதுரிக்கும் ஜானகி மணாளனது திவ்ய நாமம் இவ் வையமெல்லாம் ஒலிக்கச் செய்யும் உங்களது அயராத சீரிய முயற்சிகளுக்கு எங்களது நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்.

உங்களது " கம்பன் மணி மலர் " - 1978 எல்லா அம்சங்களிலும் சுடர்விட்டு பூத்துக் குலுங்க எல்லாம் வல்லானை இறைஞ்சுகின்றோம்.

வணக்கம்.

மும் கூர்மையும், நெடுந்தூரம் பாயும் வலிமையும் உடையன என்று குறிப்பதற்கு, 'சொல் ஒக்கும் கடிய வேகச் சுடுசரம்', 'வைவன முனிவர் சொல் அனைய வாளிகள்' எனப் பல இடங்களில் கூறிய கம்பன், இங்குச் சரத்தை உபமானமாகவும் சொல்லை உபமேயமாகவும் மாற்றி அமைத்துக்கொண்டு, **நின்கைச் சுடுசரம் அனைய சொல்லால் முனிவன் ஏயினன்'** (எய்தான்) என்கிறார். அசசொல் ''ஆயிர மாதர்க் குள்ள அறிகுறி உனக்கு உண்டாக!'' என்பது; வேறு கதைகளில் நாம் காணாத சாபம் !

இந்திரன் நாணம் எய்திப் பழியினொடு போனான். பூசை (பூனை)யாகப் போனான் என்றது பரிபாடலின் எதிரொலி. அமரர்கள், பிரமன் வேண்ட, முனிவன் முனிவு தீர்ந்து, அவ் 'அறிகுறி'களைக் கண்கள் ஆக்கினான்.

பின்னை, முனிவன் '**மெல்லியலாளை**'— கற்பு என்னும் திண்மை இல்லாதவளை— நோக்கி, '**விலைமகள் அனைய நீயும் கல்இயல் ஆதி**' என்றான். வஞ்சத்தால் தொடங்கி, மன இசைவால் நிறைவேறிய, இன்பம் துய்த்தவளை 'விலைமகள்' என முனிவன் கூறியது சினத்தால் உதித்த சொல்லே அன்றி, உள்ளபடி பொருள் பொதிந்த சொல் அன்று. முன்பே 'அன்னையே அனையாள்' எனப் போற்றியிருந்த இராமன், அவளது வரலாற்றை அறிந்த பின்பு, 'அன்னை' என்றே வணங்கினான்.

இராமனைக் காண்கையில், சாபம் தவிரும் என்றது வால்மீகம். ('**யாவத் ராமஸ்ய தர்சனம் சாபஸ்ய அந்தம்**' (I 49-16). இராமனது திருவடித்துகள் (**ராமபாத ரஜஸாம் அனுக்ரஹ** I 10-34) சாபத்தைப் போக்கியது ரகுவம்சத்திலும் கம்பனிலும். இராமன் தாடகையைக் கையால் கொன்று, அகலிகையைக் காலால் அருளிய வியப்புத் தோன்ற, மிதிலை நகரப் பெண்கள் அவனுடைய தோளிலும் தாளிலும் ஈடுபட்டதாகக் கவி சொல்ல வாய்ப்பு ஏற்பட்டது.

5. கதையின் தகுதி

இராமன், வதிட்டனிடம் 'உவள்அறு (அழிதல் அற்ற) மறையினோடு ஒழிவுஅறு கலையும்' கற்றவன். நடை (ஒழுக்கம்) அறிந்தவன். விசுவாமித்திரனால் படைக்கலம் அருளப் பெற்றவன். பால் உணர்ச்சி அரும்பத்தொடங்கும் பருவத்தன்; முதிரா இளைஞன். 'வரம்பில் பேர் அழகினளை மணம் செய்வான்' போகும் வழியில் இத்தகைய கதைகள் அவனுக்குக் கூறத் தக்கனவா ?

கம்பனிலும் வால்மீகத்தில் விசுவாமித்திரன் இராமலக்குவரை அழைத்துக்கொண்டு காமனுச்சிரமத்திலிருந்து மிதிலை வருமளவும் சொன்ன கதைகள் பல : காற்றுக் கடவுளால் மானபங்கம் அடைந்த பெண்கள், கங்கையின் பிறப்பு, சிவ-பார்வதி திருமணம், சகரர் - பகீரதன் - கங்கை பூமிக்கு இழிந்தது, பாற்கடல் கடைந்தது, விசுவாமித்திரனது வரலாறு- இப்படிப் பல. அவற்றுள், கருச்சிதைவு, பலவந்தமான கற்பழிப்பு, விஷம் வைத்துக் கொல்லுதல், குழந்தைகளை நீரில் அமிழ்த்திக் கொல்லுதல் போன்றன பல கொடிய செயல்களும் பால்உணர்ச்சியின் இழிவான பகுதிகளும் வெளிப்படையாக, மறைக்கப் படாமலே கூறப்படுகின்றன. அகலிகையின் செயல் அவள் இணக்கத்தோடு நடைபெறுவது. இவற்றைப் பற்றி ஒளிவு மறைவு இன்றிப் பேசுவது வால்மீகி வாழ்ந்த காலத்தில் மக்களின் இயல்பாக இருந்திருக்கக்கூடும் : அது உணர்ச்சித் தடைகள், சொல் தடைகள் உண்டாகாத காலம். உள்ளதை மறைத்து, மேற்பூச்சு செய்யாத காலம்.

கம்பன் வாழ்ந்த காலம் சங்க கால இயல் பெளிமை கைவிடப்பட்ட காலம். பொய்யும் வழுவும் புகுந்திருந்த காலம். செயற்கைத் தளைகள் உண்டாகிவிட்ட காலம். காலத்திற்கு ஒவ்வாது என அக்கதைகளைக் கவிச்சக்கரவர்த்தி விட்டுவிட்டார் என்று தோன்றுகிறது.

இன்று, செயற்கைத் தளைகளும் மரபு ஒழுங்கு முறைகளும், சமூக நியதிகளும் பெருகும் மலிந்துள்ள நிலைமையில், அக்கதைகள் குழந்தைகளுக்குச் சொல்லத்தக்கன அல்ல என்று அண்மைக் காலம் வரை நாம் எண்ணினோம். அக்காலமும் மாறி, கருத்துக்களும் கதை சொல்லும் முறையும் முன்பு இருந்த நிலைக்குத் திரும்பி உள்ளன.

6. பாதுகா ஸஹஸ்ரத்தில்

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் ''பிராட்டியோடு சேர்ந்த பெருமாளே அனுக்ரஹிப்பார்; பிராட்டி அருகில் இல்லாதபோது நிக்ரஹம் நிகழலாம், வாலி இராவணாதியரைப் போலே'' என்ற ஒரு கருத்து உண்டு. பிராட்டி இல்லாதபோது, சீதையின் திருமணத்துக்கு

முன்பே, இராமன் அகலிகைக்கு அருள்புரிந்த தற்கு ரஸோக்தியாக ஸ்ரீ வேதாந்த தேசிகன் ஒரு காரணம் கூறுகிறார்.

**"ஸஞ்சாரயந்தீ பதம் அங்வதிஷ்ட: ஸஹாய
க்ருத்யம், மணி பாதரக்ஷே,
மாதஸ்த்வம் ஏகா மநுவம்ச கோப்து:
கோபாயதோ கௌதம தர்மபத்நீ"**

(பாதுகா ஸஹஸ்ரம் - 282)

"பாதுகைத் தாயே! மனுநீதி புரக்கும் இராமன், கவுதமனுடைய இல்லறக்கிழத்தியைக் காத்தது, அவன் சஞ்சாரம் செய்த காலத்தில், நீ ஒருத்தி அவன் திருவடியில் இருந்து செய்த உதவியால் அன்றோ?"

பாதுகை, பிராட்டியின் ஸ்தானத்தில், இராமனை அகலாது இருந்து தர்ம பத்நீ ஆகிய அகலிகைக்கு அவன் அருள் உதவியது என்பது கருத்து.

7. முடிவுரை

சமூக வளர்ச்சியோடு ஒன்றி, கதைகள் தோன்றி, சூழ்நிலைக்கு ஏற்பப் பலவேறு உருப் பெற்று, கவிஞர் நாவில் பயின்று, மக்கள் மனத்தில் பதிந்து, கோட்பாடுகளுக்குக் களன் ஆகி, சிதைந்து, விரிந்து, பரந்தமைக்கு அகலிகைக் கதை ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

ஒரு சிக்கலான பாத்திரம்

கி. பக்ஷிராஜன்
வழக்குரைஞர்.

காப்பியக் கலைஞன் நூலை உள்ளத்தே உருவாக்கும்போது அக்காப்பியத்துக்குரிய பாத்திரங்களைப் படைத்துக்கொள்கிருன். காப்பிய அமைப்பிலே பாத்திரப் படைப்பு ஒரு முக்கியமான கலையாகும். இக்கலையிலே கை தேர்ந்தவர் கம்பர் என்பது அவரது இராமாயணத்தை முழுதும் கற்போர்க்கு விளங்கும். அவர் படைக்கும் பாத்திரங்கள் பலதரப்பட்டவை. எல்லாப் பாத்திரங்களும் காப்பிய முதலிலிருந்து முடிவு வரை இரா. அப்படி இருக்க வேண்டிய நியதியுமில்லை. காப்பியக் கட்டுக்கோப்புக்கு எங்கெங்கே எப்பாத்திரங்கள் தேவையோ அவை படைக்கப்பெற்று, எதுவரை இயங்க வேண்டுமோ, அதுவரை இயங்கி, அப்பால் மறைந்தும் விடுவதைக் காண்கிருேம். சில பாத்திரங்கள் பெயரைக்கூட நினைவில் கொள்ள இயலாத அளவில் தோன்றிப் பின் அவை பற்றிய செய்தி ஒன்றுமே தெரியாது விடப்படுகின்றன. ஆனுல், காப்பியத்தை முழுதும் படிக்கும் ஒருவருக்கு இங்ஙனம் சில பாத்திரங்கள் அமைக்கப்பெறுவது குறையாகவே தோன்றுவதில்லை. கவி தன் காப்பியக் கதைக்கு உதவுகின்ற பாத்திரங்களையே விரித்துக் கூறி, கதையோடு எந்தவித முக்கியத் தொடர்பும் இல்லாத பாத்திரங்களைப் பரக்கப் பேசுகின்றிலன்.

உதாரணமாக, இராமன் தம்பியர் மூவர். அவர்கள் பெயர் நமக்குத் தெரியும். காப்பியத்தின் அடி முதல் முடிவுவரை அவர்கள் இயங்குகிருர்கள். இராமன் மனைவி சீதை. அவள் காப்பியத்தின் அச்சாணியாகிருள். ஆனுல், இராமன் தம்பியரின் மனைவிமார்கள் யாவர்? கம்பரது காப்பியத்தில் அவர் பெயர் இல்லை. கடிமணப் படலத்தே இராமன் சீதை கரம் பற்றிய பின்,

"கொய்ந்நிறை தார் சத்து வசப்போர்
நெய்ந்நிறை வேலவன் மங்கையர் நேர்ந்தவர்
மைந்நிறை கண்ணினர் வானுறை நீரார்
மெய்ந்நிறை மூவரை மூவரும் வேட்டார்"

என்ற ஒரு செய்யுள் மூலமாகச்சீதை கல்யாணத்தைத் தொடர்ந்தே இராமன் தம்பியர் மூவருக்கும் குசத்துவசன் பெண்கள் மூவரும் மனைவிகளாயினர் என்ற ஒரு செய்திதான் தருகிருர் கம்பர். அவர்கள் பெயர்கூடக் கூறப்பெறவில்லை. ஆனுல், அக்குறை காப்பியத்தைப் படிக்கும்போது தென்படுவதில்லை. அம்மூன்று பெண்களும் கதைப்போக்கிலே எந்நிகழ்ச்சிக்கும் உதவவில்லை. அதனுல் அவர்கள் பெயர்கள் விடப்பட்டதுகூடக் குறையாகப் படவில்லை.

பாத்திரங்களைப் படைக்கும் கவிஞன் அப்பாத்திரங்களின் குணங்களைக் கவிக்கூற்றுகச் சிலவிடங்களில் கூறுகிருன். சிலவற்றை அவற்றின் செயல்கள் மூலமாகவும் அப்பாத்திரங்களின் பேச்சுகள் மூலமும் நம்மை உய்த்துணர வைக்கிருன். இப்படிக் கவிக்கூற்று, பாத்திரங்களின் செயல், பேச்சு - இவற்றின் மூலம் ஒரு பாத்திரத்தின் குணங்கள், தன்மைகள் என்னவென்பதை நாம் அறிந்துகொள்ள முடிகிறது. ஆனுல், கம்பன் படைத்த பாத்திரங்களில் ஒரு பாத்திரம் மட்டும் எம்முறையில் ஆய்ந்தாலும் அதன் உண்மைத் தன்மை என்னவென்பதை நாம் அறிய முடியாதபடி அமைந்துள்ளது. அதன் குணங்களிலும் செயல்களி

லும் காணப்படும் முரண்பாடுகளினால் அதன் உண்மைத் தன்மையை அறிவதில் சிக்கல் ஏற்படுகிறதைக் காண்கிறோம். அந்தச் சிக்கலான பாத்திரந்தான் மகோதரன். அவன் தன்மையை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

கம்பரது காப்பியம் 'இராமாவதாரம்'. இது, கேவலம், ஒரு மானிட அரச குமாரன் கதையல்ல. பரம்பொருள், அறந்தலை நிறுத்தவும், தக்கோர் துயர் துடைக்கவும், இவ்விரு நலனும் கிட்டத் தீயோர் இறந்துக நூறவும், தன் மேன்மையை மறைத்து, மனித உருவில் கீழிறங்கி வந்த வரலாற்றைக் கூறுவது. கதைப் போக்கை நாம் ஊன்றி நோக்கினால், அறம் தளர்ந்து நின்ற நிலையையும், மறம் மேலோங்கி அறம் தலையெடுக்கவொட்டாது செய்து நின்ற தன்மையையும் காண்கிறோம். இது மட்டுமல்ல. மறம் இத்துணை வலிமை பெறுவதற்கு அறமே முதலில் துணைநின்றது போலவும் தோன்றும். அறத்தால் பெற்ற வலிமையே மறத்துக்கு வித்தாய் அமைவது போலவும் காண்கிறோம். ''அறத்தின் வழி வேள்வி யாற்றித்தானே நீ இத்தனை செல்வமும் வலிமையும் பெற்றாய். அப்படி இருந்தும் 'தப்புதி அறத்தை ஏழாய் தருமத்தைக் காமியாதே' என்றும், எல்லா உலகும் உன்னேவல் செய்யும் படியான செல்வம் நிற்கியைந்த வென்றால் ''பாவமோ முன்நீ செய்த தருமமோ தெரியப் பாராய்'' என்றும் அவனைத் தூற்றுகின்றாள் சீதை. சீதையை விடுவோம். இராவணனுடைய மாமன் கேட்கிறான் அவனை நோக்கி, ''திறத்தினாலே செய்தவம் முற்றித் திருவுற்றாய், மறத்திறனாலோ? சொல்லுதி'' என்று. எனவே, மறம் வலி பெற உதவியது அறம் என ஒருவழியாகக் கூறலாமல்லவா? இவன் வலி பெற்று மறம் விளைப்பான் என்று யோசித்து, அறத்தின்வழியாற்றப்பெற்ற தவம், இராவணனுக்கு வரம் பெற உதவாது நிற்கவில்லை. அதன் நியதியில் அது நின்று, அத்தவத்துக்குரிய வரத்தை அளித்தது. ''உலக நியதி, அறம் வெல்லும்: பாவம் தோற்கும்'' என்பதே. எத்துணைதான் மறம் வலி பெற்று இயங்கினாலும் அது தன் மறச்செய்கையின் மூலம் தன்னையும் அறியாமல் அறத்துக்கு உதவவும் செய்துவிடலாமல்லவா? அத்தகைய ஒரு நிலையைத்தான் மகோதரன் என்னும் பாத்திரம் நமக்குக் காட்டுகிறதோ என்று தோன்றும்படி அமைகிறது அப்பாத்திரம்.

கம்பராமாயணத்திலே இலங்கை எரியுண்ட பின் இராவணன் கூட்டிய மந்திராலோசனையில் தான் நாம் மகோதரனை முதன்முதலாகச் சந்திக்கிறோம். பின்னால் நிகழும் நிகழ்ச்சிகளின் மூலம் அவன் இராவணனுக்கு இணைபிரியாத் தோழனாய், மந்திரியாய், சேனைத் தலைவனாய் இயங்குவதை அறிகிறோம். அவன் வஞ்சகத்தின் உரு. ''தாயை யாயினும் சலித்திடு வஞ்சனை தவிரான் மாயை யானுளன் மகோதரன் என்றொரு மறவோன்'' என வீடணன் இராமனுக்குக் கூறுகிறான். ''மாயைகள் பலவும் வல்ல மகோதரன்' என்பது கவிக்கூற்று. வெறும் மாயை மட்டுமல்ல, வலிமையும் உடையவன் என்பதைக் குறிக்கவே 'மறவோன்' என வீடணன் கூறுகிறான்.

''சுட்டது குரங்கெரி சூறை யாடிடக்
கெட்டது கொடிநகர் கிளையும் நண்பரும்
பட்டனர் பரிபவம் பரந்த தெங்கணும்
இட்டதிவ் வரியணை ; இருந்த தென்னுடல்''

என்று தனது தன்மானம் பெற்ற இழிவைப் பகிரங்கமாகக் கூறி அங்கலாய்க்கிறான் இராவணன். மறவோனான மகோதரன் எழுகிறான். இங்கு இவனைக் 'கற்றடந்தோளினான்' என்ற அடைகொடுத்துக் காட்டுவார் கம்பர்.

மற்ற மந்திரப் பிரதானிகள் கூறுகின்ற ஆலோசனைகளைவிட மகோதரன் வார்த்தைகளுக்கு மதிப்பு அதிகம் இராவணனுக்கு. அவன் கூறுவான்: ''எல்லாவுயிர்களையும் கவரும் யமதருமன் உன் வலிக்குத் தோற்று, நீ இடும் கட்டளைக்குப் பணிந்து ஏவல் செய்கிறானே. (அப்படிப்பட்டவன், போர் வந்தால் உன்னுடைய - உன் நண்பர்களுடைய - உயிர்களை எப்படிக் கவர முடியும் - என்பது குறிப்பு.) எனவே, போரில் உயிர் போகுமோ என்று அஞ்ச இடமில்லை. மேலும், ''இலங்கேச்வரா உன் ஆற்றல் என்ன இலேசானதா? ஸம்ஹார மூர்த்தியான அந்த சாக்ஷாத் பரமேச்வரனை அவன் அமர்ந்துறையும் கைலயங்கிரியோடு பெயர்த்தெடுத்த வலிமையுடையவன் நீ. அத்தகைய வலியுடைய நீ இப்போது மரச்சுள்ளியில் தாவும் குரங்கின் வலிமைக்கஞ்சுவது போலப்பேசுகிறாயே. இது என்ன விளையாட்டா? எங்களை ஆழம் பார்க்கிறாயா? உனது திக்கு விசயத்தின்போது வானிலும் மண்ணிலும் இறந்த மக்கள், தேவர், தேவர் தலைவர்கள்,

நாட்டுக்கு நாயகர்கள் எத்தனை பேர் என்பதைக் கணக்கெடுத்துக் கூறுபவர் யார்? எனவே, உன் கையில் பகையெனப்பட்டவர் மாள்வதுதானே இதுவரையுள்ள நிகழ்வு. இந்த மனிதரிருவரையும், இக்குரங்குகளையும் தொலைக்க உன்னுடைய பேராற்றலைச் செயல்படுத்துவது தகாது. பேசாமல் என்னை அனுப்பு. நான் முடித்துவிடுகிறேன். அனைவரையும்'' என்று வீரவாதம் செய்கிறான். இங்கே கம்பர் தந்த கவிகள் ஐந்து. முதற்பாட்டிலே ''கற்றடந் தோளினன் எரியுங் கண்ணின'னன மகோதரன், 'முற்றுற நோக்கினன்' எனக் கூறினார் கம்பர். எது முற்றுற? இராவணனும் அரச்சர் குலமும் முற்றுறவா (அழியவா) 'வஞ்சகர் தந்தலை அறுத்திடர் தணிப்பன் தாரணிக்கு' என்று பொற்பீடமீதிருந்து கறைமிடற்றிறை முன்னாக வந்த தேவர்களுக்குத் திருவோடும் மருவியோர் செம்பொற் குன்றின்மேல் வருவது போல் கலுழன்மேல் வந்து தோன்றி வாக்களித்தானே, கருமுகில் என வளர் கருணையங் கடல், அவ்வாக்கு முற்றுப்பெறவா? இரண்டுமே முற்றுப்பெற்றன என்பார் போல் கம்பர் 'முடிவு மன்னாதால்' என்கிறார். ஐந்தாம் பாடல் ஈற்றில் 'உன் பகை முடிக்குவன் யான் என முடியக் கூறினான்' என முடிக்கிறார். மற்றவர்கள் பேசியவற்றில் காணப்படாத 'முற்றுற நோக்கினன்', 'முடியக் கூறினான்' என்ற வாசகங்கள் கம்பர் நாவில் இம்மகோதரன் பேச்சில் மட்டும் உதயமானது கவனிக்கத்தக்கது. இப்பதங்களின் பொதி பொருளை நாம் முடிவில் காண்போம்.

முதல் நாள் போர் முடிகிறது. நிமிர்ந்து நின்ற பத்துத் தலைகளும் நாணத்தால் கவிழ்ந்து, 'பூதலமென்னும் மாது தன்னையே நோக்கி' இலங்கை புக்க ராவணன் உள்ளமும் உடலும் ஓய்ந்து போய் மஞ்சத்தில் சாய்கிறான். அன்றையப் போரையே அவன் உள்ளம் பன்னிப்பன்னி நினைக்கிறது. பாட்டன் மாலியவான் வருகிறான். இராவணனது அப்போதைய மன நிலையில் அவனுக்கு அறிவு புகட்டலாமென்று தீர்மானித்து அவனைக் கிட்டி, ''பெருந்தவத்தால் பலவரபலம் பெற்றவனே!'' என விளித்து, ''என்னுற்ற பெற்றி'' என மெல்ல வினவுகிறான். இராவணன் இராமனது ஆற்றலுக்கும் அழகுக்கும் திருமுகப் பொலிவுக்கும் ஒரு காவியமே பாடிவிடுகிறான். கடைசியில் 'நாசம் வந்துற்ற காலை நல்லதோர் பகையைப் பெற்றேன். பூசல் வண்டறையும் தாராய் இதுவிங்குப் புகுந்ததெ'ன்றான். இராவணனது ஆணவம் ஒடுங்கி விவேகம் தலையெடுத்திருப்பது போல் தோன்றுகிறது பாட்டனுக்கு. 'முன்னுரைத்தேனை வாளா முனிந்தனை. முனியா உம்பி இன்னுரைப் பொருளும் கேளாய்! (அவன்) ஏதுவுண்டென்று இரணியன் பட்டதைச் சுட்டியும் நீ உணர்ந்தாயில்லை' என்று தொடங்கி, 'இனியாவது உன் அசந்தையை விடு. அன்றேல் 'கிளை தரு சுற்றம் சேண்மை தம் கல்விச் செல்வம் களை வரு தானையோடும் அழிவது காண்டி' என்று வரும் விளைவைச் சுட்டி அவனைத் திருத்தத் தொடங்குகிறான். ஒருவேளை இராவணன் விவேகம் பெற்றுத் திருந்தியும் விடலாம் என்று தோன்றுகிறது படிக்கும் நமக்கு. ஆனால்?

இராவணன் ஓய்ந்து வந்ததைக் காணத் தான் செய்கிறான் மகோதரன். தன் நண்பனுக்கு ஒரு ஆறுதல் கூறவில்லை. மறைவிலிருந்து இராவணன் செயல்களைக் கவனிக்கிறான். பாட்டன் உள்ளே சென்றதும், மறைந்து அருகில் செல்கிறான். உள்ளே இராவணன் பாடிய ராம காவியத்தையும் மாலியவான் அறிவுரைத் தொடக்கத்தையும் கேட்கிறான். படிக்கும் நம்மைப் போலவே அவனுள்ளமும் ஒரு வேளை இராவணன் திருந்தலாம் என்றுதானே நினைத்திருக்க வேண்டும்? 'தனது இந்திரப் பெரும்பதம் இழவாமல் இராவணன் செயல்பட்டால் நலந்தானே என்றுதானே நண்பன் நினைக்க வேண்டும்? ஆனால், மகோதரனுக்கு இராவணன் திருந்திவிடுவானோ என்று உள்ளம் பதறுகிறது. அது திருந்தாவகை என்ன செய்யலாம் என்று அவன் மனம் விரைவாக எண்ணுகிறது. சட்டென்று உதயமாகின்றது ஒரு வழி.

உள்ளே விரைகிறான். இராவணனது பாட்டன் என்பதையும் மறந்து, மாலியவானை நோக்கி, நெருப்பென விழித்து, 'என்ன அற்பத்தனமான பேச்சைப் பேசுகிறாய்?' என்று அவனைப் பழிக்கிறான். தன் நண்பனது ஆணவம் தலையெடுக்க வேண்டிப் பேசத் தொடங்குகிறான். முதலிலே சீதையை விடுவதில்லை என்பதல்லவா இராவணனது முடிவான கோட்பாடு? இலங்கேசா! நீ உத்தமன். தான் எடுத்த முடிவில் வெற்றியோ தோல்வியோ? எடுத்த முடிவில் நிலைத்து நிற்பதல்லவா உத்தமர்க்குரியது? சீதை நினைவு கிளப்பப்பெற்று அந்த அடிப்படையிலே மேலும் உருத பேருறு

திகள் ஆணியறைந்தாற்போல் மேன்மேலும் அழுத்தப்பெறுகின்றன. திரிபுரசம்மாரி, உல களந்தான் இவர்களை ஒடுக்கிய வலி ; வெற்றி தோல்வி நிரந்தரமன்று ; குரங்குக்குப் பயப் படுவதா ? முன்னுனக்கிறைவரான மூவரும் தோற்றார் ; உலக சாம்ராஜ்யம் பெற்றாய் ; நீ அற்ப மானிடரை ஒரு பொருளாக மதிப் பதா ? வெட்கம் ! வெட்கம் ! அதெல்லாம் சரி. அரசே ! தாங்கள் என்ன கும்பகர்ணனை மறந்துவிட்டீர்களே !'' என்று ஒரு சொற் பொழிவாற்றி முடிக்கிறான். அவன் நினைவு வெற்றி பெற்றுவிடுகிறது. சீதைபால் ஆசை யும், அதை நிறைவேற்றத் துடிக்கும் ஆணவ மும் ஆரவாரத்தோடு கிளம்புகின்றன இராவ ணன் உள்ளத்திலே. ''பேரறிவாள ! 'சிறிற் பெறுதியே என்பால் வைத்த அன்பினுக் கவதி யுண்டோ ? உறுதியே சொன்னாய்!' என்று நண்பனைப் பாராட்டுகிறான் இராவணன். 'உள்ளமும் வேறுபட்டான்' என்றார் கம்பர். வேறுபாடு நிகழ்ந்தது யார் முயற்சியால் ? திருந்தப் பக்குவமான உள்ளம் வேறுபடச் செய்வதில் மகோதரனுக்கு ஏன் இத்துணை ஆர்வம் ?

கும்பகர்ணன் வரவழைக்கப்படுகிறான். அண்ணனுக்கு அறிவுரை கூறுகிறான். தன் வலியைக் கூறி, ''என்னை வென்றுளரெனில் இலங்கை காவல ! உன்னை வென்றுயருதல் உண்மை. ஆதலால், 'பொன்றுவன் பொன் றினல் பொலங்கொள் தோளியை நன்றெனை நாயக விடுதி நன்றரோ' என்ற எச்சரிக்கை யோடு கலந்து வேண்டுகிறான். ஆனால், இரா வணன் உள்ளத்திலே,'பேரறிவாளனும் அவதி யில்லா அன்பும்' கொண்ட மகோதரனுடைய உறுதியல்லவா இறுக உறைத்துள்ளது ? அதனால்தானே நன்மை கூறிய தம்பியை, ''எனக்கு அறிவுடை அமைச்சன்நீயல்லை' என்று முதலிலேயே ஒதுக்கிவிடுகிறான். திருத்த முடி யாத அண்ணனுக்குச் சோற்றுக் கடன் கழிக்கச் செல்கிறான் கும்பகருணன்.

அங்கே போர். இங்கே அரண்மனையிலே இருவர் தனியாக அமர்ந்து எண்ணமிடுகின்ற னர். ஒருவன் இராவணன். மற்றவன் மகோ தரன். போர் முடிவில் இராவணனுக்கு ஐய மில்லை. அதுதான் நண்பன் முன்னமே,''கும்ப கர்ணன், தன்னைக் கூவி ஏவுதியென்னில் ஐய ! ஓங்கலே போல் வான் மேனி காணவே ஒளிப் பரன்றே ! தாங்குவார் செரு முன்னென்னில் தாபதர் உயிரைத் தானே வாங்கும்'' என்று கூறியிருக்கிறானே. அதுதான் சீரிதிற்றெரிந்து செப்பிய உறுதியாயிற்றே. சரி. மனிதர் இருவரும் இறக்கிறார்கள். ஏன் அவர்கள் இறந்துவிட்டார்கள் என்றுதானே இராவணன் தீர்மானிக்கிறான். இனி, இராவணன்தான் கதி என்று சீதை அவனை ஏற்றுக்கொண்டு விடுவாளா ? அதற்கு முன்னமே அவள் உள்ளத் தைப் பதப்படுத்தி வைப்பது நல்லதல்லவா என எண்ணமிடுகிறது இராவணன் உள்ளம். மகோதரன்தான் இருக்கிறானே வழி சொல்ல. வருகிறான் மகோதரன். 'சீதையை எய்தி உள்ளம் சிறுமையில் தீரும் வண்ணம் யாது ?'' என வினவுகிறான் இராவணன். இவன் இப்படிக் கேட்பானென்று முன்னமேயோசித்துத் திட்ட மிட்டு வைத்தவன் போன்று உடனே வழி சொல்கிறான் மகோதரன்.

அரசே ! கண்டுபிடித்து வைத்திருக்கிறேன், ஒரு வழி. அருமையான வழி. வெற்றி கிடைத்தே தீரும்' என்று எக்களித்துப் பேசு கிறான். 'அப்படியா ! என்ன வழி?' என்று ஆத்திரத்தோடு வினவுகிறான் இராவணன்.'நம் மருத்தன் இருக்கிறானல்லவா, அரசே ! அவன் நடிப்புக் கலையில் கை தேர்ந்தவன் என்பது தான் தங்களுக்குத் தெரியுமே. என் மாய சக்தியால் மருத்தன் சனகனாகிறான். தாங்கள் முதலில் சென்று சீதையைத் தெருட்டுகிறீர் கள். வழக்கம்போல் அவள் ஏதேதோ புண்ணி யம், பாவம், பழி என்று உளறுவாள். அந் நேரத்தில் நான் மருத்த சனகனை அங்கே கட்டி இழுத்து வருவேன். அவன் கதறுவான். சீதை பதறுவாள். அப்பதட்ட நிலையில் அவள் உள்ளம் சலனமடைந்திருக்கும்போது நம் மருத்தன் அவள் உங்கள் விருப்பத்துக்கிணைவது தான் நலமென்று அவளுக்குப் புத்திமதி கூறு வான். அவள் இசையாவிடில் தானும், தன் சுற்றமும் பெருந்துன்பத்துக்காளாக வேண்டி நேரும் என்று அவள் தந்தைப் பாசத்தை அடிப்படையாக வைத்து வேண்டுவான். எந்தப் பெண்தான் தந்தையின் அந்த நிலையில் அவன் வேண்டுகோளை மறுப்பாள் ? வெற்றி நம தாகும் என்பதில் உங்களுக்கு என்ன சந்தேகம்?' என்று தன் திட்டத்தை வகுக்கிறான். இராவ ணன் பிரமித்துப் போகிறான். தன் இருக்கை யினின்று எழுகிறான். மகோதரன் அருகே சென்று, 'என் நண்பனைப் போல் உண்டா, மகோதரா! உன் திட்டம் அபாரம்!' என்று கூறி அவனை மார்புறத் தழுவுகிறான்.

திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஆனால், சீதை மாயச் சனகனது இச்சக வார்த்தைகளைச் சினந்து உதறி எறிகிறாள். ''நீ என் தகப்பனா? சை ! நீயும் நின் கிளையும் இந்த நெடுநில வரைப்பும் நேரே, மாயினும் முறைமை குன்ற வாழ்வெனோ ?''அரியொடும் வாழ்ந்த பேடை அங்கணத் தழுக்குத் தின்னும் நரியொடும் வாழ்வதுண்டோ'' என்று கேட்டு, அவனை, ''நாயினும் கடைப்பட்டோனே !'' என்று விளிக்கிறாள். தங்கள் நாடகம் பலிக்காது என்று தெரிந்துகொள்கிறான் இராவணன். 'இச் சனகனைக் கொன்றுவிடுகிறேன்' என்று வாளை உருவுகிறான். மகோதரன் பதறி, 'இச் னகன் பேரில் என்ன தவறு, அரசே ! அவன் எவ்வளவோ வேண்டத்தானே செய்தான்' என்று தடுக்கிறான். இராவணன் வாளை உறையிலிடுகிறான்.

இச்சமயத்தில் அங்கே போர்க்களத்தே கும்பகர்ணன் வீழ்கிறான். வானர சேனையின் வெற்றியார்ப்பும் வானவரது மகிழ்ச்சி ஆரவாரமும் இராவணன் செவிகளில் பறையறைகின்றன. அவன் உள்ளம், என்ன நிகழ்ந்துவிட்டதோ என்று பொருமுகின்றது. தூதுவர் மெல்ல வந்து, அவன் செவியில், இராமனால் கும்பகர்ணன் பட்டான் என்று பையக் கூறுகின்றனர். 'தம்பி !' என்று கதறி வீழ்கிறான் இராவணன். மருந்தனைத் தள்ளிக்கொண்டு, ''வேறோர் திசை நோக்கிப் போனார் மகோதரனார்.''

இதன்பின் மகோதரனை இந்திரசித்தோடு இளையவன் பொரும் போர்க்களத்திலே சந்திக்கிறோம். இலக்குவனோடு பொருதிளைத்த இந்திரசித்து, மாயத்தால் மறைந்து சென்று, தந்தையைக் கண்டு, தான் அயன் படையை விடத் தீர்மானித்ததாயும், அதற்குரிய வேள்வி இயற்றச் சிறிது அவகாசம் வேண்டுமென்றும், தான் போர்க்களத்தில் இல்லை என்பது இலக்குவனுக்குத் தெரியக்கூடாதென்றும், தன் வேள்வி முற்றும்வரை இலக்குவனைப் போரில் ஈடுபடுத்தி வைக்க வேண்டுமென்றும் கூறுகிறான். இராவணன் உடனே மகோதரனை அழைத்து, 'மகோதரா, நீ அகம்பனோடு சென்று, நீ கற்ற மாயைகளையெல்லாம் செயல்படுத்தி இலக்குவனைப் போரில் ஈடுபடுத்தி வை. மேகநாதன் வேள்வி முடித்து வந்து இலக்குவனையும் முடித்துவிடுவான்' என்று கூறலும் மகோதரனும் வெகு மகிழ்ச்சியோடு செல்கிறான்.

மகோதரன் மாயப் போர் இலக்குவனைப் பிரமிக்க வைக்கிறது. அவன் மாயையினால் ஒரே இருள் மயமாகிறது. தன்னைச் சேர்ந்தவர்கள் எங்குள்ளார்கள் என்பதே தெரியாமல் இலக்குவன் திகைக்கிறான். அவ்வேளையில், அகம்பனை மாய்த்துவந்த அநுமன், இலக்குவனது வில்நாண் ஓசை கேட்டு, அருகே வந்து சேருகிறான். 'நண்பர்கள் எங்குள்ளார்கள்? 'இதென்ன ஒன்றும் தெரியவில்லையே' என்ற இலக்குவனை நோக்கி, 'ஐய ! இது மாயை விளைத்த தந்திரம். இதனைத் தெய்வப் படை கொண்டு விலக்கிடுவீர்' என்று வழி சொல்கிறான். இலக்குவன் 'பொன்மலை வில்லினான்றன் படைக்கலம் பொருந்த ஏந்தி' மூட்டிவிடுதலும், மாயை மாய்கிறது ! 'மகோதரன் மறையப் போனான்' என்பர் கவி. மாயையின் செயலை வியந்து நின்ற இலக்குவன் மேல் அயன் படையை மறைந்து நின்று விடுகிறான் மேகநாதன். இலக்குவனும் வானரத் தலைவர்களும் தானையும் கீழே சாய்கின்றனர். தந்தையிடம் சென்று தன் வெற்றியை உரைக்கிறான் இந்திரசித்து. அதே சமயம் அந்த வெற்றிக்கு மாயப் போரமைத்துதவிய மகோதரனை இராவணன் அழைத்துப் பாராட்டுகிறான்.

இதன் பின் இந்திரசித்து வீழ, அவன் தலையிலா ஆக்கையைத் தன் இருபது கண்களினின்றும் பொழிகின்ற கண்ணீராலாட்டி, இராவணன் ஏந்தி வந்து கிடத்தியபோது மகோதரனைச் சந்திக்கிறோம். மண்டோதரி தன் வீர மகனது சடலத்தை நோக்கி,''தலையிலா ஆக்கை காண எத்தவம் செய்தேனந்தோ'' என்று வயிறலைத்துப் புலம்புகிறாள். மகன் வீரம் அவள் அறிவாள் ; கணவன் வீரமும் அவளுக்குத் தெரியும். இத்துணை வீரமும் வரபலமும் மாயா சாலமும் பெற்ற தன் மைந்தனுக்கு இந்தக் கதியானால்......? இக் கதி எதனால் வந்தது ? சீதையாலல்லவா? அவள் நஞ்சல்லவா? அமிழ்தால் செய்த நஞ்சு. அது இன்னும் இருக்கத்தானே செய்கிறது. அவள் உள்ளம் நடுங்குகிறது. ''அஞ்சினேன். அஞ்சினேன் இச்சீதையென்ற அமிழ்தால் செய்த நஞ்சினால் இலங்கை வேந்தன் ?.... நாளை இத்தகையனன்றோ ?'' என்று கதறுகிறாள். கேட்டான் இராவணன். வாளை உருவுகிறான். ''வன்றழைக் கல்லினெஞ்சின் வஞ்சகத்தாளை வாளால் கொன்றிழைத்திடுவல்'' எனக் கூவிக்கொண்டே ஓடுகிறான்.

அப்போதைய மனநிலையில் இராவணனை அப்படியே விட்டால் சீதையைக் கொன்றிருப்

பான் என நாம் நிச்சயித்தால் தவறில்லை. மகனை, வீர மகனை, தன் வெற்றிகள் அனைத்துக்கும் காரணமான மகனைத் தலையிலா முண்டமாகக் கண்ட சோகம், அதனால் ஏற்பட்ட கோபம், அது முற்றியதாலேற்பட்ட வெறி, இந்நிலையில் அவனை யார் தடுக்க முற்படுவார்? ஒருவன் முற்படுகிறான். 'மகோதரன் துணிந்த நெஞ்சன்' என்கிறார் கம்பர். துணிவுதான்; பெருந்துணிவு தான். வெறி கொண்ட நிலையில், தடுக்கும் மகோதரனையே இராவணன் வாளால் வீசினும் வியப்பில்லை. தன் உயிரையும் பணயமாக வைத்துத்தான் மகோதரன் இடை விழுந்து தடுக்கிறான். 'அரசே! எல்லாப் போரிலும் வெற்றிக்கொடி நாட்டி எல்லையில்லாப் புகழை ஈட்டியுள்ள நீ இப்பெண்கொலைப் பழி ஏற்கலாமா ?' என வினவுகிறான். இராவணன் பதில் பேசவில்லை. ஆனால், வாளைக் கீழே போடவில்லை. மற்றொரு உத்தியைக் கையாள்கிறான் மகோதரன். 'அரசே! உன் கைவாள் சாமான்யமானதா ? 'திசைக் கையானை மருப்புச்சிந்த' உதவிய தெய்வ வாள். அதற்கும் தன்மானம் உண்டே, அரசே! அதை நீ ஒரு அபலையான பெண்ணைக் கொல்ல உபயோகிக்கலாமா ? முயன்றால் அந்த வாள்தான் பெண் கொலை செய்ய ஒருப்படுமா ? அதுவே வெட்கி கூர் மழுங்கித் துவண்டு விழுந்துவிடுமே. வாளே செய்ய வெட்கும் செயலையா நீ செய்வது ?' ம்..ம்..ஹூ.. இராவணன் அசையவில்லை. வாளும் விழவில்லை. மற்றொரு உத்தியைக் கையாண்டு பார்க்கிறான் மகோதரன். இச்செயலைச் செய்தால் முத்தேவர்களும், (உனக்குத் தோற்ற முத்தேவர்களும்) கைகொட்டிச் சிரிப்பார்களே, அரசே. அவர்கள் நகைப்புக்கா தாங்கள் ஆளாவது ?''....பயனில்லை. மற்றொரு முயற்சி. ''தாங்கள் எண்ணிய செயல் இவ்வுலகியல்பன்று ; வானுலகியல்புமன்று ; தாங்கள் செய்த தவங்களினியல்புமில்லை. ஒருவேளை இச்செயலும் ஒரு தருமமோ என்றால், இது எத்தகைய தருமத்தின்பாலும் சேராது. தாங்கள் உத்தமமான புலத்தியன் வழி வந்த புண்ணிய மரபுடையவர்கள். மேலும், சுத்த வீரர் உன்னும் செயலா ? நீங்காத பழியைத் தருவது. இப்பழியைத் தேடத் துணிவது ஆயிரம் வேதம் வல்ல அறிவாளனான தங்களுக்கு அழகா ?'' இருபது செவிகளும் கேட்டதாகத் தோன்றவில்லை. இத்துணை உத்திகளும் பலியாமற் போகவே மகோதரன் மனம் வேகமாகச் சிந்திக்கிறது. சட்டென்று படுகிறது ஒரு வழி. எந்த உணர்வு ஊற்றம் இராவணனைத் தன் கிளையும் சுற்றமும் இழப்பதைப் பொருட்படுத்தவில்லையோ, எந்த உணர்வு புத்திர சோகத்தில் சிறிது காலம் ஆழ்த்தி அமுக்கப் பெற்றிருந்ததோ அந்தஉணர்வையே, மீண்டும் கிளறச் செய்வதே சரியென்று முடிவு சட்டுகிறான். 'அரசே, வெற்றிதோல்வி ஒருவர்க்கு மானியமல்ல. இன்று போரில் தாங்கள் அம் மனிதர்களையும் குரங்குகளையும் தொலைத்து வெற்றி பெற்று இலங்கை நகரில் பெருமிதத்தோடு வந்தால், எந்தச் சீதைக்காக இத்தனை பாடுபட்டீர்களோ அவளைக் காணவில்லை என்று மனம் வெதும்பப் போகிறீர்களா ? அல்லது சீதையைத் தாங்கள் கொன்றுவிட்டீர்கள் என்று தெரிந்தால் இனி நாம் எதற்குப் போரிட வேண்டுமென்று மனிதர் தாமாகவே போய் விடுவார்கள். நாம் பிழைக்கலாமென்று பெரிய வீரரான தாங்கள் எண்ணிவிட்டீர்களா ? சிந்தியுங்கள் !'' என்று குத்தலாகவே கேட்கிறான் மகோதரன். அவன் உத்தி பலித்து விடுகிறது. புத்திர சோகத்தால் உள்ளழுந்தி நின்ற காமமோகம் தலைவிரித்தெழுகிறது. வீர உணர்வும் பொங்குகின்றது. கையிலெடுத்திருந்த கூர்வாளை நிலத்தில் வீசியெறிகிறான். 'மகோதரா, நன்றுசொன்னாய்' என்று உள்ளத்திலே அவனை மெச்சி, 'என் மைந்தனைக் கொன்றவர்களைப் பழி வாங்காமல் விடேன். அடே ! யாரங்கே ? இவ்வுடலை தைலத் தோணியிலே இட்டு வையுங்கள்' என்று உத்தரவிட்டுப் போகிறான். அதே வேளையில் 'மூல பலம் வந்துவிட்டது' என்று தூதுவரும் வந்து அறிவிக்கின்றனர்.

இங்கு மகோதரன் செயலை நோக்குவோம். சீதையை இராவணன் கொன்றுவிட்டால் மகோதரனுக்கென்ன ? தன் நண்பனுக்குப் பழி என்பதா? இராவணமீதுள்ள பழிக்கென்ன குறை? கார்த்தவீரியன் கைச்சிறையில் நெளிந்த போது பழி ஏற்படவில்லையா ? வாலியின் வாலில் கட்டுண்டு கலுழன்காலில் இடுக்குண்ட நாகம்போல் தொங்கி வான வீதியில் வந்தானே, பழியில்லையா ? வேதவதியை வலிந்து துன்புறுத்த அவள் உயிர்விட்டாளே, அப்போது பழியுடன் பாவமும் கூடிவரவில்லையா ? அப்பழிகளோடு ஒரு பழி கூடும். அவ்வளவு தானே, அப்பழிகளெல்லாம் என்ன செய்து விட்டன அவனை. இப்படிப் பழி எய்துகிறானென்று மகோதரன் உள்ளம் ஏன் துடிக்கிறது ? அதுவும் மகனைப் பறிகொடுத்த வெறியில் செயல்படும் இராவணனைத் தன் உயிரை

யும் புண்ணியமாக வைத்துச் சீதை பிழைக்க மன்றாடுகிறானே! இராவண கோபம் தெரிந்தவன்தானே. இல்லை, உலகில் அறம் தேய்கிறதே என்று நெஞ்சு துடிப்பவனோ? இராவணனோடுகூட நின்று, அவன் அதர்ம வழிக்கெல்லாம் உதவி, அதனால் இராவணன் பெற்ற உலகாதிபத்தியச் செருக்கில் உடன் தோய்ந்து களித்தவன்தானே. அவனுக்கு இப்போது சீதை உயிரைக் காப்பதில் ஏன் இத்துணை ஆவேசம், ஆத்திரம்?

மூலபலம் வந்தது. இராமனால் அழிந்தது. இராவணனது தம்பி, மக்கள், சேனைத் தலைவர்—அனைவரும் போய்விட்டனர். இராவணன் தனியன். இப்போது இராமலக்குவர்களின் கணைகளுக்குத் தப்பி, இராவணனை விடாது தொடர்ந்து நிற்பவன் மகோதரன் ஒருவனே. அவன் 'உற்ற நண்பன்' அல்லவா? கடைசி நாட்போருக்கு இராவணன் புறப்படுகிறான். மகோதரனும் கூடச் செல்கிறான். போர்க்களம் சென்றதும் இராமன் மாதலி தேர் முன் புகோல் கொள்ளப் புரந்தரன் தேர் மேல் தோன்றுகிறான். இராவணன் 'கண்ணன் நேமியும் கண்ணுதல் கணிச்சியும் கமலத்தண்ணல் குண்டிகைக் கலசமும் அழியினும் அழியாத் திண்மை சான்ற'' தேரின் மேல் இராவணன் வில்லேந்தி விளங்குகிறான். மகோதரன் இராவணனைக் கிட்டி ஒரு வேண்டுகோள் விடுக்கிறான். 'அரசே, தாங்களும் இராமனும் இரு தேர் மேலும் நின்று போரிடப் போகிறீர்கள். ''அப்போரெய்தியதிடையே யானோர் சான்றென நிற்றல் குற்றம்'' தருதியால் விடை ஈண்டு. நான் சென்று ''அம்புய மனைய கண்ணன் தன்னையான் அரியினேறு தும்பியைத் தொலைத்ததென்னத் தொலைக்குவேன்'' ஆனால், அவ்விதம் யான் செய்யத் தாங்கள் ஒரு உதவி மட்டும் செய்யவேண்டும். தொடர்ந்து நின்ற தம்பியைத் தடுத்தியாகில் தந்தனைக் கொற்றம். உங்கள் தம்பி வீடணனிருக்கிறானே அவன் மட்டும் இராமன் அருகு வாராமல் தடுத்துதவுங்கள்'' என்று வேண்டுகிறான். 'சரி போ' என்று விடையளிக்கிறான் இராவணன். மகோதரன் ஒரு தேரில் ஏறித் தமியனாய் இராமனெதிர் செல்கிறான். ஏன் தனியாய்ச் செல்கிறான்? இப்போது அறத்தின் வடிவாகிய இராமனும், தாயை யாயினும் சலித்திடு வஞ்சனை தவிரா, மாயைகள் பலவும் வல்ல மறவோனாகிய மறத்தின் வடிவாகிய மகோதரனும் நேருக்கு நேர் நிற்கிறார்கள். போர் தொடங்குகிறது. தொடர்ந்தவுடனே முற்றுப்பெறுகிறது. வந்த மகோதரன் மாதலி மேலும், இடிக்கொடியின் மேலும், தேர் மேலும் இராமன் தோள்மேலும் அம்புமாரி தூவுகிறான். தூவி ஆரவாரிக்கிறான். அதுவே அவனது கடைசி ஆர்ப்பாக முடிகிறது. இராமன் புன்முறுவல் பூத்தவனாய்த் தன் வில்லில் அம்புகளைப் பூட்டி எய்கிறான். ஒன்று, மகோதரன் வில்லை ஒடிக்கிறது. ஒன்று, அவன் கவசத்தைப் பிளக்கிறது. இரண்டு அம்புகள் இரண்டு கரங்களையும் அறுக்கின்றன. ஓர் அம்பு அவன் தோளைப் பதம் பார்க்கிறது. ஒன்று அவன் கழுத்தைத் துண்டிக்கிறது. போர் அவ்வளவே. மகோதரன் முண்டம் கீழே சாய்கிறது. இங்கே நாம் ஒன்று நோக்க வேண்டும். மாயைகள் பலவும் வல்ல மகோதரன், இந்திரசித்து மறைந்து நின்று பிரம்மாத்திரம் எய்ய வாய்ப்பாக இலக்குவனை மாயப் போரில் மாட்டிய மகோதரன், ஏன் இராமன் முன் போரிடச் சென்றகாலை மாயம் ஒன்றையும் செயல்படுத்தவில்லை? பெரிய கேள்வி. ஏதோ அருச்சனை செய்வது போல் அம்புகளைத் தூவிக் கீழே சாய்கிறானே. 'நீயும் இராமனும் போர் செய்யும் காலை நான் சான்றென நிற்றல் குற்றம்' என்று இராவணனிடம் கூறியல்லவா வருகிறான்? எதற்குச் சான்றாக நிற்றல் ஆகாது? இராவணன் இராமனை வீழ்த்தினால் அதற்கு மகோதரன் சான்றாக நிற்றல் தகாதா? தன் தலைவன் வீரப்போரை நேரில் கண்டு அவன் வெற்றியில் மகிழ உரியவன் அவன்தானே. அல்லது அன்றையப் போரில் இராவணன் தலையறுப்புண்டு அழிவது இனி நிச்சயம். அதை நேரில் காண்பது தகாதென்று கருதுகிறானா? அவன் எதை எண்ணித் தான் சான்றாக நிற்றல் தகாது என்று கூறினான்? மிகமிகப் பெரிய கேள்வி.

இக்கேள்விக்கு விடை ஆயுங்காலையில்தான் மந்திரப் படலத்தில் மகோதரனை நம்முன் காட்டும் கம்பர் அவன் பேச்சில் மட்டும் ''முற்றுற நோக்கினன்'' என்ற வாசகத்தைக் கூறியது பயன்படுமோ எனக் கருதத் தோன்றுகிறது. 'இராவணனும் அரக்கர் குலமும் முற்றுப்பெற (சர்வ நாசம் பெற) வழி என்ன என்று யோசனை செய்து' என்று அவ்வாசகம் பொருள்படலாமோ என்று தோன்றுகிறது. அதை அடுத்து வரும் 'முடிவும் அன்னதால்' என்ற கவியின் வாக்கு இப்போது நாம் காணும் முடிவைத்தான் குறித்தெழுந்ததாம்? அப்படியாயின் தன் நண்பனுக்கு முடிவைத் தேடும்

வழியைத்தான் மகோதரன் கூறினுஞ? ஆயின், அவனை இராவணனது 'நண்பன்' என்று எப்படிக் கூறுவது ? மகோதரன் மறத்தின் உரு. அவன் எப்படி அறத்துக்குச் சாதகமாக மறம் முற்றும் அழியுமாறு யோசனை கூறுவான் ? மகோதரனது செயல்முறையில் எழும் பல கேள்விகளில் சில இவை.

காவியம் அறத்துக்கும் பாவத்துக்கும் நிகழும் போரைக் கூறுவது. அறம் வெல்லும், பாவம் தோற்கும் என்பது உலகியல்பு. இதை அனைவரும் - அறவழி நிற்போரும் மறவழி ஆர்ப்பரிப்போரும் - உணர்ந்திருக்கின்றனர். அநுமனுல் அடியுண்ட இலங்கை மாதேவி ''அன்னதே முடிந்ததைய அறம் வெல்லும் பாவம் தோற்கும்'' என்று கூறுகிருள். இராவணனுல் சடாயு அடியுண்டு வீழ்ந்ததைக் கண்டு சீதை, ''நல்லவன் தோற்பதே ? நரகன் வெல்வதே ? வெல்வதும் பாவமோ? வேதம் பொய்க்குமோ ? இல்லையோ அறம் ?'' என்று இரங்கி ஏங்குகிருள். ''அறம் நோனுர் ஈண்டார் ஈண்டார். நின்றவரெல்லாம் இலர் அன்றே'' என்று அறவழி நில்லாதார் அழிவதைப் பேசுகிருன். யார்? மாரீசன் ! 'முன்னமும், தருமம் தவறி நடப்போரைத் ''தருமம்தான் ஈரும் கண்டாய் கண்டகர் உயர்ந்தார் எவரையா !' என்று பேசினுன். எனவே, அறம் வெல்லும் என்பதும், பாவம் தோற்கும் என்பதும் ஆறறிவு படைத்த எவரும் அறிந்த உண்மை. அறத்தின் உதவியால் வலி பெற்றவன் ஆணவம் மிகுந்து அகங்கரித்து அறத்தையே அமுக்கி வைக்கலாம். ஆனுல், அது சில காலத்துக்கே. இதையே பாரதி, தன் பாஞ்சாலி சபதத்தில் அருச்சுனன் வாயிலாகத் 'தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும். தருமம் மறுபடியும் வெல்லும். . . . கட்டுண்டோம், பொறுத்திருப்போம், காலம் மாறும்'' என்று காட்டுகிருர்.

ஒருவனுக்கு ஆணவம் ஓங்க, அறம் ஈந்த செல்வமே உதவுகிறது. தவத்தால் வந்த வர பலமின்றேல் இராவணன் ஆணவத்தின் வடிவாக முடியாது. அவ்வாணவத்தால் மறச்செயலில் இறங்குகிருன். அவன் மறச்செயலால் அவன் புண்ணியம் குறைகிறது. புண்ணியத்தால் பெற்ற செல்வமும் அதிகாரமும் தேய்கின்றன. அறம் வலி பெறுகின்றது. மறத்தை வென்று வீழ்த்துகின்றது. ஆணவம், தான் விழும்போதுதான் அவ்வுண்மையை உணர்கிறது. ஆனுல், உணர்ந்த நிலைமையில் தன்னை மாற்றிக்கொள்ளும் சக்தியற்றுவிடுகிறது. எனவே, அறம் வெல்ல மறமே வழிவகுத்துக் கொடுக்கிறது என்று நாம் முடிவு கட்டலாமல்லவா?

இந்த நோக்கில் மகோதரன் தன்மையைப் பார்ப்போம். அவன் இராவணன் நண்பன் என்று கூறலாமா ? ''நகுதற் பொருட்டன்று நட்டல் ; மிகுதிக்கண் மேற்சென் றிடித்தற் பொருட்டு'' என்ற குறளாசிரியனின் நட்பிலக்கணப்படி ஒரு இடத்திலாவது மகோதரன் இராவணனை இடித்துரைத்ததாக நாம் காணவில்லை. அவனிடந்தான் இராவணன் அதிக நம்பிக்கை கொண்டு உசாவுகிருன். அந்நிலையில் அவன் இராவணனுக்கு இடித்துரைத்திருந்தால் விளைவு என்னவாகுமோ ? ஆனுல், அதை அறிய வழியில்லை. மகோதரன் செயல்கள் யாவும் இராவண ஆணவத்துக்குத் துணையாக நின்றுள்ளதையே காண்கிறேம். சீதையை இராவணன் கொல்ல முற்பட்டபோதும், அவன் இராவணனின் காம வேட்கையையும், அவன் அதிகாரச் செருக்கையும் காட்டித்தான் அவன் மனத்தை மாற்றுகிருன். அப்போது எப்பாடு பட்டாவது சீதையைக் காப்பாற்றுவதில்தான் அவன் மனம் முனைகிறது. ''அறத்தின் தாயை''க் காக்க மறத்தின் வடிவம் படாத பாடு படுகிறது ! ஏன் ? விடை எளிதிலே கிடைக்கவில்லை. ஒரே சிக்கல். தன்னையறியாமலே உலக நியதிக்குட்பட்டு மறமும் செயல் பட்டுதவுகிறது என்றுதான் தோன்றுகிறது. இராவணன் இழைத்த தீமைதானே கூனி வடிவில் அரக்கர் அழிவுக்கு அங்குரார்ப்பணம் (விதையிடு) செய்கிறது !

மகோதரன் என்ற பாத்திரப் பண்பை ஆயும்போது என் சிற்றறிவில் தோன்றிய ஐயங்களையும் வினுக்களையும், எனக்குத் தோன்றிய சில சமாதானங்களையும் வாசகர்முன் சமர்ப்பித்துள்ளேன். திட்டவட்டமாக 'மகோதரனின் குணச்சித்திரம் இது' என்று மேல் கேள்விக்கு இடமின்றிக் கம்ப காவிய ஆய்வாளர் யாரேனும் விளக்கிக் கூறிடில் நன்றியுடையனுவேன்.

எப்படியாயினும் மகோதரன் ஒரு மிகச் சிக்கலான பாத்திரப் படைப்பு என்பதை ஒப்புக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

"கம்பன் காட்டும் உளவியல் இரகசியங்கள்!"

அருட்பா S. R. தங்கவேலு

ஒரு மகா காவியத்தைப் படைக்கும் திறன் பெற்றவர் ஒரு முழுமை பெற்ற மனிதராயிருத்தல் வேண்டும். (Well Integrated personality) மனித வாழ்க்கையின் எல்லா அரங்குகளிலும் நடைபெறும் கூத்துகளை நன்கு அறிந்தவராயிருத்தல் வேண்டும். காவியம், ஓவியம், சிற்பம், தேகவியல், மனேவியல், இல்லறவியல் முதலிய எல்லாவற்றின் மூல அம்சங்களை அறிந்தவராயிருத்தல் வேண்டும். அன்றேனில் காவியம் பட்டை தீட்டப்பெருத வைரம் போன்று சோபை குன்றிக் காணப்படும். ஹோமர் எழுதிய 'இலியத்', 'ஒதஸி', வேர்ஜில் எழுதிய 'ஈனியத்', மில்டனின் 'சொர்க்க நஷ்டம்', 'சொர்க்க மீட்சி' முதலியன கம்பராமாயணத்தோடு பல அம்சங்களிலே நன்ருகவே போட்டி போடுகின்றன. ஆனுலும், கம்பர் வெகு எளிதில் வெற்றிவாகை குடுகின்ருர். காரணம் என்னவென்ருல், கம்பநாட்டாழ்வார் உளவியலிலே (Psychology) நன்கு தேர்ச்சி பெற்றவர். மிகமிகத் துல்லியமான விஷயங்களை மிகத் தெளிவாக நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்ருர்.

ஆண்களது தோற்றம், பேச்சு, நடைஉடை பாவனை முதலியவைகளிலிருந்து ஏகதேசமாக அவர்களது குணதிசயங்களைக் கூறலாம். ஆனல், பெண்களது மனேவியலை இன்றுவரை எந்த விஞ்ஞானியாலும், உளவியல் நிபுணனலும் (Psychologist) கண்டுபிடிக்கவே இயலவில்லை. இந்த நிலை பெண்களது வெற்றி; அதே நேரத்திலே அவர்களது தோல்வியுங்கூட!

இன்று நாம் காணும் மிக எளிதான காட்சி, பெண்கள் அறிவிலும் விஷயங்களைக் கிரகிக்கும் சக்தியிலும், ஆண்களைக்காட்டிலும் ஒருபடி உயர்ந்தவர்களாகவே காணப்படுகின்ருர்கள். மற்றபடி, ஆண்கள் செய்யும் எல்லாக் கடுமையான காரியங்களையும் அவர்களால் செய்ய இயலும். இருந்தும், கற்கால மனிதன் காலத்திலிருந்து இன்றுவரை ஆண்களைச் சார்ந்தே பெண்கள் வாழவேண்டியுள்ளது. பெண் சமத்துவத்தையும், சுதந்திரத்தையும் பற்றி வாய் கிழியப் பேசும் அமெரிக்கா போன்ற மேலை நாடுகளில்கூட இதே நிலைதான். இதற்கு என்ன காரணம்?

பெண்களே ஏற்படுத்திக்கொண்ட காரணந்தான். அது அவர்களது இயல்பு; குருதியோடு ஓடுகின்றது. ''யார்அறிவார் எங்கள் அண்ணல் பெருமையை, யார்அறிவார் இதன் அகலமும் நீளமும்'' என்று திருமூலர் சொல்லி வியந்தது போன்று, பெண்களது மனத்தை யாராலும் எடை போட முடியாது. அது மனவெழுச்சியின் பிழம்பு!

இந்த இரகசியத்தை எப்படி எப்படியோ சுற்றி வளைத்துச் சொல்லிக் கடைசியாகச் சீதாபிராட்டியின் வாய்மூலமாகவே சொல்லுகின்ருர் கம்பநாடர்.

ஆக, கம்பன் பொதுவாக மானிட மனத்தின் துல்லிய வேலைப்பாடுகளை நன்கறிந்தவர். குறிப்பாகப் பெண்கள் மனேவியலை ஆராய்ந்து ஆராய்ந்து, முடிவில் தமது தீர்ப்பைக் குறிப்பிட்டுள்ளார். நமக்கெதற்கு இந்த வம்பென்று

ஜனக குமாரியின் வாய்மூலமாகவே அற்புதமாக வெளியிடுகின்றார்.

இப்பொழுது, இத்தீர்ப்பிற்கு முன்னதாகக் கம்பர் என்னென்ன முஸ்திபுக்கள் செய்கின்றார், பாருங்கள் !

தனது அருமந்த மைந்தனைக்காட்டிலும் ஒருபடி மேலாகவே நேசித்த இராமனை, கேகயன் மகள், "ஆழிசூழ் உலகு எல்லாம் பரதனே ஆள, நீ போய்த் தாழ்இரும் சடைகள் தாங்கித் தாங்கருந் தவம்மேற் கொண்டு பூழி வெம் கானம் நண்ணிப் புண்ணிய துறைகள் ஆடி ஏழிரண்டு ஆண்டில் வா என்று இயம்பினன் அரசன்" என்று சொல்லுமளவிற்குத் தனது மனத்தைக் கற்பாறையாக்கிக்கொண்டாளே ! அப்படி என்ன நேர்ந்துவிட்டது ? மந்தரை அவளுக்குக் காட்டிய ஒரு பொய்த் தோற்றமல்லவா இத்தகு பயங்கர நிலைக்குக் காரணம் !

கைகேயி ஒரு சாதாரண அரச பத்தினியல்ல. சம்பராசுர வதத்திலே தசரதனுக்குச் சாரத்தியம் செய்து ஆறெனவோடும் குருதி வெள்ளத்தைக் கண்டவள். தேர்ச்சக்கரத்திற்குத் தனது கையையே கடையாணியாகக் கொடுத்தவள். ஒப்பும் நிகர்வுமற்ற உள்ளுரம் படைத்தவள். கேவலம், ஒரு பணிப்பெண்ணினால் மனமாற்றமடைந்து இராவண வதத்திற்குக் கடைக்கால் போடுகிறாள்.

ஒரு பெண்ணினால்தான் - அவள் எந்த உயர்ந்த நிலையிலிருந்தாலும் - இவ்விதமாக உணர்ச்சி வசப்பட்டு அனர்த்தங்களை ஏற்படுத்தவியலும் !

மந்தரைதானென்ன! பெரிய இடத்து வேலைக்காரியல்லவா ? மேலும், தனது எஜமானிக்கு அந்தரங்க ஆலோசனைக்காரி. இராமன், சின்ன வயதிலே, ஏதோ விளையாட்டாக அவளது கூன் முதுகிலே, களிமண் உருண்டைகளை அடித்திருக்கலாம். பால்மணம் மாறாத, விவரமறியாத பாலகன் செய்த மிகச்சிறிய குற்றத்தை எவ்வளவு பெரிதாக எடுத்துக்கொண்டு, கொடும் வஞ்சம் தீர்க்கும் எண்ணத்தைத் தனது மனதாகத்திலே வைத்து, அதை நாளும் வளர்த்து சமயம் பார்த்து வஞ்சம் தீர்த்துக்கொண்டாள். இச்செய்கை, அவளது நிலைக்கும் வயதிற்கும் பொருத்தந்தானா ?

ஆம், யானைமாதிரி! பெண் ஓர் எண்ணத்தை மனத்தில் கொண்டாளேயென்றால் அது வளர்ந்துகொண்டே செல்லுமாம். என்ன விளைவுகளை ஏற்படுத்துமோ ? இறைவனுக்கே தெரியும். இன்றைய உளநூல் ஆராய்ச்சியாளர்களின் முடிவும் அதே.

கம்பன் தனது கோட்பாட்டிற்கு உறுதி படைக்கும்பாங்கிலே சிறிது 'பால் இயல்' (Sexology) நுணுக்கங்களைக் கையாள்கிறார். சிறிது காலம் சதிபதிகளாக வாழ்ந்தவர்கள் பரஸ்பரம் தங்களது பரம ரகசியங்களை நன்கறிவர். தன் கணவனது செருப்புச் சத்தத்தைக்கொண்டே தன் கணவன் வருகையை அறிந்துகொள்ளும் ஆற்றல் பெற்றவளாகிவிடுவாள். ஆயின், ரிஷிபத்தினியின் நிலை எப்படியிருத்தல் வேண்டும் ? ஆனால், அகலிகை தன் கணவன் வேஷத்திலிருந்த இந்திரனைத் தீண்டுகிறாள். தன் கணவன் அல்லவென்று அறிந்தும் அவனோடு ஒத்துப்போகிறாள். கம்பர், "உணர்ந்தனள், உணர்ந்த பின்னும் தக்கதன்று என்ன ஓராள், தாழ்ந்தனள்" என்று இதைச் சுட்டும்பொழுது, "ஐயோ, தன் கணவன் அல்லவென்று தெரிந்தபின்னரும்கூட இவள் கூடினளே" என்று எத்தகு வருத்தத்தைக் கொட்டுகின்றார்!

உண்மையாகவே, அகலிகையின் இச்செயல் இன்றுவரை புதிராகவேயுள்ளது. பெண் மனம் அத்தகு சிக்கல் நிறைந்தது ; பிரமிப்பைத் தர வல்லது. அன்றிலிருந்து இன்றுவரை பெண்மையின் அடி, முடி, நடுவை எவன் கண்டான் ? இதற்கு விடை காண முடியாமையாற்றான் சேக்ஸ்பியரே, 'துரோகமே, உன் பெயர் பெண்ணா ?' (Infidelity the name is Woman) என்று கத்தினன்.

ஒரு பெண் ஒன்றில் ஆசை வைத்தாளானால் அவள் அதையடைய எவ்வளவு தூரம் போவாளென்று சொல்ல முடியாது ; என்னென்ன செய்வாள், என்னென்ன நினைப்பாளென்று சொல்ல முடியாது. கம்பர் இம் மனோநிலையின் போக்கைச் சூர்ப்பணகை மூலமாகக் காட்டுகின்றார். இலக்குவன், அவளது மூக்கை அறுத்துவிட்டான். இரத்தம் பீறிடுகின்றது ; தாங்கொண்ணா வலி. இவ்வளவு அவலங்களையும் பொறுத்துக்கொண்டு இதோ பேசுகின்றாள்:

"போக்கினீர் என்நாசி
போய்த்தென்! நீர்பொறுக் குவிரேல்
ஆக்குவென்! ஓர்நொடி. வரையில்
அழகமைவென்; அருள் கூரும்
பாக்கியம் உண்டுஎனின் அதனால்
பெண்மைக் கோர்பழு துண்டோ ?
மேக்குயரும் நெடுமூக்கும்
மடந்தையர்க்கு மிகையன்றோ ?"

(ஆரணிய காண்டம்)

''பெண்களுக்கு மூக்கு நீளமாயிருப்பது குறைதான். எனவே, நீங்கள் எனது மூக்கைத் துணித்ததில் ஏது குறையுமில்லை'' என்று சூர்ப்பணகை பேசுகின்றாளே! ஏன் இப்படிப் பேசுகின்றாள்? காமம் தலைகால் தெரியாமலேறத் தனது பெண்மையை முழுதும் இழந்து நிலை குலைந்து நிற்கின்றாள்.

சூர்ப்பணகையின் மனம், இன்னும் ஒரு படி, இராவணன் முன்னே எப்படியெல்லாம் ஆட்டம் போடுகின்றது.

மீன்கொண்டு ஊடாடும் வேலை
மேகலை உலகம் ஏத்தத்
தேன்கொண்டு ஊடாடும் கூந்தல்
சிற்றிடைச் சீதை யென்னும்
மான்கொண்டு ஊடாடும் நீ உன்
வான்வலி உலகம் காண
யான்கொண்டு ஊடாடும் வண்ணம்
இராமனைத் தருதி என்பால்.''

(ஆரணிய காண்டம்)

''உலகம் போற்றும்படியாக நீ சீதையோடு கூடி விளையாடு. இராமனோடு கூடி விளையாட அவனை எனக்குக் கொடு'' என்று, இந்த மூக்கும் காதும் இழந்த நிலையிலே கேட்கின்றாளே, இது பெண்மையின் பிடிவாதத்தைக் காட்டும் கம்பனின் கைவண்ணம்.

கம்பனது உளவியல் அற்புதங்கள் ஆரோகண கதியிலே, அஸ்வதாட்டியிலே மிக அழகாகச் செல்லுகின்றன. இராமன் சுக்ரீவனுக்கு அரச நீதியை எடுத்துக்கூறும் முகத்தான் இராமனே பெண்களைப்பற்றிக் கொண்டுள்ள கருத்தை எவ்வளவு நளினமாக நம்முன்னே காட்டுகின்றார். காவிய நாயகன் பளிச்சென்று பேசுகின்றான். இதோ :

''மங்கையர் பொருட்டால் எய்தும்
மாந்தர்க்கு மரணம் என்றல்
சங்கையின்று உணர்தி! வாலி
செய்கையால் சாலும் இன்னும்
அங்கவர் திறத்தி னானே
அல்லுறும் பழியும் ஆதல்
எங்களில் காண்டி. அன்றே!
இதனின் வேறு உறுதி உண்டோ?'':

(கிட்கிந்தா காண்டம்)

''சுக்ரீவனே, மாதர்மேல் ஆசை வைக்காமலும் அவர் சொல் கேட்காமலும் இருப்பதை விட வேறு உறுதியில்லை'' என்று இராமனே திட்டவட்டமாகக் கூறிவிடுகின்றான்.

கம்பநாட்டாழ்வார் மிகச் சமத்காரமாகத் தமது வார்த்தைகளை இராமன் வாய்க்குள் போட்டுவிடுகின்றார், ஏற்ற தகுந்த தருணத்திலே.

பெண்மைக்கு இன்னுமொரு விந்தையான குணம்! தன் கணவன், தனது உடல், பொருள், ஆவி எல்லாவற்றாலும் தனக்கே முழுமையாகச் சொந்தமாயிருத்தல் வேண்டும் என்று எண்ணுவாள். ஒரு பெண் எதை வேண்டுமானாலும் சகிப்பாள். ஆனால், வேறொரு பெண்ணிடம் தன் கணவன் கொள்ளும் மனச்சார்பை எந்தப் பெண்ணும் எந்நிலையிலும் சகிக்கமாட்டாள். இக்காட்சியை எப்படிப் படமாக்குவதென்று பல நாள்கள் திட்டமிட்டு, இதோ மாபெரும் வெற்றியும் கண்டுள்ளார், கம்பநாடர்.

இராவணன் இறந்து கிடக்கின்றான்; மண்டோதரி அவன்மீது புரண்டு அழுது பிரலாபிக்கின்றாள். இந்த அவல நிலையிலும் தனது பெண்மையின் அடிமனத்திலே அந்தராத்மாவிலே மருகிக்கொண்டிருக்கும், உறுத்திக்கொண்டிருக்கும் உணர்ச்சியை எரிமலையெனப் பீச்சுகின்றாள்!

''வெள்ளெருக்கம் சடைமுடியான் வெற்பெடுத்த
மேனும் கீழும் [திருமேனி
எள்இருக்கும் இடம் இன்றி உயிர் இருக்கும்
இழைத்தவாறோ? [இடம்நாடி
கள்இருக்கும் மலர்க்கூந்தல் சானகியை
கரந்த காதல் [மனச்சிறையில்
உள்இருக்கும் எனக் கருதி உடல் புகுந்து
ஒருவன் வாளி?'' [தடவியதோ

(யுத்த காண்டம்)

''காகுத்தன் கணை எள்ளிருக்கவும் இடமில்லாதபடி சல்லடைக்கண்களாக உனது உடலைத் துளைத்துள்ளது; ஒரு கால் நீ ஜானகியின் மேல் வைத்துள்ள ஆசை இன்னும் கொஞ்சநஞ்சம் எங்கேனும் ஒளிந்து ஒட்டிக்கொண்டிருக்குமோவென்று எண்ணி, உனது தேகத்தை அணு அணுவாகச் சோதித்துள்ளது'' என்று பிரலாபிக்கின்றாள். இந்நிலை அவலச் சுவையின் உச்சம். இருப்பினும் மண்டோதரி, அழகில் சீதைக்குச் சற்றேனும் குறைவில்லாதவளாயிருக்கும்பொழுது தனது கணவன் சீதையை விரும்பினானேயென்ற பொறாமைக்கனல் மூண்டெழ

''கள் இருக்கும் மலர்க்கூந்தல் சானகியை
கரந்த காதல் [மனச்சிறையில்

"உள் இருக்கும் எனக்கருதி உடல் புகுந்து
ஒருவன் வாளி !" [நடவியதோ

என்று இந்த அவலச் சுவைக்குப் பொருந்தாத ஒரு கருத்தை உதிர்க்கின்றாள். ஆம், அவளது பெண்மையின் இயற்கை பொறுமையாகக் கொப்புளித்து இப்படி வெடிக்கின்றது !

ஆக, இவ்வண்ணமாகப் படிப்படியாகச் சோபான முறையிலே பெண்மனத்தின் பல பட்டைகளையும் படம் பிடித்துக் காட்டுகின்றார் கவிஞர் பெருமான். ''சீதம்ம மாயம்ம, ஸ்ரீராமுடு மாதன்றி''— சீதாதேவி எனது தாய். ஸ்ரீராமன் எனது தந்தை— என்று தியாகப் பிரம்மம் பாடிப் பரவும், இந்த அண்டாண்டங்களுக்கெல்லாம் அன்னையாக விளங்கும் வைதேகியின் மூலமாகவே, பெண் குலத்தின் தனிப்பெரும் ஏகப்பிரதிநிதியின் மூலமாகவே, தனது முடிந்த முடிவைச் சொல்லி விட்டார். பெண் மனத்தைப்பற்றிக் கடைசித் தீர்ப்பை வழங்கிவிட்டார். இந்தத் தீர்ப்பை யாவராலும் அசைக்க முடியாது. இது என்றும் நின்று நிலவும்.

இராவணனைக் கொன்று சீதையை மீட்ட பின்னர், இராமன் அவளதுகற்பின் நிலையைச் சோதிக்கும்எண்ணம் எரி மூழ்கச் சொல்லுகின்றான். இப்பொழுது சீதை பேசுகின்றாள் ; இல்லை ! பெண்மை பேசுகின்றது; பேசவில்லை, குமுறுகின்றது.

அன்றிலிருந்து இன்றுவரை மனிதனைக் சதி கலக்கும் ஒரு புதிருக்கு முற்றுப்புள்ளி வைக்கப் படுகின்றது.

பெண்மை பேசுகின்றது :

"பங்கயத்து ஒருவனும் விடையின் பாகனும்
சங்குவைத் தாங்கிய தரும மூர்த்தியும்
அங்கையில் நெல்லிபோல் அனைத்து நோக்கினும்
மங்கையர் மனநிலை உணர வல்லரோ!"

(யுத்த காண்டம்)

''திரிமூர்த்திகளாலும் ஒரு பெண்ணின் மனத்தை அறிய முடியாது'' என்று கற்பின் கனலி மிகத் தெளிவாகச் சொல்லிவிட்டாள்.

கம்பனது காவியம் ஒன்பான் சுவைகள் நிறைந்த ஓர் அற்புதக் கருவூலம். இங்குக் குரங்குகள், கரடிகள்,பறவைகள் பேசுகின்றன. குகன், பரதன், அனுமன் ஆகிய இம்மூன்று பாத்திரங்களுக்கு இணையான பாத்திரங்கள் வேறு உலக இலக்கியங்கள் எதிலுமில்லை. தங்களுக்கென்று எதையும் எண்ணாத மாபெரும் தெய்வங்கள் ! இராமன் தெய்வமாகவும் பேசப்படுகின்றான், மனிதனாகவும் நடந்துகொள்ளுகின்றான். வாலி குரங்கு போன்றும் மனிதன் போன்றும் தெய்வம் போன்றும் பேசுகின்றான். வாலி அங்கதனைப் பார்த்து,

"பாலமை தவிர் நீ என்சொல் பற்றுதி ஆயின்
தன்னின்
மேல்ஒரு பொருளும் இல்லா, மெய்ப்பொருள்
வில்லுந் தாங்கிக்
கால்தரை தோய நின்று கட்புலனுக்கு
உற்றது அம்மா ;
மால்தரும் பிறவி நோய்க்கு மருந்தென
வணங்கு மைந்தா!"

என்ற வாசகம் நம்மாழ்வார் நிலையை எட்டிவிட்டது. இதை வாலி, அங்கதனுக்கு மட்டுமல்ல, இந்த உலகமே ஜன்ம சாபல்ய மடையும்பொருட்டுச் சொன்ன மகாமந்திரம்!

தெய்வ இயல்பும் மானிட இயல்பும், உயர் திணைப் பொருள்களும் அஃறிணைப் பொருள்களும் கலந்து விளங்கும் இராம காதையிலே பல முரண்பாடுகள் இருப்பன போல் தோன்றுகின்றன. ஆனால், மகாகவியின் அறிவு பேரறிவு. நமது ஊற்றத்தையும் தோய்வையும் பொருத்து பலன் பெற்று ஆனந்திக்கலாம்.

பகவானது நித்திய விபூதி, லீலாவிபூதி இரண்டிலும் முரணில்லை. வள்ளலார் ''பெண்ணியல் மனமுமாணியலறிவும்அண்ணுறவகுத்த வருட்பெருஞ் ஜோதி'' என்றும் ''தனித்தனி வடிவினுந் தக்கவாண் பெண்ணியல் அனைத்துற வகுத்த வருட்பெருஞ் ஜோதி'' என்றும் அழகுற மொழிந்து பெண்ணியலும் ஆணியலும் பூர்ணத்துவத்தின் இருமுனைகள் என்று முத்தாய்ப்பு வைக்கின்றார்.

"பெண்ணியல் மனமு மாணியலறிவும்
அண்ணுற வகுத்த வருட்பெருஞ் ஜோதி"
"தனித்தனி வடிவினுந் தக்கவாண் பெண்ணியல்
அனைத்துற வகுத்தவருட் பெருஞ்ஜோதி"

கம்பனில் ஒரு விடுகதை

அரங்க. சீனிவாசன்

நம் நாட்டில் ஒருவர் விடுகதை கூறுவதும், பிறர் அதனை விடுவிப்பதும் தொன்றுதொட்டு வரும் சுவையுடைய பொழுது போக்காகும்.

விடுகதைகளை ''மெய்ந்நிலை மயக்கின் ஆகுந'' என்று தொல்காப்பியர் குறிப்பிடு கின்றார். அதனால் விடுகதைகளின் பழமை தெளியப்படும். தொல்காப்பிய உரையாசிரியர் கள், விடுகதையைப் ''பொருள் மயக்காகிய பிசிச் செய்யுள்'' என்கின்றனர். அ த ற் கு எடுத்துக்காட்டாகச் செவ்விய வெண்பாவான் அமைந்த விடுகதை ஒன்றும் தந்துள்ளனர்.

''எழுதுவரிக் கோலத்தர்; ஈவார்க்கு உரியார் ,
தொழுதிமைக் கண்அணைந்த தோட்டார் ;—
முழுது அகலா
நாணிற் செறிந்தார்; நலங்கிள்ளி நாடோறும்
பேணற்கு அமைந்தார் பெரிது''

இந்த விடுகதையை மேலெழுந்தவாரியாகப் பார்ப்பின், ஒரு பெண்ணைப்பற்றிக் கூறியது போல் தோன்றுகிறது.

'உடம்பின்கண் எழுதுகின்ற வரிக்கோலம் உடையவர்; பெற்றோரால் தரப்படுவோருக்கே உரியவர் ; திரண்ட மையுண்ட கண்களால் அணையப்பட்ட தோடு (குழை)களை உடையவர்; முற்றும் நீங்காத நாணத்தாற் செறியப்பட்ட வர் ; நலங்கிள்ளி என்னும் ம ன் ன ன ல் நாடோறும் பெரிதும் விரும்புதற்குத் தகுந்த வர்'' என்று பொருள் கொள்கையில் ஒரு பெண்ணையே குறிக்கிறது.

எழுதப்படுகிற கோடுகளாகிய கோலத் தைக் கொண்டது; ஆசிரியனால் கற்பிக்கப்படு கின்ற மாணவனுக்கு உரியது; திரண்ட மை தடவிய இடத்தை அணைந்த ஓலையால் ஆனது; முற்றும் நீங்காத கயிற்றாற் கட்டப்பட்டது; நலங்கிள்ளியால் நாடோறும் பெரிதும் காக்கப் பெறுவது'' என்றும் பொருள் கொள்ளலாம் அன்றோ?

இவ்வாறு பொருள் கொள்ளும்போது, ஓலைச்சுவடி (புத்தகம்) ஆகிறது.

விடுகதை என்பது இரு பொருள்படும்படி கூறி (ஒரு பொருளை மறுத்தோ, மறுக்காமலோ) உண்மைப் பொருளைக் கூறும்படி வினவுவ தாகும்.

''அந்தரத்திற் பறந்துவரும் பறவை அல்ல;
அழகான வால் உண்டு அனுமான் அல்ல;
விந்தையுடன் கட்டுண்ணும் புல்லும் அல்ல;
விடுகதையை ஒருநொடியில் விளம்பு வீரே''

என்பது ஒரு நாடோடி விடுகதை. இதில் அடிதோறும் இரு பொருள் படக் கூறி, ஒரு பொருளை மறுத்து, 'உண்மைப் பொருளை ஒரு நொடியில் விளம்புவீர்' என்று வினவப்பட் டுள்ளது.

பெரும்பாலும் நாடோடி இலக்கியமாகவே விடுகதைகள் வழங்கி வருகின்றன. இத்தகைய விடுகதை ஒன்றுக்குத் தன் பேரிலக்கியத்தில் இடம் தந்துள்ளான் கம்பன்.

கம்பனாவது விடுகதையாவது, இராம காதையில் அது இடம் பெறுவதாவது என்று சிலர் வியப்புறலாம்.

ஔவையாரைத் தாழ்த்தக் கருதிய கம்பன், ஒரு விடுகதை கூறியதாகவும், அதற்கு ஔவை, கம்பனைத் தாக்கி இருபொருள்பட விடையிறுத்ததாகவும் ஒரு கற்பனைக் கதை வழங்கி வருகிறது.

''ஒரு கால் அடீ! நால்இலேப் பந்தல் அடீ!'' என்பது கம்பன் கேட்ட விடுகதை. ''அடீ!'' என்று தன்னே அழைத்ததால், ஒளவைக்குச் சினம் மூண்டதாம்; கம்பனுக்கு அறிவு புகட்டக் கருதிய ஒளவை உடனே,

''எட்டேகால் லட்சணமே! ஏமனே
[றும்பரியே!
மட்டில் பெரியம்மை வாகனமே!
[—முட்டமேற்
கூரையிலா வீடே; குலராமன் தூதுவனே!
ஆரையடா சொன்னுய் அடா!''

என்று விடையிறுத்தாளாம்.

இந்த வெண்பாவின் முதல் மூன்று அடிகளும் கம்பன்மேற் கூறிய பெருவசை மொழிகளாம். இறுதியடியாகிய ''ஆரையடா சொன்னுய் அடா'' என்பதில், ''அடீ என்று ஆரைச் சொன்னுய் அடா?'' என்ற வசைப்பொருளும், கம்பன் சொன்ன விடுகதைக்கு விடையும் ஒருங்கே அமைந்து சுவை பயக்கின்றது.

ஆரைக்கீரை என்று கீரை வகையில் ஒன்று உண்டு. அது பெரும்பாலும் நீர்வளமுள்ள இடங்களில் வளர்வது. ஒரே தண்டின் உச்சியில், நான்கு இலேகளே இருக்கும். அந்த இலேகளும் நான்கு பிளவாகப் பிரிந்து இருக்கும். இதையே கம்பன், ''ஒருகால் அடீ! நாலிலேப் பந்தல் அடீ!'' என்ருன். அதற்கு விடையாக, ''ஆரையடா சொன்னுன்-அதாவது, ஆரைக் கீரையைத்தான் சொன்னுய்'' என்னும் பொருள்படும்படி சொல்லிக் கம்பன் செருக்கை ஒளவை அடக்கினுளாம். நடக்காத கற்பனேக் கதை ஆனுலும் சுவையாக இருக்கிறது.

கம்பன் மட்டுமா விடுகதை சொன்னுன்? ''கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்'' என்பது பழமொழியன்ருே? கட்டுத்தறி கவி பாடியதோ? இல்லேயோ? நமக்குத் தெரியாது. கம்பன் வீட்டு வெள்ளாட்டி (வேலேக்காரி) சிறந்த விடுகதை ஒன்றை ஒரு வெண்பாவாகத் தந்திருக்கிருள்.

''வட்டமதி போல்இருக்கும்; வன்னிக்
கொடிதாவும்;
கொட்டுவார் கையினின்று கூத்தாடும்;—
சுட்டால்;
அரகரா என்னுமே அம்பலசோ மாசி!
ஒருநாள்விட் டேன்ஈது உரை''

என்பதே கம்பன் வீட்டு வெள்ளாட்டி பாடிய விடுகதை.

இந்த விடுகதையை அவள், அம்பல சோமாசி என்பவனிடம் சொன்னுளாம்.

சாணியால் தட்டப்படும் வறட்டி என்பதே அதற்கு விடை. வறட்டி வட்டமாக இருப்பதால், ''வட்டமதி போல் இருக்கும்'' என்ருள். வன்னிக்கொடி என்பது நெருப்புக் கொழுந்து. வறட்டியை நெருப்பிலே இட்டால், தீக்கொழுந்து அந்த வறட்டியில் பற்றித் தாவும் அன்ருே? அதனுல், ''வன்னிக்கொடி தாவும்'' என்ருள். வறட்டி தட்டும்போது, தட்டுபவர் கையில் அது கூத்தாடுவது போல் தோன்றுவதால், ''கொட்டுவார் கையினின்று கூத்தாடும்'' என்ருள். வறட்டியைச் சுட்டால் சாம்பல் ஆகும். அதுதான் திருநீறு. நீறு பூசுவோர் ''அரகரா!'' என்று கூறித் தம் நெற்றியில் இடுவர். அதனுல், ''சுட்டால் அரகரா என்னும்'' என்ருள்.

இந்த விடுகதைக்கு விடை கூற ஒரு நாள் அவகாசம் தந்தாளாம். விடை கிட்டியதா இல்லேயா என்பதை நாம் அறிய முடியவில்லே.

இனி, இராம காதையில் காணும் கம்பனின் விடுகதை ஒன்றைக் காண்போம்.

நகரப் படலத்தில் மாளிகைகளே ஓவியம் தீட்டிக் காட்ட வந்த கம்பன், ஒரு கவியை விடுகதையாகவே அமைத்துள்ளான்.

''பாடகக் காலடி. பதுமத்து ஒப்பன;
சேடரைத் தழீயின; செய்ய வாயின;
நாடகத் தொழிலின; நடுவு துய்யன;
ஆடகத் தோற்றத்த மகளிர் அல்லவே''

என்பதே அந்த விடுகதை.

பாடகம் என்பது தண்டை போன்ற மகளிர் காலணி; பாதகடகம் பாடகம் என்ருயிற்று. ''பாடகக் காலடி பதுமத்து ஒப்பன'' என்பது, தண்டை பூண்ட பாதங்கள் தாமரை மலருக்கு ஒப்பாயின என்றும்; ''சேடரைத் தழீஇயின'' என்பது, கணவரைத் தழுவிக்கொள்வன என்றும்; ''செய்ய ஆயின'' என்பது, சிவந்த நிறமுடையன என்றும்; ''நாடகத் தொழிலின'' என்பது, நடனக்கலேயைக் கற்றுள்ளன என்றும்; ''நடுவு துய்யன'' என்பது, நடுப்பகுதி இளநூற்பஞ்சு போன்று மென்மையானவை என்றும்; ''ஆடகத் தோற்றத்த'' என்பது, ஆடுகின்ற அரங்கினிடத்தே தோற்றம் பெறுவன என்றும் பொருள்படுகின்றதன்ருே? ஆதலால் இது, மகளிர் பாதங்கள் என்று கொள்ளலாமெனத் தோன்றுகின்றது.

ஆனல், கம்பன் ''மகளிர் அல்ல'' என்று மகளிரை விலக்கிவிடுவதால், வேறு பொருள் காணல் வேண்டுமன்றோ ?

''பாடகக் காலடி பதுமத்து ஒப்பன'' என்பது, பெருமையுடைய வீட்டுத் தூண்களின் அடிப்பாகம் தாமரை மலர் போன்ற பத்ம பீடம் அமைந்தன என்றும்; ''சேடரைத் தழீஇயின''என்பது,அந்தத்தூண்கள் ஆழமாக நிறுத்தப்பட்டிருப்பதால், பாதல உலகிலுள்ள சேடர்களை (நாகர்களை)த் தொடுவன என்றும்; ''செய்ய வாயின'' என்பது, செம்மையான வேலைப்பாடுகளை உடையன என்றும் : ''நாடு அகத் தொழிலின'' என்பது,யாவரும் விரும்பிக் காணும் சிற்பத் தொழிலுடையன என்றும்; ''நடுவு துய்யன'' என்பது, நடுஇடம் தூய்மை யானவை என்றும் ; ''ஆடகத் தோற்றத்த'' என்பது, பொன்னுலியன்ற தோற்றம் உடையன என்றும் பொருள் கொள்ளும்போது, மாளிகைகள் என்று விடை கிடைக்கின்றது.

கம்ப காவியம் ஒரு பெருங்கடல். அதில் மூழ்குவார்க்கு எத்தனை எத்தனையோ முத்து கள் மூழ்குந்தோறும் கிடைத்துக்கொண்டே இருக்கும்.

''எல்லாப் பொருளும் இதன்கண் உள; இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்''

என்று குறளுக்குக் கூறிய சிறப்புரை, கம்ப காவியத்துக்கும் பொருந்தும் என்பதை மறுக்க இயலுமோ ? அதனலன்றோ தமிழ்த்தென்றல் திரு.வி.க. ''கம்பன் பாடிய இராமாயணத்தில் என்ன இல்லை ? உலகம் இருக்கிறது என்று சுருங்கச் சொல்லலாம்'' என்று கூறி மகிழ்கின்றார் !

கம்பனைப்பற்றி ஜான்சன்

அ. அறிவொளி, எம். ஏ.

''கம்பனைப் படிப்பதா ? கம்பனைப் பேசுவதா ? பகுத்தறிவுக்கே ஒவ்வாத சதையல்லவா ?''—இப்படிச் சில இழுவை ராகங்கள் இன்னமுங்கூட இலக்கியவாதிகளிடம் இருக்கத்தான் செய்கின்றன. 'இந்த மின்மினிப் பூச்சி வெளிச்சத்தை நிலவென்று எண்ணி மயங்கும் சில இளைய தலைமுறைப் பிஞ்சுகள் வெம்பிப் போய்விடுமோ' என்றும் நல்லவர் அஞ்சுகின்றனர். இதற்கொரு காரணமுண்டு ! அறிவியல் யுகத்தில் வாழும் சில மேம்போக்கு வாதமெனும் வறட்சியே அக்காரணம்.

1608-ஆம் ஆண்டு தோன்றிய மில்டன், உலகத்தை உருண்டை என்று கண்டு நிறுவும் காலத்தில் வாழ்ந்த மேதை ! அவனும் கம்பனைப் போல் ஒரு காவியம் படைத்தான். 'சொர்க்க நீக்கம்' (Paradise Lost) என்பது அதன் பெயர். அந்த மில்டனை நம்மைவிட அறிவியல் மண்டிய மேற்கு உலகு இப்போது பழிக்கவில்லை ! மாறாகப் பாராட்டிக்கொண்டிருக்கிறது.

அந்த மில்டனைப்பற்றி டாக்டர் ஜான்சன் எழுதியதை உணர்ந்தால் நம் கம்பன் எவ்வளவு பெரிய மேதை என்பது புலப்படும் ; அவன் நமக்கு விட்டுப் போயிருக்கும் விந்தைமிகு காப்பியத்தில் நம் சிந்தை குளிர்ந்துவிடும். அந்தப் பாட்டனின் பரம்பரைச் சொத்து புறம்போக்காக இல்லாமல் தமிழனின் சொந்தப் பட்டாவாக மாறிவிடும்.

''1000 ஆண்டு இடைவெளிக்கு முன்பு வாழ்ந்த கம்பன், அப்போதைய நாகரிகத்தை எழுதக்கூடாதா ? அக்கால அரசியலை வகுத்துக் காட்டியிருக்கக்கூடாதா ? அந்தக் காலச் சமுதாய வாழ்வைப் படம் பிடித்திருக்கக்கூடாதா? அவனுடைய காலத்தைப்பற்றி முழுமையாக எழுதாமல் ஏதோ ஓர் இருண்ட காலத்தில் அவன் ஏன் சஞ்சரிக்க வேண்டும்?—இப்படிச் சில வக்கிர கிரகங்கள் வாதம் செய்கின்றன.

'அவனுடைய சமகாலத்தின் காட்சிகள், அவன் நேரடியாகவே கண்ட அனுபவங்கள் , ஆடையின்றிக் கிடந்த வாழ்க்கையின் சில உண்மைகள்'— இவைகளை மட்டும் எழுதுவது ஒரு மிகப்பெரிய கவிஞனுடைய அறிவுப் பசியைப் போக்கிவிட முடியாது. ஆம் ; இப்படி நாம் பதில் கூறினால் குருட்டுச் சமாதானம் என்று கூறுவார்கள். என்ன செய்ய முடியும் ? திறனாயும் பெரிய சக்ரவர்த்தியாக இருந்த டாக்டர் ஜான்சனும் இது போலத்தான் மில்டனைப் பற்றிக் கூறும்போது கூறுகிறார். [The Appearances of Nature and Occurrences of Life, did not satiate his appetite of greatness.]

அக்காலத்தில் ஓர் அரசனைக் கம்பன் புகழ்ந்துவிடுவது என்று புறப்பட்டிருந்தால், அந்த அரசனால் கம்பன் ஓர் அரச போகத்தையே அனுபவித்திருக்க முடியும்! ஒரு மாக்கியவெல்லியாகவும் ஆகியிருக்க முடியும் ! ஒரு காலத்தின் நிர்வாணத்தை எழுதுவது வரலாறாக முடியுமே தவிர, எல்லாக் காலத்துக்கும் வழிநடையாகிவிட முடியாது. எளிய கற்பனைகளையோ வாழ்வையோ செதுக்குவது கவியுலகச் சிற்றரசர் தொழில்; இவன் பேரரசன்; சக்கரவர்த்தி.

''மனிதனை நோக்கி அருள் என்னும் பாதையிலே ஆண்டவன் நடந்து வரும் அழகை; மதச்சடங்குகளுக்கு உள்ளே மண்டிக் கிடக்கும்

அறிவுமயமான பயன்களை; அறம் என்ற சட்டத்துக்கு அடங்கி நடக்க வேண்டியதன் அவசியத்தை !''—ஆம், இவைகளை ஒரு மிகப் பெரிய மேதையால்தான் எழுத முடியும்—இவை சாதாரணமானவர்களின் சிந்தனைக்குள் சிறைப்பட மறுக்கும் சித்தாந்தம். இப்படி நாம் கூறும்போது நம்மை ஏளனமாகச் சில விழிகள் வடுப்படுத்துகின்றன ! இதே மாதிரி தான் ஜான்சனும் மில்டனுக்காகக் கூறியுள்ளான் என்று அவர்கள் தெரிந்து ஆறுதலடையட்டும் ! இதோ அவை :-

''His purpose was the most useful and the most arduous ; to vindicate the ways of God to man, to show the reasonableness of religion, and the necessity of obedience to the divine law.''

தசரதனின் ஆட்சியில் அவன் காட்டும் சோஷலிசமும் அறமும் அவன் காலத்துக்குச் சொந்தமானவையல்ல ! கிஷ்கிந்தையில் அவன் நிறுவிய (வாலியின்) ஓர் வல்லாட்சி அவன் காலத்தில் காணப்படாத காட்சி ! அளவற்ற இன்பக்கிடங்காக அவன் காட்டும் இலங்கை அரசுகூட அவன் காலத்தில் இருக்கவில்லை !

அவன் வாழ்ந்த காலத்தின் அரசுகளோ காட்சிகளோ அவனுடைய மனவெழுச்சிக்கு முன்னால் அற்பமான காட்சிகள்! ஆகவே, அக்காலத்து அரசுகளின் அடிச்சுவடே அவன் காப்பியத்தில் காணப்படவில்லை. தன்னால் முடிந்தவரை சிந்தித்து, அந்தச் சிந்தனை உலகத்தையே தனது விளையாட்டு மைதானமாக ஆக்கிக்கொண்டான் அவன் ! அவன் காட்டிய அரசுகளின் குறைகளையும் நிறைகளையும் வருகின்ற சமுதாயம் உணர வேண்டுமென்பதற்கே அவைகளை நிறுவினான். ஆம் ; நாம் இப்படிக் கூறும்போது அவர்கட்குக் கசப்பாக இருக்கும். ஆனால், இப்படித்தான் மில்டனைப் பற்றி ஜான்சனும் கூறுகிறார், இதோ :

''Milton's delight was to sport in the wide regions of possibility ; reality was a scene too narrow for his mind.''

நரசிங்கமூர்த்தியாகப் பெருவடிவம் கொண்டு பிரமனுக்கு முன்னால் வரும் இறைவனின் பேருருவத்தை எளிதில் பாடிவிட முடியுமா ? பல்லாயிரங்கோடி அண்டங்களும் இறைவனுக்குள்ளே அடங்கிப் போய்விட்டன என்று கம்பன் காட்டுவான். அதுமட்டுமா ?

''வேதங்கள் அறைகின்ற உலகெல்லாம்
விரிந்தனநின்
பாதங்கள் இவைஎன்னின் படிவங்கள்
எப்படியோ ?''

என்று விராதன் இராமனைத் துதிக்கையில், அண்டகோளங்கள் அனைத்தையும் இறைவன் திருவடிகள் மட்டுமே அடக்கிக்கொள்ளும்; பிற உருவங்கள் எங்கே உள்ளன என்றும் வியப்பதைக் கம்பன் காட்டுவான். இப்படிக் கம்பன் பிற அண்டங்களில் நுழைந்து உலா வருவதைப் படிக்கும்போதெல்லாம், இது வறட்டுக் கற்பனையல்லவா என்ற விவாதம் நம்மில் சிலருக்கு வந்து தலைநீட்டுவது இயல்பே !

வெறும் கற்பனையால் மட்டுமே பயணம் செய்து காணக்கூடிய உலகங்களை நமக்குக் காண்பிக்கக் கம்பன் தனது திறமைகள் அனைத்தையும் ஒருசேர வெளியே அனுப்பி வைத்து, அந்த உண்மைகளை நமக்குப் படம் பிடித்துக் காட்டுவதாக நாம் பதில் சொல்லலாம் ;சொன்னால் விடுவார்களோ ? நமக்குப் பகுத்தறிவே இல்லை என்று முடிவு செய்துவிட மாட்டார்களோ ? ஆனால், ''He sent his faculties out upon discovery, into worlds where only imagination can travel '' என்று ஜான்சனும் இப்படித்தான் பதில் கூறுகிறார் என்பதை அவர்கள் படிக்கட்டும்.

இவ்வாறு, கம்பன் படைத்த காப்பியத்தினாலே இப்போது என்னதான் பயன் வர முடியும் என்று உரத்தகுரலில் ஒரு வினா கேட்கப்படுகிறது ! அதை நாம் ஒதுக்கிவிடுவது நன்மையன்று. அதை வரவேற்றுச் சந்திக்க வேண்டும்.

கொடுமையின் கூலியாளாகப் போய்விட்ட கூனி - ஆசைக்குத் தன்னையே அடகு வைத்துவிட்ட கைகேயி - மண்டிக்கிடந்த வலிமையாலே மன்னிக்க மறந்துபோன வாலி - நன்றி மட்டும் போதுமென்று நம்பி நன்மைக்கு விடைகொடுத்துவிட்ட கும்பகர்ணன் - மதுவாலும், மங்கையாலும், மணிமகுடத்தின் மதமதப்பாலும் மறதி என்ற மயக்கத்துக்கே மன்னனாகிவிட்ட சுக்ரீவன் - குலமானத்துக்கு வீரத்தைப் பலியிட்ட இந்திரசித்தன் - நஞ்சைப் போய் ஓர் அமுதமென்று நம்பி, காமத்தாலே நைந்துபோன இராவணன் ! ஆம் ; இந்தப் பாத்திரங்கள் என்றைக்கோ இறந்துவிட்ட சாம்பல் மேடுகளல்ல ! எல்லாக் காலத்திலும் எல்லா மனிதரிடத்திலும் அவ்வப்போது வந்து வந்து

முளைவிட்டு வளர்கின்ற பச்சைத் தாவரங்கள் அல்லவா ?

இந்தக் குற்றவாளிகள் பட்ட கொடுமைகளை நாமும் அறிந்துகொண்டுவிட்டால், அப்படி அறிந்த படிப்பினை நம்மோடு நமதாக ஒன்றிப் போய்விட்டால், நாமே குற்றங்கள் செய்யப் போகும் கொடிய நேரத்தில் மீண்டும் புதிதாகப் படிக்கத் தேவையில்லை; அறிவுரைக்காக அலைய வேண்டியதில்லை அல்லவா? இப்படியிருந்தால் இத்தண்டனை நமக்குங்கூட வந்து சேரும் என்று எதிர்பார்த்து நிதானமாக நடந்துகொண்டுவிட்டால், நாம் பண்பட்டு அல்லது பயந்துபோய் அழியாமல் இருக்கலாமே! "Being therefore not new they raise to unaccustomed emotion in the mind, what we knew before, we cannot learn, who is not unexpected cannot surprise." இப்படியொரு காரணத்தையும் ஜான்சன்தான் நமக்குக் காட்டுகிறார்.

'இராவணனா? அவனுக்குப் பத்துத் தலையா? கும்பகர்ணனா ? அவன் இரண்டு தோள்களையும் பார்க்கப் பல நாள் பிடிக்குமா ? இவற்றை யார் நம்புவார்கள் ? விராதனா ? விரல் இடுக்கிலே மதயானையை அடக்குவானாமே ! இவையெல்லாம் பொய்யென்று உங்களுக்குத் தெரியவில்லையா ?'- இப்படிக் கேட்கிறார்கள். பொய்தான் ! அந்தத் தோற்றம் இப்போதைக்குப் பொய்தான் ! தோற்றத்தின் உள்ளே இருக்கும் ஏற்றம் மெய்யல்லவா ?

சதுரங்கக் காய்களை அரசன், அரசி என்று பெயரிட்டு ஆடும்போது அவை உண்மையாகி விடுமா ? அந்த இடத்தில் உண்மை பொய் என்ற ஆராய்ச்சியில்லை. ஓர் அரசனை மற்ற அரசன் எப்படி எப்படித் தாக்குவான் என்ற அறிவுடைமைதான், அங்கு அந்தப் பொய்யான அரசி, அரசனுக்கு உள்ளேயும் புதைந்து கிடக்கும் நோக்கமாகும்.

பத்துத்தலை என்பது எண்ணிக்கையன்று, அறிவு ஆற்றல்களின் மொத்த மதிப்பீடு. கும்பகருணன் உடலன்று பிரச்சினைக்கு உரியது, அவன் பலந்தான் தேவையானது.

பரதனிலே ஒரு வைராக்கிய மனத்தையும், இலக்குவனிலே ஒரு பக்தி நெஞ்சையும், சத்துருக்கனிலே ஒரு கர்ம யோகியையும், இராமனிலே ஞானத்தின் விக்கத்தையும், சீதையாலே கற்பின் களிநடனத்தையும், அனுமனிலே பணிவுமிக்க தொண்டின் சிறப்பையும் கம்பன் நமக்கு அடையாளம் காட்டுகிறான்.

ஆகவே, அவன் படைத்த பாத்திரங்கள் அரைகுறையானவையல்ல. முழுமையான பண்புகள். உருவமற்ற பண்புகளுக்கு அந்தப் புலவனின் கவிதா மேன்மை உடம்புகளைக் கொடுப்பதே, அழகுணர்ச்சியாகிய உடைகளை அணிந்துவிடுவதே கம்பனின் முயற்சி. கம்பனின் கற்பனைச் சூத்திரத்தில் கணக்குச் சுத்தமாக அந்தப் பண்புகள் அந்தரத்தில் ஆடுகின்றன. இது ஓர் கவிஞனின் உரிமைப் பத்திரம்! இதனைக் கிழித்தெறியும் உரமுடையார் உலகில் இல்லை. இப்படி நாம் விடை கூறினால் விடுவார்களா நம்மை ? இதோ ஜான்சன் இதைப் போல் கூறுவதைப் படிக்கட்டும் அவர்கள் : "To exalt causes into agents to invest abstract ideas with form and animate them with activity, has always been the right of poetry.'

மனிதன் ஒரு சிறிய காலத்தில் வாழ்ந்து முடிய வேண்டிய விளையாட்டுப் பொம்மை ! அந்தப் பொம்மை வாழ்ந்து முடியவேண்டிய காலத்துக்கு மட்டுமே போதுமான அறிவும் ஆற்றலுந்தான் அதற்குக் கொடுக்கப்பட்டுள்ளது ! கம்பனுக்குக்கூட அறிவு அளந்துதான் வைக்கப்பட்டிருந்தது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் செல்லுபடியாகக்கூடிய காசில் அந்த மதிப்புக்குத் தக்க ஒரு பொருளைத்தான் வாங்க முடியும். அவனுடைய அறிவு என்னும் பறவையின் சிறகுகளில் ஓரளவு பாரந்தான் சுமக்க முடியும். முடிவே கூறமுடியாத கால வெள்ளம் முழுமைக்கும், அதில் உண்டாகும் நன்மை தீமைக்கும் ஒரு சிறு காலத்தின் கவிதைப் பறவை எப்படித்தான் தீர்மானங்களைத் திட்ட முடியும்? ஆனால், அப்படித் திட்ட முடியாததை அப்பறவை தீட்டினால் வியப்பல்லவா ? அதனால்தான் பாரதிகூட அப்பறவையைக் 'கம்பன் என்று ஒரு மானுடன்' என்று வியந்து வியந்து கூறினான்.

கம்பன் காவியம் காலவெள்ளத்தின் நன்மை தீமைகளைப் பாகுபடுத்தி முடிவு கூறும் ஒரு கருவி. அது காலவெள்ளம் முழுமைக்கும் சொந்தமானது. இதனை நாம் கூறினால் ஒப்பமாட்டார்கள். "The good and evil of Eternity are too ponderous for the wings of wit" என்று ஜான்சன் கூறுவதையாவது படிக்கட்டும்.

சுந்தரகாண்டத்தைப் போலச் சில காண்டங்கள் சுவைக்கவில்லையே ! யுத்தகாண்டம் போலவே அயோத்தியா காண்டம் அமையவில்லையே ! பால காண்டத்தின் சில பகுதிகள்

சிறக்கவில்லையே. பரசுராமன் வருவதும் அகலிகை எழுவதும், சோலை ஆறுகளின் பழைய வரலாறும், முனிவர்கள் இடையிடையே வந்து போகும் காட்சிகளும் தேவைதானா? –இப்படிச் சிலர் கேட்கின்றனர்.

இவைகள் பொறுமையோடு கேட்கப்படும் பக்குவ வினாக்கள். எல்லாவிடத்தும் கம்பன் கைத்திறமை காணப்படாத காரணமென்ன என்று சிலர் குறைப்படுகிறார்கள். எல்லாவிடத்தும் தத்துவ வித்தையை அவன் காட்டாமையால் கைச்சரக்குத் தீர்ந்துவிட்டதாகப் பொருளன்று.

காலையும் மாலையுமின்றிக் கதிரவன் நடுப்பகல் போலவே நாள் முழுதும் வெயில் எரித்தால் நம் கதி என்னவாகும்? இரவு கடினமாகத்தான் இருக்கிறது; ஆகையால், அது தேவையற்ற பொழுதாகிவிடுமா? ஒரு பெரிய அரண்மனையில் எல்லாப் பகுதிகளுமே அழகு கொழிக்கும் அந்தப்புரங்களாகிவிடுமா? அந்தப்புரங்களை அடையும் நடைபாதைகளும் வேண்டாமா? அதனால் நடைபாதைகள் பயனற்ற இடங்களாகிவிடுமா?

அதுபோலவே ஒவ்வொரு காட்சியும் காரண காரியங்களுக்காகவே அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. ஒரு பெரிய காப்பியம் இப்படிப்பட்ட கூறுபாடு கொண்டதாகவே இருக்கும். ஒரு காப்பியம் ஆராய்ச்சிக்கும் பயன்தர வேண்டும். பொழுது போக்கிற்கும் வழியுடையதாயிருக்க வேண்டும். ஆம்; இந்தச் சிந்தனையை ஜான்சன்தான் தருகிறார்:

"In every work one part must be for the sake of others, a palace must have passages, a poem must have transitions. It is no more to be required that wit should always be blazing than that the SUN should always stand at noon. In a great work there is a vicissitude of luminous and opaque parts, as there is in the world a succession of a day and night.

டாக்டர் ஜான்சன் மில்டனுக்காகத்தான் எழுதினார். ஆனால், உயரிய சிந்தனைத் திறம் கனிந்த அவர் பார்வைக் கீற்றுகள் கம்பனுக்குங் கூடப் பொருத்தமாக உள்ளன. கம்பனுக்கான ஜான்சன் தமிழகத்தில் பிறப்பதற்குப் பதிலாக இங்கிலாந்திலே பிறந்துவிட்டதாக எண்ணுவோம்.

இராமன் யார்?

புலவர்மணி - சித்தாந்த வித்தகர் -
முரு. பழ. இரத்தினம் செட்டியார்

திருப்பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள திருமாலே இராமனாக அவதரித்தான் என்பதைக் கம்பன்,

"அலைகடல் நடுவணோர் அனந்தன் மீமிசை
மலைஎன விழிதுயில் வளரும் மாமுகில்
கொலைதொழில் அரக்கர்தம் கொடுமை
தீர்ப்பென்' என்று,
உலைவுறும் அமரருக்கு உரைத்த
வாய்மையை"

"ஒருபகல் உலகெலாம் உதரத்துள் பொதிந்து,
அருமறைக்கு உணர்வுஅரும் அவனை
அஞ்சனக்
கருமுகிற் கொழுந்து எழில்காட்டும்
சோதியை,
திருஉறப் பயந்தனள் திறம்கொள்
கோசலை"

என்னும் பாடல்களில் ஐயத்திற்கிடமின்றித் தெளிவாகத் தெரிவிக்கின்றன.

சுக்கிரீவன் இடத்தே அநுமன் பேசும் பொழுது,

"சங்கு சக்கரக் குறிஉள தடக்கையில், தாளில்
எங்கும் இத்தனை இலக்கணம் யாவர்க்கும்
இல்லை;
செங்கண் விற்கரத்து இராமன் அத்
திருநெடு மாலே;
இங்கு உதித்தனன் ஈண்டுஅறம்
நிறுத்துதற்கு இன்னும்"

எனக் கூறுவதன்வாயிலாக இக்கருத்தினை அசைக்க முடியாதவண்ணம் உறுதிப்படுத்துகிறான்.

இராவணன் சீதை இடத்தே வந்து பேசுகிறான். அப்பொழுது அவள்,

"அங்கண்மா ஞாலமும் விசும்பும் அஞ்சவாழ்
வெங்கணாய் புன்தொழில் விலக்கி
மேற்கொளாய்
செங்கண்மால், நான்முகன், சிவன்என்றே
கொலாம்,
எங்கள்நா யகனையும் நினைந்தது ஏழைநீ"

எனக் கூறுகிறாள். "என் நாயகன் திருமாலும் அல்லன்; திசைமுகனும் அல்லன்; "சிவனும் அல்லன்", என அவள் கூறுவதால், திருமால், பிரமன், சிவன் ஆகிய மூவர்க்கும் மேற்பட்டவன் இராமன் என்பது பெறப்படுகிறது. இவ்விடத்தில் திருமாலே இராமன் என்பது அடிபட்டுப்போகிறது.

அநுமன் இராவணனைச் சந்திக்கிறான்; அப்பொழுது அவன்,

"தேவரும் பிறரும் அல்லன் திசைக்களிறு
அல்லன் திக்கின்
காவலர் அல்லன் ஈசன் கைலையம் கிரியும்
அல்லன்
மூவரும் அல்லன்"

எனச் சொல்வதன் மூலம் சீதையின் கருத்தை உறுதி செய்கிறான். இதனால், இராமன் மும்மூர்த்திகளுள் ஒருவனாகிய திருமால் அல்லன் என்றாகிறது. ஆனால், உடனே அநுமன் இக்கருத்தினை மாற்றிக்

"காரணம் கேட்டி யாயின் கடைஇலா மறையின்
கண்ணும்
ஆரணம் காட்டமாட்டா அறிவினுக்கு அறிவும்
அன்னோன்;
போர்அணங்கு இடங்கர் கவ்வ, பொதுநின்று,
'முதலே' என்ற
வாரணம் காக்க வந்தான் அமரரைக் காக்க
வந்தான்"

எனச் சொல்கிறான். கஜேந்திரனைக் காக்க வந்தவன் திருமால்தான் என்பதை யாரும் மறுப்பதில்லை. ஆகவே, இவ்வாறு சொல்வதன் மூலம் இராமன் திருமாலே என்கிறது. இதற்கு அடுத்த பாட்டில் இக்கருத்தினையும் அநுமன் மாற்றி,

''மூலமும் நடுவும் ஈறும் இல்லதுஓர் மும்மைத் தாய
காலமும் கணக்கும் நீத்த காரணன் கையில் ஏந்திச்
சூலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும்விட்டு அயோத்தி வந்தான்''

எனக் கூறுகிறான். சிவனும் திருமாலும் பிரம்மாவும் ஒன்று சேர்ந்து இராமனாக வந்திருக்கிறார்கள் என அநுமன் ஈண்டு ஒரு புதுக்கருத்தை வெளியிடுகிறான்.

இராவணன் போர்க்களத்தில் இராமனை நோக்குகிறான் ; ஞானம் உதயமாகிறது.

''சிவனோ அல்லன்: நான்முகன் அல்லன் திருமாலாம்
அவனோ அல்லன்: மெய்வரம் எல்லாம் அடுகின்றான்:
தவனோ என்னின் செய்து முடிக்கும் தரன்அல்லன்:
இவனோ தான்அவ் வேத முதல்கா ரணன்!'' என்றான்''

எனக் கூறுகிறான். சிவன், பிரம்மன், திருமால் ஆகிய மும்மூர்த்திகட்கும் மேற்பட்ட வேத முதற்காரணனாகிய பரம்பொருளே இராமன் என்பது இராவணன் கருத்து ; அவன் கூறுவதிலிருந்து பரம்பொருள் என்பது மும்மூர்த்திகட்கும் மேற்பட்ட ஒன்று என்பது புலனாகிறது.

''தன் பாட்டுடைத் தலைவனைச் சிறப்பிக்க எண்ணுகின்ற கம்பன் கதைத் தொடர்பு பற்றி அவனைத் திருமால் என்றாலும், மும்மூர்த்திகளுள் ஒருவனாகிய திருமால் என்னும் அளவில் அவனைச் சிறைப்படுத்த விரும்பவில்லை ; யாவுமாய் - எங்குமாய் நிறைந்துள்ள முழுமுதற் பொருளாகிய பரம்பொருளே அவன் எனக் காட்ட எண்ணுகிறான்'' எனக் கம்பராமாயண அறிஞர் பலர் சமாதானம் சொல்கின்றனர். இதனைவிடப் போலியான ஒரு சமாதானம் வேறிருக்க முடியாது.

பகைவனாகிய இராவணன் இடத்தில் அநுமன் தன் பாட்டுடைத்தலைவனைப் பாட்டுக்குப் பாட்டு மாற்றிக் கூறுவது சிறப்பாகுமோ ? ''மூவரும் அல்லன்'' என முதலில் கூறிய அவன், உடனே அம்மூவர்க்கும் மேற்பட்ட பரம்பொருள் அவன் எனச் சொல்வதுதானே முறை ? இதனை விடுத்துத் திடீரென அவனைக் கீழே இறக்கி, ''வாரணம் காக்க வந்தான்'' - யானையைக் காக்க வந்த -மூவருள் ஒருவனாகிய திருமாலே அவன் எனச் சொல்கிறான் ; இவ்வாறு சொல்லும்போது, அநுமனுக்குப் பைத்தியமோ என இராவணன் எண்ணமாட்டானா? அப்புறம் மூவரும் சேர்ந்த மூர்த்தி என்கிறான் ; அவன் பேசுவது ஒரே குழப்பமாகவன்றோ இருக்கிறது ! இச்சிக்கலை அறுக்காமல் கம்பன், பாட்டுடைத்தலைவனை மனம் போனவாறு புகழ்ந்து உயர்த்துகிறான் எனச் சொல்வது, நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளும் ஒரு சமாதானமாகும். பெருங்கவிஞன் ஏதோஒரு கருத்தை மனத்திற்கொண்டுதான் இவ்வாறு பாடல்களை அமைத்திருக்க வேண்டும். வெறுமனே உயர்த்திச் சொல்லுவதற்காக முன்னுக்குப்பின் முரணாகப் பாடுவது அவன் திறத்திற்குப் பேரிழுக்காக முடியும் என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை.

வைணவ சமயத்தில் திருமால்தான் பரம்பொருள். அவர்க்கு மேற்பட்ட பொருள் எதுவும் இல்லை. திருமாலே இராமன் என்று சொன்ன கம்பன், வைணவ சமயக் கோட்பாட்டின்படி அவனே பரம்பொருள் என எளிதில் சொல்லிவிடலாம். அவன் திருமால் அல்லன் என்றும், மும்மூர்த்திகளும் சேர்ந்த வடிவம் என்றும், மும்மூர்த்திகளுக்கும் மேற்பட்ட பரம்பொருள் என்றும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. திருமால்தான் பரம்பொருள் என்னும் கொள்கை கம்பனுக்கு உடன்பாடான ஒன்றே என்பதை இரணியன் வதைப் படலத்தில் வெளிப்படுத்தியிருக்கிறான்.

பிரகலாதன் தன் ஆசிரியனிடம் பின் வருமாறு வினவுகிறான் :

''வேதத் தானும்நல் வேள்வியி னானும் மெய் உணர்ந்த
போதத் தானும்அப் புறத்துள எப்பொருளானும்
சாதிப் பார்பெறும் பதம்தலைக் கொண்டு சமைந்தேன்
ஓதிக் கேட்பது பரம்பொருள் இன்னம் ஒன்று உளதோ?''

''பரம்பொருள் இன்னம் ஒன்றுளதோ?'' என வினவுதன் வாயிலாகத் திருமாலே பரம்பொருள் என்னும் கொள்கையைப் பிரகலாதன் சாதிக்

கிருன். வான்மீகத்தில் இரணியன் வதைப் படலம் இல்லை ; கம்பன் தன் சொந்த விருப்பம் காரணமாகவே இப்படலத்தைப் பாடியுள் ளான். இதனுல் திருமாலையே பரம்பொருள் எனச் சொல்ல வேண்டும் என்னும் ஆசை அவருக்கு உண்டு என்பது இனிது புலனுகிறது.

திருமாலைப் பரம்பொருள் எனப் பிரக லாதன் கூற்ருகச் சொல்வதோடு கம்பன் அமையவில்லை. தன் கூற்ருகவே, பிரம்மாவும் சிவனும் நரசிங்க அவதாரம் எடுத்த திருமாலைத் தொழுகின்றனர் எனச் சொல்கிருன்.

''என்றுஆங்கு இயம்பி இமையாத
எண்களானும்
வன்தாள் மழுவோனும் யாரும்
வணங்கினரால்
நின்ருர் இருமருங்கும் நேமிப் பெருமானும்
ஒன்ருத சீற்றத்தை உள்ளே ஒடுக்கினுன்''

சிவபெருமானைவிடத் திருமாலே மேலான வன் என விராதன் துதியில் கம்பன் புராண நிகழ்ச்சி ஒன்றை எடுத்துக்காட்டிப் பேசுகிருன்.

''மெய்யைத்தான் சிறிதுணர்ந்து நீவிதித்த
மன்னுயிர்கள்
உய்யத்தான் ஆகாதோ ? உனக்கு என்ன
குறைஉண்டோ ?
வையத்தார், வானத்தார் மழுவாளிக்கு
அன்றுஅளித்த
ஐயத்தால் சிறிதுஐயம் தவிர்ந்தாரும்
உளர் ஐயா!''

''சிவபெருமான் பிரம்மாவின் தலையைக் கிள்ளியபோது அத்தலை அவர் கையில் ஒட்டிக் கொண்டது ; யார் பிச்சை போட்டும் அத் தலையோடு அவர் கையை விட்டு அகலவில்லை; திருமால் பிச்சை போட்டபின்னரே அது நீங்கி யது ; சிவபெருமான் பரம்பொருளா என நினைந்த பலர் இந்நிகழ்ச்சியால் அந்த ஐயம் நீங்கித் திருமாலே பரம்பொருள் என உணர்ந் தனர்'' என்பது இப்பாடற் கருத்தாகும்.

''ஓம் நமோ நாராயணுய'' என்னும் மந்திரத்தைச் சிவபெருமானும் பிரம்மாவும் ஓதாவிட்டால் தம் நிலையை மறந்தவராவார் எனப் பிரகலாதன் வாயிலாகக் கம்பன் சொல் வதும் ஈண்டு நினைவுகூரத் தக்கதாகும்.

''முக்கண் தேவனும் நான்முகத்து ஒருவனும்
முதலா
மக்கள் காறும்இம் மந்திரம் மறந்தவர்
மறந்தார்''

இராவண சங்காரத்தின் பின்னர்ச் சீதை அக்கினிப் பிரவேசம் செய்தாள். அதுசமயம் இராமபிரான் யார் என்பதை அவனுக்கு உணர்த்துமாறு தேவர்கள் பிரம்மதேவனை வேண்டுகின்றனர். அப்பொழுது நான்முகன்,

''எனக்கும் எண்வகை ஒருவற்கும்
இமையவர்க்கு இறைவன்
தனக்கும் பல்பெரு முனிவர்க்கும் உயிருடன்
தழீஇய
அனைத்தி னுக்கும் நீயே பரம்என்பதை
அறிந்தார்
வினைத்துவக்குடை வீட்ட அருந்தனை நின்று
மீள்வார்''

எனக் கூறுகிருன். ''பிரம்மதேவனுகிய எனக் கும் சிவபெருமானுக்கும் நீயே பரம்'' என ஈண்டுச் சொல்வதால், ''மும்மூர்த்திகளுள் ஒருவனுகிய திருமாலே தலைவன் ; சிவபெரு மானும் பிரம்மாவும் அவன் தலைமையின்கீழ் நின்று செயலாற்றும் மூர்த்திகளாவர்'' என்பது பெறப்படுகிறது. ஈண்டு எடுத்துக்காட்டியுள்ள பாடல்கள் எல்லாப் பதிப்புகளிலும் காணப் படுவதால் அவற்றை இடைச்செருகல்கள் எனக் கூற முடியாது.

''முதலாவார் மூவர்அம் முவருள்ளும்
முதலாவான்
முரிநீர் வண்ணன்''

என்னும் ஆழ்வார் கருத்தையே கம்பன் பக்திப்பெருக்கோடு தன் பாடல்களில் வெளிப்படுத்தியிருக்கிருன். எல்லாத் தெய்வ மும் ஒன்றே என்னும் சமரச நோக்கோடு தன் கருத்தை அவன் வெளியிட எண்ணியிருந்தால், இப்பாடல்களில் சிவபெருமானை இவ்வாறு குறைத்துப் பாடியிருக்கமாட்டான். இவ்விடங் களில் வான்மீகம் சிவபெருமானைப்பற்றிப் பேசாமையால் பாத்திரங்கள் வாயிலாகக் கம்பன் தன் கருத்தையே நமக்கு அறிவிக்கிருன் எனக் கொள்ள வேண்டியிருக்கிறது.

கவிஞன் தன் சமயக் கோட்பாட்டைத் திறம்பட எடுத்துக்கூறுவது சிறப்பே அன்றி இழுக்கன்று ; சமரசமாகப் பாட வேண்டும் என நினைப்பது இன்றையப் போக்கில் சிறப் பாகத் தோற்றக்கூடும். ஆனுல், சமய அழுத்தத் தோடு நூல் சமைப்பதுதான் பழங்காலத்தில் சிறப்பாகக் கொள்ளப்பட்டிருக்கிறது.

காவியத்தை ஆராயப்புகும் நாம் கவிஞன் உள்ளம் எப்படி இருக்கிறதென நோக்க வேண் டுமே அல்லாமல், நம் கருத்திற்கேற்ப அவன் பாடியிருக்கிருனு என நோக்கக்கூடாது. நாம் சைவராக இருந்தால் கம்பன் சைவத்தையே

சிறப்பித்துப் பாடுகிறான் எனச் சாதிக்க முயல்கிறோம்; சமரசத்தில் நமக்கு ஈடுபாடு இருந்தால் கம்பனும் சமரசமே பாடுகிறான் எனச் சொல்ல முற்படுகிறோம்; வேற்றுச் சமயத்தைச் சேர்ந்தவராக நாம் இருந்தால் கம்பன் அந்தச் சமயத்தையும் சிறப்பிக்கிறான் எனக் கூற ஆசைப்படுகிறோம்; பகுத்தறிவுவாதியாக நாம் இருந்தால் கம்பன் மதச்சார்பற்றவன் என மெய்ப்பிக்க ஆதாரம் தேடுகிறோம். நம் சொந்த விருப்பு, வெறுப்பை ஒதுக்கிவிட்டுக் கவிஞன் என்ன நோக்கில் பாடுகிறான் என்பதை வெளிப்படுத்துவதே உண்மைஆராய்ச்சியாகும்.

''மும்மூர்த்திகளுள் திருமாலே தலைவன்; சிவனும் பிரம்மாவும் அவன் ஏவல்வழி நின்று முறையே அழித்தலையும் படைத்தலையும் செய்கின்றனர்; திருமால் காத்தல் தொழிலைச் செய்கின்றார். அழித்தலும் படைத்தலும் அவன் ஏவல் வழியே அவன் துணைகொண்டு இயற்றப்படுவதால் அவற்றையும் அவனே செய்கிறான் எனச் சொல்வதும் பொருந்தும்,''—இது வைணவ சமயக் கோட்பாடாகும். கம்பன் இக்கோட்பாட்டைப் பல பாக்களில் தெளிவுற எடுத்துக் கூறியுள்ளான்.

வைணவம் திருமாலுக்கு இருவகை நிலை உண்டு எனச் சொல்கிறது; அவன் பரம்பொருளாக நிற்கின்ற நிலை ஒன்று; கருணை காரணமாக அந்நிலையினின்றும் இறங்கி வந்து திருப்பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள நிலை ஒன்று.

சைவத்தில் சிவபெருமானுக்குச் சொரூப நிலை, தடத்த நிலை என இருவகை நிலை பேசப்படுவது போல, வைணவத்தில் திருமாலுக்கு இருவகை நிலை பேசப்படுகிறது.

பரமபதமாகிய வைகுந்தத்தில் திருமால் பள்ளி கொள்வதில்லை; தாமரைப்பூவில் அவர் வீற்றிருப்பார்; ஆழ்வார் ''கிடந்தான் நின்றான் இருந்தானை'' எனப் பாடுவதில் கிடந்த நிலை திருப்பாற்கடலில் என்றும், நின்ற நிலை தேவருலகில் என்றும் **இருந்த நிலை வைகுந்தத்தில் என்றும் வைணவம் பேசும்.** வைகுந்தத்தில் திருமால் இருக்கும் நிலையே பரம்பொருள் நிலையாகும். அந்நிலையில் சிவன், திருமால், பிரம்மா என்னும் பேதம் இல்லை. பரம்பொருளாகிய திருமால் தன்னுள் பிரம்மாவையும், சிவனையும் ஒடுக்கிக்கொண்டு மூவுருவும் ஓர் உருவாகக் காட்சி அளிக்கிறார். **இவ்வாறு ஒடுக்கும் ஆற்றல் திருமாலுக்கே உண்டாதலால், பரமபதத்தில் அவரேதான் தலைவர்;** ஆனால், ஆண்டு பிரம்மாவும் சிவனும் தனித்தனி மூர்த்திகளாக இல்லாமல், திருமால் உருவில் ஒன்றி ஏக உருவாக விளங்குவதால், யார் பெரியவர் என்னும் வினாவுக்கே இடமில்லை. இதனால் ஆண்டுத் திருமாலைத் தலைவர் என்று கூறாமல், மூலமாய் நிற்கும் முழுமுதற்பொருள் என வைணவம் கூறும். இந்நுட்பத்தை நமக்கு உணர்த்தவே கம்பன்,

''அரன்அதிகன் உலகுஅளந்த அரிஅதிகன்'' என்றுரைக்கும்

அறிவி லோர்க்குப்
பரகதிசென் றடைவரிய பரிசேபோல் புகல்அரிய

பண்பிற் றூமால்
சுரநதியின் அயலதுவான் தோய்குடுமிச் சுடர்த்தொகையே

தொழுதோர்க் கெல்லாம்
வரன்அதிகம் தரும்தாயே அருந்ததிஆம் நெடுமலையை

வணங்கி அப்பால்''

எனக் கூறுகிறான். இது சமரசப்பாட்டன்று; ''பரமபதமாகிய வைகுந்தத்தில் திருமால் உருவில் சிவ உருவும் பிரம்மாவின் உருவும்அடங்கி ஏகமாய் விளங்குவதால், ஆண்டுச் சிவன் பெரியவனா, திருமால் பெரியவனா என வினா எழுவதற்கே இடமில்லை; அவ்வாறு வினவுபவர் மூல நிலை பற்றிய உண்மையை அறியாதவராவர்; மூல நிலையை அறியாத அவர்க்குப் பரகதியாகிய பரமபதம் கிட்டாது'' என்பது இப்பாடலின் உண்மைப் பொருளாகும். இது வைணவம் கூறும் மூலநிலை பற்றிய தத்துவமாதலால், பலர் இதனைத் தெரிந்துகொள்ளாமல் கம்பன் ஈண்டு, சமரசம் பாடுகிறான் என முடிவு செய்துவிட்டனர்.

பரம்பொருளாகிய திருமால் மூவுருவும் இணைந்த நிலையினர் என்னும் கருத்து வைணவத்திற்குரிய தனிக்கொள்கையாகும். வேறு சமயங்கள் இவ்வாறு கூறவில்லை. சொரூப நிலையில் சிவன் ஒருவனே என்பது சைவக் கொள்கை; மூல நிலையில் திருமால் மூவுருவும் சேர்ந்த ஒருவன் என்பது வைணவக் கொள்கை; சைவம் மட்டுமே சிவனை உண்மையில் ஒருவன் என்கிறதென்னும் உண்மையை உணர்த்தவே மணிவாசகர், ''ஒருவன் என்னும் ஒருவன் காண்க'' எனப் பாடியிருக்கிறார். சங்க நூற்கள் ''ஒருவன் போல'' எனச் சிவனைச் சுட்டுவதற்கும் காரணம் இஃதே ஆகும். வைணவம் மூல நிலையில் மூவுருவும் இணைந்த ஓர் உருவு பேசுவதால், திருமாலை ''''ஒருவன்'' எனத் தமிழ் நூல்கள் தனித்தெடுத்துச் சுட்டுவதில்லை.

பெருமான் அவ்வாறில்லாமல் மூலமாய் நிற்கிறுன் என்றும் வைணவம் கொள்வதால், இரு பெருமானுக்கும் பொருளால் வேறுபாடு சொல்லாமல், நிலையால் அதுவேறுபாடு சொல்கிறது.

பாற்கடற்பெருமான்தான் அவதாரம் செய்வார் ; பரமபதப்பெருமான் அவதாரம் எடுப்பதில்லை. கம்பன் பாற்கடற்பெருமானே இராமன் எனச் சொல்வதற்கு இஃதே காரணமாகும். ஆனுல், பாற்கடற்பெருமான் உண்மையில் பரமபதப் பெருமானேயாதலால், இராம அவதாரத்திலும் கிருஷ்ண அவதாரத்திலும் தன் பரமபதத் தன்மையையும் விட்டுவிடாமல் உடன்கொண்டே அவதாரம் செய்துள்ளான் என்றும், இதனுலேயே இவ்விரு அவதாரமும் **பூரண அவதாரம்** எனச் சொல்லப்படுகிறதென்றும் ஏனைய அவதாரங்கள் **அம்ச அவதாரம்** எனச் சொல்லப்படுகிறதென்றும் ஆழ்வார்களைப் பின்பற்றிக் கம்பன் முடிவு செய்து, இவ்விருவகை நிலையையும் இராமன்மீது ஏற்றிப் பாடல்களை அமைத்திருக்கிறுன். இவ்வாறு வைணவ தத்துவத்தை ஆதாரமாக வைத்துக் கம்பன் இவ்விருவகை நிலையையும் ஒருசேரப் பாடியிருப்பதை நாம் அறிந்துகொண்டால் தான், அவன் பாடல்கள் முரணற்றவை என்பது இனிது புலனுகும். நம்மில் பலர் இவ்வுண்மையை அறியாமல், கம்பன் பாடல்களிலுள்ள முரணை அலுக்காமல் போலிச் சமாதானம் கூற முனைந்திருக்கின்றனர்.

வைணவமும் சமரசம் பேசும் ; சைவமும் சமரசம் பேசும். ஆனுல், நாம் நினைப்பது போன்ற சமரசத்தை அவ்விரு சமயமும் பேசுவதில்லை. உலகிலுள்ள சமயங்கள் அனைத்தும் படிமுறையாக இறைவன் திருவடியை அடைவிக்கும் என்றும், முடிவில் அவை அனைத்தும் சைவத்திலோ வைணவத்திலோ வந்து முடியும் என்றும், இவ்வகையில் எல்லாச் சமயங்களும் ஏற்றுக்கொள்ளத்தக்கவையே என்றும் அவ்விரு சமயமும் சொல்லும். இச்சமரசம் தலைமைத் தத்துவத்தை விட்டுவிடாமல் கூறும் சமரசமாகும். இதனை நாம் புரிந்துகொள்ளாமல் சைவ, வைணவ நூற்களில் வரும் சில சொற்றுெடர்களைக் கண்டதும், ''அவை எல்லா மதமும் ஒன்றே ; எம்மதமும் சம்மதமே எனக் கூறுகின்றன'' என்று தவருசப் பொருள் கொள்ளுகிறேம். கம்பன் பாடல்களில் காணப்படும் சமரசம், வைணவ சமயம் கூறும் சமரசமே அன்றி, நம்மில் பலர் நினைப்பது போன்ற சமரசம் அன்று.

இராமனைப்பற்றிக் கம்பன் கூறியிருப்பது அனைத்தும், முழுக்க முழுக்க வைணவ சமயத் தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டது என உணர்த்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழ்த் தொண்டத் தொகை

கம்பன் அடிப்பொடி

ஆதிமுதல் தமிழாசான் அகத்தியனார்க் கடியேன்
அரன்முனிவும் அஞ்சாத நக்கீரற் கடியேன் ;
ஓதுபுலன் அழுக்கற்ற உயர்கபிலற் கடியேன் ;
ஓங்குபுகழ் தாங்கிவளர் ஒண்பரணற் கடியேன் ;
தீதறுநல் சீத்தலையூர்ச் சாத்தனுக்கு மடியேன் ;
திருநிறைமாங் குடிமருதன் செழும்புலவற் கடியேன் ;
மூதறிஞன் மருதனிள நாகனுக்கு மடியேன் ;
மும்மைவளர் செந்தமிழ்த்தாய் முளரித்தாள் சரணே ! 1

காசிலிலக் கணந்தருதொல் காப்பியனுக் கடியேன் ;
காவிரிப்பூம் பட்டினத்துக் கண்ணனுக்கு மடியேன் ;
வீசுபுகழ் அவ்வையென்னும் மெய்ப்புலவர்க் கடியேன் ;
வியன்மதுரை வணிகனிள வேட்டனுக்கு மடியேன் ;
பேசரிய பெரும்புலவன் பேயனுக்கு மடியேன் ;
பிறங்கிறையே பரசுபெருந் தேவனுக்கு மடியேன் ;
மோசிவளர் கீரனென்னும் முதுபுலவற் கடியேன் ;
மும்மைவளர் செந்தமிழ்த்தாய் முளரித்தாள் சரணே ! 2

பாலைநயம் பாடுபெருங் கடுங்கோவுக் கடியேன் ;
படர்முல்லைக் கவியருள்நல் லுருத்திரனுக் கடியேன் .
ஆலிநெய்தல் திணைதருநல் லந்துவனுக் கடியேன் ;
அருமைபல தழுவுபிசிர் ஆந்தைக்கு மடியேன் ;
காலமுணர் கணியன்பூங் குன்றனுக்கு மடியேன் ;
காதனெறி கரைகண்ட அம்மூவற் கடியேன் ;
மூலங்கி ழானூர் முதுபுலவற் கடியேன் ;
மும்மைவளர் செந்தமிழ்த்தாய் முளரித்தாள் சரணே ! 3

வன்பரணன் தன்னோடு மாமூலற் கடியேன் ;
மாறோக்க நப்பசலை மணித்தாய்க்கு மடியேன் ;
நன்னாகன் நன்னாகை நல்வேட்டற் கடியேன் ;
நரிவெரூஉத் தலையனுடன் நக்கண்ணைக் கடியேன் ;

பொன்முடிக்கும் நச்செள்ளைப் புலவர்க்கு மடியேன் ;
பொத்திக்கும் நல்லோரம் போகிக்கு மடியேன் ;
முன்வள்ளல் ஆய்ப்பாடும் மோசிக்கு மடியேன் ;
மும்மைவளர் செந்தமிழ்த்தாய் முளரித்தாள் சரணே !

மதுரையளக் கர்மகனும் மள்ளனுக்கு மடியேன் ;
வளர்ஒக்கூர் மாசாத்தன் மாசாத்திக் கடியேன் ;
அதிமேதை அறிவுடைய நம்பிக்கு மடியேன் ;
அறுவையிள வேட்டனுடன் ஆந்தைச்கு மடியேன் ;
துதிபெறுநல் மருத்துவன்தா மோதரனுக் கடியேன் ;
துகளறுகல்லாடனெனும் தொல்லோனுக் கடியேன் ;
முதுகாக்கை பாடினியாம் மூதறிவுக் கடியேன் ;
மும்மைவளர் செந்தமிழ்த்தாய் முளரித்தாள் சரணே !

பெய்நேயம் பிறங்குகோப் பெருஞ்சோழற் கடியேன் ;
பெருங்குன்றூர் கிழார்,பேரி, சாத்தற்கு மடியேன்;
தொய்யாத பெரும்புலமைச் சயமனுக்கு மடியேன் ;
சொல்லுமிள நாகனுடன் உலோச்சற்கு மடியேன் ;
பொய்யாத வாய்மையிளந் திரையனுக்கு மடியேன் ;
புகழ்புரியும் சேந்தன்மகன் பூதனுக்கு மடியேன் ;
மொய்விரம் விளக்குமுயர் நெட்டிமைக்கு மடியேன் ;
மும்மைவளர் செந்தமிழ்த்தாய் முளரித்தாள் சரணே !

அரிசில்கிழார், குடவாய்க்கீ ரத்தற்கு மடியேன் ;
அரும்புலமைக் குமட்டூர்வாழ் கண்ணற்கு மடியேன் ;
பெருந்தலையூர்ச் சாத்தனிளங் கீரற்கு மடியேன் ;
பேசுமிடைக் காடனெனும் பெரியோனுக் கடியேன் ;
கருதுகாப்பி யாற்றூரின் காப்பியற்கு மடியேன் ;
கணக்காயன் தத்தனுடன் கந்தரத்தற் கடியேன் ;
முருகுவெறி பாடியகா மக்கண்ணிக் கடியேன் ;
மும்மைவளர் செந்தமிழ்த்தாய் முளரித்தாள் சரணே ! 7

செழுங்குமணற் போற்றுபெருஞ் சித்திரனுக் கடியேன் ;
நிதறுகோ வூர்கிழானென் செம்மலுக்கு மடியேன் ;
விழுமியபாத் தருவெள்ளி வீதிதனக் கடியேன் ;
மிளிர்தாயங் கண்ணனெனும் மெய்ப்புலவற் கடியேன் ;
பழுதிலறம் அருளுதிரு வள்ளுவற்கு மடியேன் ;
பண்கூத்தோ டியலளக்கும் இளங்கோவுக் கடியேன் ;
முழுமதியன் மேகலைசெய் சாத்தனுக்கு மடியேன் ;
மும்மைவளர் செந்தமிழ்த்தாய் முளரித்தாள் சரணே ! 8

அரனருளும் காரைக்கா லம்மைக்கும் அடியேன் ;
அருள்மாலே பாடுகின்ற ஆழ்வார்கட் கடியேன் ;
திருமுறைகள் ஏழுமருள் மூவர்க்கு மடியேன் ;
சிவபுராணம் மொழியுமணி வாசகற்கு மடியேன் ;
சரிநிகரில் கவிகம்பன் தனிப்புலவற் கடியேன் ;
தவநெறியால் மந்திரம்சொல் திருமூலற் கடியேன் ;
முருகுதவழ் திருத்தக்க முனிவனுக்கு மடியேன் ;
மும்மைவளர் செந்தமிழ்த்தாய் முளரித்தாள் சரணே ! 9

செம்புலமை நிறையாண்டாள் எனும்செல்விக் கடியேன் ;
திருத்தொண்டர் சீர்பரவும் சேக்கிழாற்கு மடியேன் ;
ஐம்புலன்வெல் பட்டினத்தின் அடிகட்கு மடியேன் ;
அருங்கவிஞன் செயங்கொண்டான் அருள்பரணிக் கடியேன் ;
பம்புபல சந்தமருள் அருணகிரிக் கடியேன் ;
பாரதம்செய் வில்லினும் பண்பாளற் கடியேன்
மொய்ம்புலமைத் தாய்மான முனிவற்கு மடியேன் ;
மும்மைவளர் செந்தமிழ்த்தாய் முளரித்தாள் சரணே ! 10

வழுத்துபுகழ் நாதமுனி மாதவனுக் கடியேன் ;
வளமிக்க ஈடருளும் நம்பிள்ளைக் கடியேன் ;
பழுத்தஉரை தருபெரிய வாச்சானுக் கடியேன் ;
பாவைசீர் பரவுமிரா மானுஜனுக் கடியேன் ;
செழித்தமுதல் விளக்கஞ்செய் பிள்ளானுக் கடியேன் ;
திகழ்வடக்குத் திருவீதிப் பிள்ளைக்கு மடியேன் ;
மொழிக்குமுதல் இடந்தருமால் அடியார்கட் கடியேன்;
மும்மைவளர் செந்தமிழ்த்தாய் முளரித்தாள் சரணே ! 11

மெய்கண்ட குரவனெனும் வியன்ஞானிக் கடியேன் ;
வீறுடைய அருணந்தி சிவனுக்கு மடியேன் ;
துய்யமன மறைஞான சம்பந்தற் கடியேன்;
சொல்லரிய கீர்த்திநிறை உமாபதிக்கு மடியேன் ;
அய்யமிலா துயர்கச்சி யப்பனுக்கு மடியேன் ;
அருங்கவிதோ லாமணித்தே வன்தனக்கு மடியேன் ;
மொய்யறிவுச் சிவஞான முனிவனுக்கு மடியேன் ;
மும்மைவளர் செந்தமிழ்த்தாய் முளரித்தாள் சரணே ! 12

துறைசைசிவப் பிரகாசத் தூயோனுக் கடியேன் ;
துகளறுநல் குமரகுரு பரஞானிக் கடியேன் ;
மறைமங்கை வருபிள்ளைப் பெருமாளுக் கடியேன் ;
மனோன்மணீயம் தருமனந்தைச் சுந்தரற்கு மடியேன் ;
இறைதிருவி ளையாடற் பரஞ்சோதிக் கடியேன் ;
இந்தியர்தம் மாகவியாம் பாரதிக்கு மடியேன் ;
முறைஞான வடலூரின் வள்ளலுக்கு மடியேன் ;
மும்மைவளர் செந்தமிழ்த்தாய் முளரித்தாள் சரணே ! 13

தென்களந்தை திகழவரு புகழேந்திக் கடியேன் ;
திரிகூட ராசப்பக் கவிராயற் கடியேன் ;
பின்வளர்மூ துரையவ்வைப் பிராட்டிக்கு மடியேன் ;
பெரும்புலமை அரசகேச ரிதனக்கு மடியேன் ;
மன்னகவி அதிவீர ராமனுக்கும் அடியேன் ;
மதிக்குமொரு துறைக்கோவை அமிர்தகவிக் கடியேன்;
முன்னைப்பி லக்கணம்செய் கால்டுவெல்லுக் கடியேன் ;
மும்மைவளர் செந்தமிழ்த்தாய் முளரித்தாள் சரணே ! 14

ஆன்றதமிழ் ஜியூபோப் பய்யருக்கு மடியேன் ;
அருள்சீறாப் புராணம்செய் உமறுக்கு மடியேன் ;
தேன்றுறுளிரும் குணங்குடியார் மஸ்தானுக் கடியேன் ;
தேசிகவி நாயகனும் கவிமணிக்கு மடியேன் ;

ஊன்றுகோல் உடையமாம்ப முக்கவிக்கு மடியேன் ;
உயர்பெஷ்ஷி எனும்வீர மாமுனிவற் கடியேன் ;
மூன்றுலாசெய் கவிஒட்டக் கூத்தனுக்கு மடியேன் ;
மும்மைவளர் செந்தமிழ்த்தாய் முளரித்தாள் சரணே ! 15

விந்தைமுக விலாசமுரை வில்லியப்பற் கடியேன் ;
மீனாட்சி சுந்தரநற் பிள்ளைக்கு மடியேன் ;
சந்தநிறை தமிழ்உதவு படிக்காசுக் கடியேன் ;
தமிழில்நகை தருங்காள மேகத்திற் கடியேன் ;
சிந்தைகவர் இரட்டையர்தம் செந்தமிழுக் கடியேன் ;
சேசுபுகழ் இசைகிருட்ண பிள்ளைக்கு மடியேன் ;
முந்தையர்நேர் பாரதிதா சன்தமிழுக் கடியேன் ;
மும்மைவளர் செந்தமிழ்த்தாய் முளரித்தாள் சரணே ! 16

பழுத்ததமிழ் உவேசா பருணிதற்கு மடியேன் ;
பதிப்புமுறைக் கொருவையா புரிதனக்கு மடியேன் ;
எழுத்துலகின் பரிதிதிரு வி.க.வுக் கடியேன் ;
எத்தாலும் உயர்வ.வெ. சு.வுக்கு மடியேன் ;
வழுத்துபுகழ் வி.கோ.சூ. மான்பனுக்கு மடியேன் ;
வ.உ.சி. எனமிளிரும் மன்னனுக்கு மடியேன் ;
முழுத்தமிழுக் குழைத்ததிரு மறைமலைக்கு மடியேன் ;
மும்மைவளர் செந்தமிழ்த்தாய் முளரித்தாள் சரணே ! 17

சிந்தைகவர் முத்தொள்ளா யிரம்செய்தோற் கடியேன் ;
திகழ்நந்திக் கலம்பகமீய் செழுங்கவிக்கு மடியேன் ;
நந்தனருள் கோபால கிருட்டினற்கு மடியேன் ;
நல்லருணா சலக்கவியின் நாடகத்திற் கடியேன் ;
கந்தகர்ணா முதகோடீச் வரனுக்கு மடியேன் ;
காவடிச்சிந் தருள்அண்ணா மலைரெட்டிக் கடியேன்;
முந்துகவி குஞ்சரனும் பாரதிக்கு மடியேன் ;
மும்மைவளர் செந்தமிழ்த்தாய் முளரித்தாள் சரணே ! 18

தன்னிகரில் லாமுத்துத் தாண்டவற்கு மடியேன் ;
தனிவளமார் பதந்தருபோன் னையனுக்கு மடியேன் ;
மன்னுபுகழ்ப் பாஸ்கரனும் சேதுபதிக் கடியேன் ;
வளர்பாண்டித் துரைஎன்னும் மகிபனுக்கு மடியேன் ;
பன்னரிய புரவலனும் பெத்தாச்சிக் கடியேன் ;
பண்ணுய்ந்த ஆபிரகாம் பண்டிதனுக் கடியேன் ;
முன்னுைப்பில் முனிவிபுலா னந்தனுக்கு மடியேன் ;
மும்மைவளர் செந்தமிழ்த்தாய் முளரித்தாள் சரணே ! 19

தன்னிகரில் சுப்பிரநல் தீபகவிக் கடியேன் ;
தமிழ்நடையைச் சித்திரஞ்செய் வராவுக் கடியேன் ;
பொன்னியினற் புதல்வனெனும் கல்கிக்கு மடியேன் ;
புகழ்புதுமைப் பித்தனெனும் சொ.வி.க்கு மடியேன் ;
பன்னுபல நாடகஞ்செய் பம்மலுக்கு மடியேன் ;
பண்டிதமா மணியான கதிரேசற் கடியேன் ;
முன்னுைத்த பெருவள்ளல் சடையப்பற் கடியேன் ;
மும்மைவளர் செந்தமிழ்த்தாய் முளரித்தாள் சரணே ! 20

அரசஞ்சண் முகப்பிள்ளை யாம்புலவற் கடியேன் ;
அருள்திருப்பா திரிப்புலியூர்ப் பெருஞானிக் கடியேன் ;
கரம்வலிய வள்ளிமலைக் கவின்புலவற் கடியேன் ;
கலித்தொகையைக் கொணரனந்த ராமையற் கடியேன் ;
தரமிகுந்த கோவடிவேல் தத்துவனுக் கடியேன் ;
சந்தமுதிர் தண்டபாணிச் சாமிக்கு மடியேன் ;
முரசறைந்த தமிழ்உமாம கேசற்கு மடியேன் ;
மும்மைவளர் செந்தமிழ்த்தாய் முளரித்தாள் சரணே ! 21

மாபுலவன் ராகவையங் காருக்கு மடியேன் ;
மதிக்கவிஞன் ஆம்பாம்பன் சாமிதனக் கடியேன் ;
தேமதுரத் தமிழ்வழங்கும் எல்லப்பற் கடியேன் ;
திருப்போரூர்ச் சிதம்பரநற் சாமிக்கு மடியேன் ;
ஆமுதல்தேர் ஆறுமுக நாவலற்கு மடியேன் ;
அருந்தமிழ்ஆய் கனகசபைப் பிள்ளைக்கு மடியேன் ;
மூவகையார் தமிழ்தெரிந்தார் எல்லார்க்கு மடியேன் ;
மும்மைவளர் செந்தமிழ்த்தாய் முளரித்தாள் சரணே ! 22

பொன்னன உரைசெயிளம் பூரணற்கு மடியேன் ;
புகழ்நச்சி ஞர்க்கினியப் புலவற்கு மடியேன் ;
இன்னமுதாய் உரைதருபே ராசிரியற் கடியேன் ;
இனியவுரை தருதெய்வச் சிலையாற்கு மடியேன் ;
நன்னயச்சே னவரைய நம்பிக்கு மடியேன் ;
நயவுரைசெய் அடியார்க்கு நல்லாற்கு மடியேன் ;
முன்னிறைய ஞரென்னும் முதுபுலவற் கடியேன் ;
மும்மைவளர் செந்தமிழ்த்தாய் முளரித்தாள் சரணே ! 23

வள்ளுவத்திற் குரைதெரித்த மணக்குடவற் கடியேன் ;
வளர்புலமை மிகுபரிமேல் அழகற்கு மடியேன் ;
தள்ளரிய இலக்கணம்செய் பவணந்திக் கடியேன் ;
தனியாப்பின் அருங்கலம்செய் சாகரனுக் கடியேன் ;
ஒள்ளலங்கா ரம்உதவும் உயர்தண்டிக் கடியேன் ;
ஒருபன்னீர் பாட்டியலை உபகரித்தோர்க் கடியேன் ;
மொள்ளவளர் கச்சியப்ப முனிவனுக்கு மடியேன் ;
மும்மைவளர் செந்தமிழ்த்தாய் முளரித்தாள் சரணே ! 24

ஆதிநிகன் டருளுதிவா கரமுனிவற் கடியேன் ;
அவன்சேயாய் வளர்ந்தமுனி பிங்கலனுக் கடியேன் ;
சோதிஎன மிளிர்சூடா மணிமுனிவற் கடியேன் ;
சொல்லையக ராதிதொகு இரேவணற்கு மடியேன் ;
மாதவத்துச் சிவஞான யோகிக்கு மடியேன் ;
வளஞ்சுரக்கும் கலைக்களஞ்சி யந்தொகுத்தார்க் கடியேன் ;
மூதறிவால் தொகைநூல்கள் கோத்தளித்தார்க் கடியேன் ;
மும்மைவளர் செந்தமிழ்த்தாய் முளரித்தாள் சரணே ! 25

ஓதுமிசைப் பண்கண்ட ஒண்கலைஞர்க் கடியேன் ;
ஒலியவைக்கு வரியமைத்த உயர்தபதிக் கடியேன் ;
நீதறுநல் பரதகலை தெரித்தவர்க்கு மடியேன் ;
திகழுபல மூலிகைஆய் சித்தர்கட்கு மடியேன் ;

வேதிமுதல் கலைநூல்கள் விரித்தார்க்கு மடியேன் ;
விண்ணோடு மண்ணளந்த வித்தகர்க்கு மடியேன் ;
மூதறிவால் கட்டடநூல் மொழிந்தார்க்கு மடியேன் ;
மும்மைவளர் செந்தமிழ்த்தாய் முளரித்தாள் சரணே ! 26

கம்பனைமுன் பதிவேங்க டாசலற்கு மடியேன் ;
காதலுடன் பின்பதித்தோர் எல்லார்க்கு மடியேன் ;
அம்புவியில் அதற்குரைசெய் அனைவர்க்கு மடியேன் ;
அதற்கென்றே உயிர்வாழ்ந்த ரசிகமணிக் கடியேன் ;
செம்புலவன் மோ.வே.கோ. திருவடிக்கு மடியேன் ;
செய்குதம்பிப் பாவலனும் செழும்புலவற் கடியேன் ;
மொய்ம்புநிறை செங்கல்வ ராயனுக்கு மடியேன் ;
மும்மைவளர் செந்தமிழ்த்தாய் முளரித்தாள் சரணே ; 27

பனையோலை எழுதிநூல் படித்தோர்கட் கடியேன் ;
பழுதிலவை அச்சிட்டுப் பரப்பினர்க்கு மடியேன் ;
பிணையவற்றை ஓதுவித்த பெரியோர்க்கு மடியேன் ;
பெருநூல்கள் காத்தவற்றைப் பேணினர்க்கு மடியேன் ;
கனைகடலும் கடந்துதமிழ் காட்டினர்க்கு மடியேன் ;
காலமெலாம் தமிழ்ப்பணியே கருதினர்க்கு மடியேன் ;
முனைநூல்கள் படனம்செய் மொய்ம்பினர்க்கு மடியேன் ;
மும்மைவளர் செந்தமிழ்த்தாய் முளரித்தாள் சரணே ; 28

வழுத்துமென்தாய் உயர்நாச்சி யம்மையார்க்கு மடியேன் ;
மதித்தந்தை திருசாமி நாதற்கு மடியேன் ;
எழுத்தறிவு நல்கரங்க வாத்தியார்க்கு மடியேன் ;
இலக்கியஞ்சொல் சிதம்பரப்பேர் ஏந்தலுக்கு மடியேன் ;
பழுத்ததமிழ் நிறைசேதுப் பிள்ளைக்கு மடியேன் ;
பலவழியில் ஊக்குவித்த ராஜாஜிக் கடியேன் ;
முழுத்தகுதிக் "குருதேவர்" தெ. பொ. மீக் கடியேன் ;
மும்மைவளர் செந்தமிழ்த்தாய் முளரித்தாள் சரணே ! 2

தொன்றுதொடு தமிழ்மரபைக் காப்பார்கட் கடியேன் ;
துயர்அகலத் தமிழமுதம் ஊட்டுவார்கட் கடியேன் ;
என்றுமுள தென்தமிழ்த்தாய்க் கெழில்முடியைச் சூட்டும்
எந்தைபிரான் கம்பன்தன் அடியார்க்கு மடியேன் ;
நின்றுவளர் கம்பன்அற நிலைகாப்பார்க் கடியேன் ;
நெடியதமிழ்த் தாய்கோயில் புரப்பார்கட் கடியேன் ;
முன்றுளிர்க்கும் இடுக்கணவை முரிப்பார்கட் கடியேன் ;
மும்மைவளர் செந்தமிழ்த்தாய் முளரித்தாள் சரணே! 30